விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 13 சனிக்கிழமை (29.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

புலம்பெயர் தமிழர்களிடமிருந்து ஜனாதிபதி மகிந்தவை காப்பேன்

மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெற்றால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்பத்தை புலம்பெயர் தமிழர்களிடமிருந்து பாதுகாப்பேன் என எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச போர்க் குற்ற நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல இடமளிக்க போவதில்லை என எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் ஜனாதிபதி

24 ஆம் பக்கம் பார்க்க....

கூட்டமைப்பின் ஆதரவு ஒருபோதும் தேவையில்லை

அமைச்சர் அனுர தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை பெறவேண்டிய தேவை எமக்கில்லை.

இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த எண்ணவுமில்லை. அங்குள்ள மக்கள் எமக்கே வாக்களிப்பர் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின பொதுச் செயலாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு எமக்கு தேவை

24 ஆம் பக்கம் பார்க்க....

அஸ்வர் எம்.பி ராஜினாமா!

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம் அஸ்வர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தன்னுடைய இராஜினாமா கடிதத்தை அவர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க திஸா நாயக்கவிடம் கையளித்துள்ளார்.

இப்பதவிக்கு ஜனாதிபதியின் மிக நெருங்கிய உறவினர் ஒருவரை நியமிக்கலாம் என நம்பப்படுகின்

24 ஆம் பக்கம் பார்க்க....

சொன்னதைச் செய்வார் ஜனாதிபதி மகிந்த!

மேர்வின் சில்வா புகழாரம்

(கொழும்பு)

வெள்ளிக்கிழமை மகனுக்கு பிணையில் விடுதலை பெற்று தருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னிடம் உறுதியளித்ததாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்கள இணையத்தள ஊடகம் ஒன்றிடம் அவர் நேற்று இதனை கூறியுள்ளார்.

பிரித்தானிய பிரஜை மற்றும்

24 ஆம் பக்கம் பார்க்க....

நாட்டின் பௌத்த சமூகம் மைத்திரிபாலவுடன் இணையும்

அத்துரலியே ரத்ன தேரர் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கையின் பௌத்த சக்திகள் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து எதிர்கால தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவதை அனைவரும் காண முடியும் என ஜாதிக ஹெல உறுமயவின நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

பொது பல சேனா அமைப்பு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ரத்ன தேரர், எந்த அமைப்பு யாரை ஆதரித்தாலும் இலங்கை பௌத்த சமூகம் தமது

24 ஆம் பக்கம் பார்க்க....

மேலும் இரண்டு அமைச்சர்கள் எதிர்க்கட்சிக்கு தாவ தயாராம்

(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்துள்ள இரு அமைச்சர்கள் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் அவர்கள் எந்த நேரத்திலும் அரசாங்கத்தில் இருந்து வெளியேறலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர்களுடன் மிக பிரபலமான இரண்டு பெண் மாகாண சபை உறுப்பினர்களும் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்க உள்ளதாக உயர் மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தில் இருந்து வெளியேற உள்ள இரண்டு அமைச்சர்களில் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவினால் 1994 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தின் ஊடாக அரசியலுக்கு அழைத்து வரப்பட்டவர். குறித்த அமைச்சர் குமாரதுங்க குடும்பத்தின் நெருங்கிய உறவினர் எனவும் கூறப்ப

24 ஆம் பக்கம் பார்க்க....

சின்னமின்றி முதலாவது கூட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் சின்னம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய நேற்றுக் காலை வெளிநாட்டுக்கு சென்று டிசம்பர் முதலாம் திகதியன்றே நாடு திரும்பவுள்ளமையால் இந்த தாமதம்

24 ஆம் பக்கம் பார்க்க....

மகிந்தவை தோற்கடிக்க எதுவும் செய்யத் தயார்!

எம்.பி லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியை தோற்கடிக்க செயயக்கூடிய அனைத்தையும் செய்யத் தயார் என ஜே.வி.பியின் மாகாண சபை உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டியது மிகவும்

24 ஆம் பக்கம் பார்க்க....

பொது எதிரணியின் ஒப்பந்தம் திங்களன்று கைச்சாத்து

(கொழும்பு)

பொது எதிரணி கட்சிகள் மற்றும் அமைப்புகள் மத்தியிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு விகாரமகாதேவி பூங்கா திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

வண. சோபித தேரர், பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, எதிர கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் உட்பட கையெழுத்திடும் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

24 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

INVITATION FOR BID
MUNICIPAL COUNCIL JAFFNA

1. The Commissioner, Department Procurement Committee on behalf of the Jaffna Municipal Council, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Qualifications requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5).
5. Interested bidders may obtain further information from **Works Engineer's Office, Jaffna Municipal Council (T.No: 021-2222019 , FAX - 021-2222334)** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 16.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Works Engineer's Office, Jaffna Municipal Council from 02.12.2014 until 09.12.2014 from 9.00 hrs to 14.00 hrs upon payment of a non-refundable fees of Rs.2,000.00**. The method of payment should be by cash.
7. Bids shall be delivered or sent by registered post to the **Commissioner, Jaffna Municipal Council on or before 14.30 hrs on 10.12.2014** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

Bid No	Description of Work	Estimated Cost /(Rs in million)	Contract Period	Required Grade	Required Bid Security	
					Security Amount	Valid Period
JMC/WD/ GF/2014/6	Construction of Basket Ball Court at Old Park, Jaffna	2.46	45 days	C8 or above (High way construction	25,000.00	91 days (till 11.03. 2015)

Commissioner,
Municipal Council,
Jaffna.

(சி-9201)

தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணத்துக்கும் மூளாய்க்கும்இடைப்பட்ட பகுதியில் கடவுளுக்கு என்று நேர்த்தி வைக்கப்பட்டு வைத்திருந்த கல் பதித்த மோதிரம் ஒன்று தவறவிடப்பட்டுள்ளளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு: **0714286837** (8466)

வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்

காலை 9.00 - பி.ப 1.00

கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117

(8404)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



நிர்மல்ராஜ் அனுஜா
பெற்ற புள்ளி - 153
யா/புனித ஜோன் பொஸ்கோ

Best Wishes

கமல்ராஜ் ஆகாஸ்
பெற்ற புள்ளி - 130
யா/மத்திய கல்லூரி

2014 ஆம் ஆண்டு 5 ஆம் வருட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற கமல்ராஜ் ஆகாஸ், நிர்மல்ராஜ் அனுஜா ஆகிய இருவரையும் வாழ்த்துவதுடன் இவர்கள் மேன்மேலும் நிறைந்த கல்விச் செல்வத்தைப் பெற்று உயர் பதவியை அடைய வாழ்த்துவதுடன் அவருக்கு கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கௌதமி வெதுப்பகம்
A.P. லேன், யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர் :
அம்மா, அப்பா, பெரியப்பா, பெரியம்மா, தாத்தா, பாட்டி

(8474)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

வீடு விற்பனைக்கு

நாவாந்துறை அபூபக்கர் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
0779955823

(8470)

வேலையாட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாட்கள்தேவை. மாத வேதனமாக **21,000/=** வழங்கப்படும். இலவச தங்குமிட வசதிகள் உண்டு. வயது 18 தொடக்கம் 25 வரை ஆண்கள் மட்டும்.

தொடர்பு: **KINGS ELECTRONICS**
NO. 11-A, Stanley Road, Jaffna.
T.P: 021 222 3857

(8473)

இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

நாய்க்கான கோழியிறைச்சி விற்பனைக்குண்டு 190/-
'சிவப்புகரு கூடிய முட்டை பெற்றுக் கொள்ளலாம்'

இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

மரண அறிவித்தல்

சிவஞானம் கிரிஷாந்

தாமோதரம்பிள்ளை வீதி, அரசடி சங்கத்தானை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பாரீஸ் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் கிரிஷாந் அவர்கள் 28.11.2014 அன்று பிரான்ஸில் அகால மரணமடைந்துள்ளார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இல.58, ஸ்ரீ மனோன்மணி
அம்மன் வீதி,
அம்பாள்குளம், கிளிநொச்சி.

தகவல் :
குடும்பத்தினர்

(சி-9202)

மணி நலன் பாராட்டு

கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி

திருமதி
தர்மராசா கோகுலராணி

29.11.2014 இல் அறுபதாவது
அகவையில் 37 வருடங்களாய்,
தன்னலமற்ற ஆசிரியர் பணியில்
தளராத நெஞ்சத்துடன்
ஈடுபட்டு – எம் கல்லூரியில்
17 வருடங்கள் கல்விப்
பயிர் வளர்த்து
மணிவிழாக் காணும் – எங்கள்
மூத்த ஆசானை மனமுவந்து
வாழ்த்துகின்றோம்
வாழ்க வளமுடன்

அதிபர், ஆசிரியர், ஊழியர்
நலன்புரிக்கழகம்,
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி

(8455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்நுட்பவியலாளர்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு டிஷ் அன்ரனா பிட்டிங்க்ஸ் செய்ய தெரிந்த Technicians Helper,Salesman மற்றும் Receiver repairing செய்ய தெரிந்த Technicians தேவை. திறமைக்கு தகுந்த சம்பளம் மற்றும் இதர கொடுப் பனவுகள் கிடைக்கும். தங்குமிடம், உணவு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். (சி-9196)

Kumar:- 077-7710 785

விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (துனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப் பாளர், பெக்கிங், 18-55 வயதான ஆண்,பெண் தேவை. சம்பளம் 18,000/= -35,000/= வரை. தங்குமிடம், உணவு பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

(076-6398 366) (846)

வெளிக்கள நிலையம், தொண்டைமானாறு

FWC

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் வருபாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற இருப்பதனால் பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் தங்கள் பிரேரணைகளை செயலாளர், தொண்டைமானாறு, வெளிக்கள நிலையம், வைத்தீஸ்வரா கல்லூரி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு 15.12.2014 இற்குமுன்னர் அனுப்பி வைக்கவும்.

(846) செயலாளர், தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்.

இலங்கையின் உதவியுடனேயே தமிழகத்தை வேவு பார்த்தேன்

பாகிஸ்தான் உளவாளி ஒப்புதல்

(கொழும்பு)

இலங்கை உதவியுடன் தமிழகத்தை உளவு பார்த்ததாகவும், இந்திய இறையாண்மை, பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் போலி நாணயத்தாள்களைப் புழக்கத்தில் விட்டதாகவும் பாகிஸ்தான் உளவாளி ஜாகீர் உசேன் நீதிபதி முன்பு ஒப்புக்கொண்டுள்ளார்.

பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.எஸ் உளவாளியான ஜாகீர் உசேனை தேசிய புலனாய்வு பிரிவு பொலிஸார் கடந்த ஆண்டு கைது செய்தனர். மேலும் ஜாகீரின் கூட்டாளிகளான முகமது சலீம், சிவபாலன், ரபீக் ஆகிய 3 பேரையும் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் ஜாகீர்உசேன், சிவபாலன், முகமது சலீம் ஆகிய 3பேர் மீதும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இவர்கள் மீதான வழக்கு விசாரணை பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் நடைபெற்றது. உளவாளிகள் 3 பேரும் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நீதிபதி மோனி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அப்போது, தமிழகத்தை உளவு பார்த்ததாக சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் குறித்து நீதிபதி மோனி கேட்டார். அதற்கு ஜாகீர் உசேன், தம்மீது சாட்டப்பட்டு உள்ள குற்றத்தை ஒப்புக்கொள்வதாக நீதிபதி முன்னிலையில் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் அமீர் சுபேர் சித்திக், பாஸ் என்ற ஷா மற்றும் மலேசியாவில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.எஸ் உளவாளிகள் முகமது சுலைமான், முஸ்லி ஆகியோரது வழிகாட்டுதலில் இந்திய இறையாண்மைக்கு எதிராக செயற்படும் வகையில் 2 இலட்சத்து 53 ஆயிரம் இந்திய ரூபாய் போலி நாணயத் தாள்களை தமிழகத்தில் புழக்கத்தில் விடுவதன் மூலம் இந்திய பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் குற்றம் என்று தெரிந்தே அதனை செய்ததாகவும் சந்தேக நபர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், இந்திய இறையாண்மை மற்றும் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் செயல்களில் ஈடுபட்டதாகவும் நீதிபதி முன்னிலையில் ஜாகீர் உசேன் ஒப்புக்கொண்டார். இதையடுத்து, இவர்கள் மீதான அடுத்த கட்ட விசாரணை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்தி வைத்து நீதிபதி உத்தரவிட்டார். பின்னர் 3 பேரையும் பொலிஸார் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மீண்டும் புழல் சிறைக்கு அழைத்துச் சென்றனர். என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

விசேட சலுகை

வலம்புரியின் 15 ஆவது ஆண்டு நிறைவினையொட்டி எமது வாடிக்கையாளர்கள் 01.11.2014 முதல் 31.12.2014 வரை மாபெரும் விசேட விலைக் கழிவுடன் தங்களது விளம்பரங்களை எமது பத்திரிகையில் பிரசுரிக்க முடியும் என்பதனை அறியத் தருகின்றோம்.

முழுப்பக்கம், அரைப்பக்கங்களிற்கு மாத்திரமே இவ் விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு:- 021 2217 603
021 5671 532
Valampuriijaffna@gmail.com

அரசாங்க சொத்துக்களை ஜனாதிபதி தேர்தலுக்குப் பயன்படுத்த வேண்டாம்

மஹிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச சொத்துக்களை பயன்படுத்தக்கூடாது என்றும் அரச ஊழியர்கள் மற்றும் சேவையாளர்களுக்கு நியமனம் வழங்குதல், பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் மட்டுப்படுத்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலங்களில் அரச சொத்துக்களை பயன்படுத்துவதை தடுக்கும் நோக்கில் விடுத்துள்ள விசேட சுற்றறிக்கையிலேயே தேர்தல்கள் ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், திணைக்கள தலைமை அதிகாரிகள், அரச கூட்டுத்தாபன மற்றும் யாப்பு சபை தலைவர்கள் ஆகியோருக்கு இந்த சுற்றறிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச வாகனங்கள், அலுவலகங்கள், கட்டடங்கள் போன்றவற்றை தேர்தல் பிரசாரத்திற்கு பயன்படுத்துவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அரச ஊழியர்கள் மற்றும் சேவையாளர்களுக்கு நியமனம் வழங்குதல், பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் மட்டுப்படுத்தல் தடை செய்யப்பட்டுள்ளதாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரச ஊழியர்கள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என தேர்தல்கள் ஆணையாளர் தனது சுற்றறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான அரசாங்க உயரதிகாரிகள் ஏற்கனவே தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

இராசி பலன்

29.11.2014
(கார்த்திகை 13, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சப்தமி காலை 6.37 மணிவரை
அட்டமி பின்னிரவு 4.18 மணிவரை
அவிட்டம் காலை 7.04 மணிவரை
சதயம் பின்னிரவு 5.27 மணிவரை

வளவன்

மீனம் — உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேக நலன் பாதிக்கப்படலாம், தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

மேடம் — வருமானம் அதிகரிக்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

இடபம் — எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், நிர்வாகத் திறமை வெளிப்படும் நாள் அந்நியர் உதவியுண்டு.

மிதுனம் — கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், திடீர் பயணங்கள் கைகூடும்.

கடகம் — உதவுவதாகச் சொன்ன உறவினர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தில சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், தேக நலனில் கவனம் தேவை.

சிம்மம் — கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

கன்னி — எதிரிகள் உதிரியாகும் நாள், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், உங்களின் கருத்தை பலரும் கேட்டு நடப்பர், செய்தொழில் மேன்மையுண்டு.

துலாம் — பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, எடுத்த காரியங்களில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம்.

விருச்சிகம் — வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செலவுகள் கூடும் நாள்.

தனுசு — மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வாக்கு மேன்மையுண்டு, புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

மகரம் — சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

கும்பம் — விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியம் சீராக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் சமூகம் தொலைக்கும் சமூகமயமாதல்

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பரிசளிப்பு, நிறுவுனர் நினைவு தினத்தில் ஆற்றிய நினைவுப் பேருரை...

...பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஒற்றைப் பெற்றோருடன் வாழும் பிள்ளைகள், உழைப்பாளிகளாக இருக்க வேண்டிய கட்டாயத்திலுள்ள பிள்ளைகள், போரின் தாக்கத்தினால் உடல் உளப் பாதிப்புக்குள்ளான பிள்ளைகள் என பலதரப்பட்ட தேவைகளையுடைய பிள்ளைகளைச் சந்திக்கும் ஆசிரியர்கள் தம்மை பெற்றோர்களாக உருமாற்றம் செய்யும் செயன்முறைக்கு தயார் இல்லையெனில் அவர்கள் தங்கள் ஆசிரியத்துவத்தில் தோற்றுப் போய்விடுவார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

பள்ளிக்கு பசியுடன் வரும் பிள்ளைக்கு பாடம் புரியும் என எதிர்பார்ப்பது அபத்தமானது. அது போன்று இந்தப் பிள்ளைகளுக்கு எது சொன்னாலும் விளங்காது எனும் முடிவுக்கு வருதலும் ஆபத்தானது. இந்த இரட்டை நிலையை இயல்பாக கையாளக்கூடிய வல்லமைமிக்கவராக ஆசிரியர் தன்னை தகவமைத்துக்கொள்ளவேண்டும்.

அரசின் கல்விக்கொள்கைகளின் படியான ஆசிரியத்துவம் என்பது எந்த சமூகச் சூழ்நிலைக்கும் இயைந்து வரும் திறனற்றது என்பது கசப்பான உண்மை. பொதுமைப்பாடான ஒரு சிந்தனைத் தளத்தில் உருவாக்கப்பட்ட கொள்கைகள் எப்போதும் நூற்றுக்கு நூறு வீதம் எல்லாவற்றுக்கும் பொருந்தி வரும் என நினைப்பதும் முட்டாள் தனமானது.

ஒரு ஆசிரியன் தான் கற்பிக்கும் பாடசாலைச் சூழல் பாடசாலை அமைந்துள்ள சமூகச் சூழல் என்பவற்றுக்கு ஏற்ப தன்னை உருமாற்றிக் கொள்ளுவது மிக அவசியமானது. இவ் உருமாற்றத்துக்கு தயார் இல்லாத, உருமாற்றத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கற்ற ஆசிரியர்களால் தம் ஆசிரியத்துவத்தை சிறப்பாக ஆற்ற முடியாது போவதுடன் தாமும் உளநெருக்கடிகளுக்கு வீணாக முகம் கொடுக்க வேண்டியவர்களாகின்றார்கள். குறிப்பாக அதிகஸ்ட பிரதேசங்கள் என அடையாளப்படுத்தப்படும் பிரதேசங்களில் ஆசிரியத் தொழில் புரியும் நண்பர்கள் பலரிடம் இதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. அதேவேளை அப்பகுதிகளில் மிகச் சிறப்பாக தம்மை உருமாற்றிக் கொண்டும் தாமும் மகிழ்ச்சியாகவிருப்பதுடன் தமது கற்பித்தல் சூழலையும் மகிழ்வாக வைத்திருக்கும் பல ஆசிரியர்களையும் நாம் காண்கின்றோம்.

"தக்கன பிழைக்கும் தகாதன மடியும்" எனும் டாவினின் கூர்ப்புக் கொள்கையின் தத்துவம் ஆசிரியத்துவத்துக்கு மிகப்பொருந்தும். சமூகச் சூழ்நிலைக்கேற்ப தம்மை உருமாற்றம் செய்துகொள்ளும் ஆசிரியர்கள் இயல்பாக பிழைத்துக் கொள்கின்றார்கள். தமது ஆசிரியத்துவத்தின் அடிப்படை நோக்கங்களையும் அவர்களால் எட்ட முடிவதுடன் தம்மைச் சார்ந்திருக்கும் பாடசாலைச் சமூகத்துக்கும் பயன்மிக்கவர்களாக இருக்கின்றார்கள்.

நம்மில் பலர் நமக்கு இயைபற்ற சூழலை ஏற்றுக்கொள்ள தயாரற்றவர்களாகவே இருக்கின்றோம். நமக்கு ஏற்றபடி சூழலை மாற்றியமைக்க முயற்சிக்கின்றோமே தவிர சூழலுக்கு ஏற்றவிதத்தில் நம்மை மாற்றிக்கொள்ள தயாராகவில்லை. நமக்கேற்ப சூழலை மாற்றுவது எனபது அனேகமான வேளைகளில் தோல்வியிலேயே முடிவடைகின்றது. எனவே, நாம்தான் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். இந்த மாற்றத்துக்கு முதன்மைத் தேவை மனப பாங்கு நிலையிலான மாற்றம்.

மனப்பாங்கில் மாற்றம்

மனப்பாங்கு என்பது ஒரு மனிதனின் வாழ்வில் மிக முக்கியமானது. இதனை ஒரு சிறிய உதாரணம் மூலம் இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும். காட்டு விலங்குகளின் அரசனாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது சிங்கம். ஆனால் காட்டிலுள்ள பலமான விலங்கோ அல்லது அழகான விலங்கோ அல்லது உயரமான விலங்கோ அல்லது மிக வேகமாக ஓடக்கூடிய விலங்கோ அல்லது நுண்ணறிவான தந்திரமான விலங்கோ சிங்கம் கிடையாது. நம்மில் பலர் உயர்வாக நினைக்கும் இந்தத் தகுதிகள் எதுவும் கொண்டிராத சிங்கம் எப்படி காட்டுக்கு அரசனாக விருக்கின்றது என்பது ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. ஆய்வின் முடிவு சிங்கம் மற்றைய விலங்குகளை விட மனப்பாங்கில் வேறுபட்டதாக விருப்பதே அது அரசனாக இருக்க காரணம் என அறியப்பட்டது. சிங்கத்தின் முக்கிய இயல்பே, சூழலை நன்கு அவதானித்து அதற்கேற்ப தன்னை தயார்ப்படுத்திக் கொள்வதுதான்.

சிங்கம் பத்து அடி தூரம் நடந்தால் ஒரு தடவை நின்று நிதானிக்கும். தான் வந்த பாதையும் செல்கின்ற பாதையும் சரியா என்பதை உறுதிசெய்து கொள்ளும். பிடரி மயிரை சிலிர்த்து பின்னுக்கும் பக்கமாகவும் திரும்பி நோக்கும். இதனைத்தான் "அரிமா நோக்கு" எனத் தமிழில் சொல்கின்றார்கள். இந்த சூழலை அவதானித்து அடியெடுத்து வைக்கும் அரிமா நோக்குத்தான் சிங்கத்தை காட்டின் அரசனாக தக்கவைத்துள்ளது.

இவ் உதாரணத்தின் மூலம் நாம ஒரு உண்மையை விளங்கிக்கொள்ள முடியும். மற்றவர்களை விட நம்மை வேறுபடுத்தி உயர்த்தும் இயல்பு நம் மனப்பாங்கும் சூழலுக்கு ஏற்ப நம்மை மாற்றியமைத்துக்கொள்ளும் பண்பும்தான்.

எனவே ஆசிரியர்கள் முதலில் செய்ய வேண்டியது தாம் கற்பிக்கும் சமூகச் சூழலுக்கு ஏற்ற விதத்தில் தம்மை உருமாற்றிக்கொள்ளும்



இ.சர்வேஸ்வரா
உதவிப்பதிவாளர்
மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

மனப்பாங்கினை உருவாக்கிக கொள்வதுதான்.

சிலர் இதனைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடும். அதாவது பிரச்சினைகளை கண்டு ஒதுங்கியிருத்தல்தான் சூழலுக்கு ஏற்ப தம்மை தகவமைத்தல் என.

அத்தகைய மனப்பாங்கை நாம் முதலில் மாற்றிக்கொள்ள வேண்டும். மனப்பாங்கில் ஏற்படும் மாற்றம் மற்றைய விடயங்களை இலகுவாக மாற்றியமைத்து விடுகின்றது. மற்றவர்களும் மாணவர்களும் தமக்கு ஏற்ற விதத்தில் மாற வேண்டும் எனும் எதிர்பார்ப்பினை ஆசிரியர்கள் கைவிடுவது தான் முதலாவதாக செய்யத்தக்க மனப்பாங்கு மாற்றம்.

(தொடரும்)

அதிசய உலகம்

கடந்த வருடம் நவம்பர் மாதமளவில் கடலடியில் படத்தில் காட்டப்படும் புதியவகை ஜீன் இனம் இனங்காணப்பட்டது.

சுமார் 2000-6500 அடி ஆழத்திற்கு இடப்பட்ட நிலையில் வாழும் மீன்கள் இவை என்பதால் இவற்றைப்பற்றி இதுவரை மனிதர்களுக்கு தெரியாதிருந்துள்ளது.

ஆர்ட்டிக் சமுத்திரத்தில் படகொண்டில் மாட்டிக்கொண்ட இந்த மீனை ஆராய்ந்ததில் இவை சுமார் 350 மில்லியன் வருடங்களாக பூமியில் வாழ்வதாக ஊகிக்கப்படுகிறது. (பூமியின் வயது 454 மில்லியன் வருடங்கள் என கணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.)

முதலில் "goblin shark -(கொப்லின் சுறா)" வகையின் ஒரு பிரிவு என கருதப்பட்டது.

எனினும் மரபணு ஆய்வில், இது ஒரு புதுவகை மீன் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (இங்கு பூமியின் வயது 454 மில்லியன் வருடங்கள் என கணிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.)

கத்தி போன்ற கூரிய மூக்கை உடையவை இவை என்பதால் "Knifenose Chimaera" என பெயரிடப்பட்டுள்ளது.

இது Rhinochimaeridae எனும் வகையைச் சேர்ந்ததாக கருதுகிறார்கள். Rhinochimaeridae எனும் சொல், கிரேக்க மொழியில் "மூக்கு" மற்றும் "அரக்கன்" எனும் அர்த்தத்தை ஒன்றினைக்கும் சொல்லாகும்!

உலகின் அனைத்து சமுத்திரத்திலும் 2000-6500 அடி வரைக்கும் இவை [illegible] பகுதியில் இந்த இன மீன்கள் பல இருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகின்றார்கள்.

சுமைப்போம் சுவைப்போம்

மீன் குழம்பு

தேவையான பொருட்கள்:-

மீன்- 1/2 கிலோ
சின்ன வெங்காயம்- 100 கிராம்
தக்காளி- 150 கிராம்
பூண்டு - 50 கிராம்
செ.மிளகாய்-10
மல்லி- 1 தே.கரண்டி
வெந்தயம்- 2 ஸ்பூன்
மஞ்சள் தூள்-1/4 ஸ்பூன்
சீரகம்-2 ஸ்பூன்
மிளகு- 1/4 ஸ்பூன்
புளி- எலுமிச்சை அளவு
நல்லெண்ணெய்- தேவையான அளவு
கறிவேப்பிலை
சிறிது
கடுகு சிறிது
உப்பு-தேவையான அளவு

செய்முறை:-

வெங்காயம், தக்காளியை பொடியாக நறுக்கிக்கொள்ளவும். பூண்டை மைய தட்டி வைக்கவும். பாத்திரத்தில் எண்ணெய் விட்டு சீரகம், மிளகு, மல்லி, மிளகாய், பூண்டு, ஆகியவற்றை வறுத்து அரைத்துக் கொள்ளவும்.

புளியை கரைத்து வடிகட்டி வைக்கவும். கனமான பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை போட்டு தாளித்து அதில் நறுக்கிய வெங்காயத்தை கொட்டி சிறிது உப்பு சேர்த்து வதக்கி, அரைத்த மசாலாவை கலந்து வதக்கி, புளி நீரை விட்டு தேவையான அளவு தண்ணீர் சேர்த்து, உப்பு சேர்த்து 15 நிமிடம் கொதிக்க விடவும். பின்னர் கழுவி சுத்தம் செய்த மீன் துண்டுகளை போட்டு கொதிக்க விட்டு இறக்கி மூடிவிடவும். சிறிது நேரம் கழித்து பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தை அமைச்சர்கள் தகாதவார்த்தைகளால் திட்டினர்

சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள் அரசாங்கத்தை கடுமையான தகாத வார்த்தைகளினால் திட்டித் தீரப்பதாக முன்னாள் அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தில் அதிகளவில் அமைச்சர்கள் அங்கம் வகித்து வருவதாகத் தெரிவித்து மக்கள் கடுமையான வார்த்தைகளால் அமைச்சர்களை திட்டுகின்றனர். குறை சொல்கின்றனர்.

கடந்த நான்கு ஆண்டு கால ஆட்சியின் போது ஒரு சில வர்த்தகர்கள் இந்த அரசாங்கத்தை பணயமாக பிடித்துக் கொண்டுள்ளமையை நாம் புரிந்து கொண்டோம்.

அரசாங்கத்திற்கு உள்ளேயும் ஒன்றாக இணைந்தும் நாம் இதற்கு எதிராக போராட்டம் நடத்தினோம். பலன் எதுவும் கிடைக்கவில்லை.

இந்த இழிவான செயல்களில் ஈடுபடுவதனை அரசாங்கம் நிறுத்திக் கொள்ளத் தயாரில்லை. எனவே நாம் அரசாங்கத்தை விட்டு வெளியேறினோம்.

மக்களின் சுயகௌரவத்தை நிலைநாட்ட நாம் ஓர் மனிதாபிமான மீட்புப் பணியொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்தோம்.

வருடத்திற்கு ஆறு மாதம் மட்டுமே பெரும் எண்ணிக்கையிலான அமைச்சர்களின் அமைச்சுக்கள் இயங்குகின்றன.

சிலரின் அமைச்சுக்கள் மட்டும் வருடம் முழுவதும் இயங்குகின்றன. ஏனையவர்களின் அமைச்சுக்களை நடத்திச் செல்ல பணமில்லை.

அமைச்சர் ஒருவருக்கு துறைசார் திணைக்களமொன்றின் தலைவரை நியமிக்கக் கூட அதிகாரமில்லை. இந்த அமைச்சர்களை அரசாங்கத்தை விட்டு வெளியேற்ற தூதரகங்களின் பணத்தை செலவிட வேண்டியதில்லை.

பெரும் எண்ணிக்கையிலான அமைச்சர்கள் அரசாங்கத்தை கடுமையான தகாத வார்த்தையில் திட்டித் தீர்க்கின்றனர்.

அமைச்சர்கள் சாகாமல் செத்துக் கொண்டே அமைச்சுப் பதவிகளை வகித்து வருகின்றனர் என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமய கட்சியின் விசேட கூட்டத்தில் அவர் இந்தக் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

நாட்டினை மீட்டெடுக்கக்கூடிய வேட்பாளரை நிறுத்தவில்லை

ஐ.தே.கவை நோக்கி பிரதமர் ஜயரட்ன கிண்டல்

நாட்டை மீட்டெடுக்க ஐக்கிய தேசியக் கட்சி சரியான வேட்பாளர் ஒருவரை நிறுத்தவில்லை என பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் இதனைத் தெரிவித்தார்.

நாட்டை மீட்கக் கூடிய ஒர் வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்தத் தவறியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்த சாத்தியம் இருந்த போதிலும், பொது வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் கட்சியின் வீழ்ச்சியே வெளிப்பட்டுள்ளது. நாட்டின் முன்னேற்றத்திற்கு சரியான ஆட்சியாளர் ஒருவர் அவசியம்.

அண்மைய வரலாற்றில் இதற்கு மிகவும் பொருத்தமான தலைவர் மகிந்த ராஜபக்ஷவேயாகும்.

மகிந்தவுடன் போட்டியிடக் கூடிய தலைவர் கூட இனனமும் உருவாகவில்லை. கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் போட்டி போட வலுவான எதிர்க்கட்சி இருந்தது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி இன்று பலவீனமடைந்துள்ளது.

இலங்கையை இரண்டாக பிளவடையச் செய்ய வேண்டுமென சில நாடுகள் முயற்சித்து வருகின்றன.

மகிந்த ராஜபக்ஷவை பணி நீக்கி கைப்பொம்மை ஆட்சியொன்றை உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது என பிரதமர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பிரதமர் வெளியிட்டு வரும் சில கருத்துக்கள் முன்னுக்கு பின் முரணான வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாப்பரசர் முதலாம் பிரான்ஸிஸ் இலங்கை விஜயம் செய்யும் போது புதிய ஜனாதிபதியொருவர் பதவி வகிப்பார் என குறிப்பிட்டிருந்தார்.

தற்போது நாட்டை மீட்டெடுக்கக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்தவில்லை என தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கருத்துக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவா என்பது புரியவில்லை என ஆளும் கட்சியினர் விசனம் வெளியிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

உயர் நீதிமன்றத்தின் சட்டவிளக்கத்தில் சட்டமொழிக்கு பதிலாக அரசியல் மொழி

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மூன்றாம் முறையும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு நீதியடிப்படையில் தடையில்லை என்று உயர்நீதிமன்றம் வழங்கிய சட்டவிளக்கத்தில் சட்டமொழிக்கு பதிலாக அரசியல் மொழி எழுதப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஜனநாயகத்துக்கான சட்டத்தரணிகள் மற்றும் சட்டத்தரணிகளின் கூட்டு என்பன இந்தக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளன. இந்த சட்ட விளக்கம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட போதும் அதனை நாடாளுமன்றம் பகிரங்கப்படுத்தவில்லை. எனினும் ஐக்கிய தேசியக்கட்சி அதனை சூசகமாக பெற்று நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தியது. இதனையடுத்தே இரண்டு சட்டத்தரணிகள் சங்கங்களும் தமது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளன.

இதன்அடிப்படையில் ஜனாதிபதி சட்டத்தையும் நீதித்துறையையும் பணயம் வைத்துள்ளதாக குறித்த சங்கங்கள் குற்றம் சுமத்தியுள்ளன. இதேவேளை சட்டத்தரணியான சந்திரபால குமாரகே என்பவரின் கருத்துப்படி நிறைவேற்று அதிகாரம் கொண்டு ஜனாதிபதி முறையை ஒழிக்க 100 நாட்கள் தேவையில்லை.

அரசியல் அமைப்பின் 123ஆவது சரத்தின்படி உயர்நீதிமன்றத்தினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை காட்டுமாறு கட்டளையிட்டு மூன்று நாட்களில் அந்த அதிகாரத்தை அகற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

வீரவன்சவுக்கு 600 மில்லியன்

எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் இணைந்தால், தனக்கு 600 மில்லியன் வழங்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை எதிர்க்கட்சியில் இணைக்கும் ஒப்பந்தம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது. பிரதிய மைச்சர் வீரகுமார திஸாநாயக்கவை எதிர்க்கட்சியில் இணைக்க 25 மில்லியன் ரூபா பணமும் கொழும்பில் தொடர மாடி வீடமைப்பு தொகுதியில் வீடொன்றும் வழங்கப்படும் என்ற பேரம் பேசப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் வீரவன்ச கூறியுள்ளார்.

எனினும் விமல் வீரவன்ச போன்றவர்களை 5 சதத்தை கொடுத்தும் வாங்க எவரும் தயாரில்லை என பொது எதிர்க்கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 48 1/2 செவ்8இல்
உயரம்: 150cm
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/3839

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 28 1/2
உயரம்:65cm
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
தொ.இ: B/3843

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 12 1/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSC/ அரச உத்தியோகம்
தொ.இ: B/3844

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 7 1/4 செவ் 7இல்
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/3846

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 38
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்
தொ.இ: G/3869

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 32 3/4
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும
தொ.இ: G/3871

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 32 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3874

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 54 1/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில
தொ.இ: G/3877

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

பாராட்டி வாழ்த்துகிறோம்

செல்வன்
ராதா யாழவன்

செல்வி முருகவேள்
நிருஜா

கடந்த 10.11.2014 யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 30ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி BA பட்டம் பெற்ற செல்வி முருகவேள் நிருஜா அவர்களையும்
2014 இல் இடம் பெற்ற 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 157புள்ளிகளைப் பெற்ற செல்வன் ராதா யாழவன் அவர்களையும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்

வாழ்த்துவோர்
வளர்பிறை சனசமூக நிலையம்
ஊரெழு கிழக்கு சர்வதேச ஒன்றியம்

ஊரெழுகிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியின் என் எழுத்தாயுதம் நூல் அறிமுக விழா நாளை

மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் எழுதிய "என் எழுத்தாயுதம்" (ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுப் பகிர்வு) நூலின் அறிமுக விழா நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் "திசைகாட்டி" குழுமத்தின் அனுசரணையில் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு உதயன் நாளிதழின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் தலைமை தாங்குவார்.

வாழ்த்துரைகளை கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி.பாஸ்கரா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும் வட மாகாண உறுப்பினருமான த.சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ,ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் , இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூல் மதிப்புரையை கவிஞர் சோ.பத்மநாதனும், ஆய்வுரைகளை அரசியல் பத்தி எழுத்தாளர் ஆ.யதீந்திரா, மூத்த ஊடகவியலாளர் அ.நிக்ஸன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (இ-5)



சீர்குலையும் யாழ்.கலாசாரத்தை பாதுகாக்க விடுதலைப்புலிகள் மீண்டும் வரவேண்டுமென விருப்பம்

யாழ்ப்பாணத்தவர்களின் கலாசாரம்சீரழிந்துசெல்கின்றமையினால் தான் தமிழக விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாக வேண்டுமென விரும்புகின்றோம் என பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் (ரி.ஐ.டி)



கைது செய்யப்பட்டவர் விசாரணையின் போது கூறினார் என யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பபிள்யூ. பி.விமலசேன தெரிவித்துள்ளார்.

கடந்த25ஆம்திகதியன்றுமீசாலை புத்தூர் சந்திப் பகுதியில் வைத்து அதேயிடத்தினைச் சேர்ந்த வீரசிங்கம் திலக்சனன் கைது செய்யப்பட்டிருந்தார்.தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் மாவீரர் தினம் தொடர்பாக துண்டுப்பிரசுரங்களினை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த இளைஞனின் வீடும் சல்லடை போட்டு பயங்கரவாத குற்றத்தடுப்பினர் தேடுதல் நடத்தியதோடு வீட்டில் காணப்பட்ட ஆவணங்கள் மற்றும் கணனிகள் என்பவற்றினையும் கொண்டு சென்றனர். கைது செய்யப்பட்ட திலக்சனை யாழில் உள்ள ரி.ஐ.டியினர் அலுவலகத்திற்கு கொண்டுசென்று விசாரணைக்குட்படுத்தியிருந் தனர்.

இவ் விசாரணையின் போதே அவர் யாழ்ப்பாணத்தவர்களின் கலாசார சீரழிந்து செல்வதால் அவர்களை திருத்த முயலவே விடுதலைப்புலிகள் அமைப்பு மீண்டும் செயற்படவுள்ளது என துண்டுப் பிரசுரங்க ளினை அச்சிட முயற்சித்தோம் என தெரிவித்ததாக யாழ். உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இதேவேளை இளைஞன் நேற்று முன்தினம் இரவு கொழும்பு 6 ஆம் மாடிக்கு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கொண்டு செல்லப்பட்டுள்ளார் என வலம்புரிக்கு தெரிய வந்துள்ளது. (இ-4)

கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

2015 ஆம் ஆண்டுக்கான சான்றிதழ் தர கற்கைநெறிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 05.12.2014 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தொழில் நுட்ப வியல் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்களை கல்லூரியில் பெற்றுக்கொள்வதோடுமேலதிகதகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

கல்விக்கருத்தரங்கு

இணுவில் பொது நூலகமும் சன சமூக நிலையமும் இணைந்து நடத்தும் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்குரிய இலவச கல்வித் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இடம் பெறவுள்ளது. (இ-5)

கனமழையால் 25 குடும்பம் கரவெட்டியில் இடப்பெயர்வு



(கரணவாய்)

கரவெட்டி இராஜ கிராமத்தில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் பெய்த கன மழையால் 25 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக ஜே/ 363 கிராமசேவகர் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளும் நேற்று முன்தினம் பெய்த மழையினால் பெருமளவு பாதிப்பை எதிர் நோக்கியுள்ளது. இந்நிலையில் கர வெட்டி இராஜ கிராமத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் பெய்த கன மழையினால் வீடுகளில் வெள்ள நீர் புகுந்தது. இதனால் நேற்று முன்தினம் 10 குடும்பங்களும் நேற்றையதினம் 15 குடும்பங்களுமாக மொத்தம் 25 குடும்பங்கள் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியேறி இராஜ கிராம சனசமூக நிலையத்தில் தங்கியிருப்பதாக கரவெட்டி இராஜ கிராம கிராமசேவகர் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு கரவெட்டி பிரதேச செயலகத்தினால் சமைத்த உணவுப் பொருட்களும் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த கிராமம் தாழ் நிலப் பிரதேசத்தில் அமைந்துள்ளதால் அதிகளவான வெள்ளம் தேங்கி நிற்பதனால் ஏனைய குடும்பங்களும் குறித்த இடத்தை விட்டு வெளியேற வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த கிராமத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச செயலர், உட்பட பலர் விஜயம் செய்து கிராமத்தின் பரிதாப நிலையை பார்வையிட்டு சிறு உதவிகளும் செய்து வருகின்றனர்.

இருந்த போதிலும் மக்கள் தாம் ஒவ்வொரு தடவையும் இவ்வாறான பரிதாப நிலையை எதிர்நோக்குகின்ற போதிலும் இதுவரையிலும் எந்த தரப்பினரும் தமக்கு உரிய தீர்வினை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவில்லையென விசனம் தெரிவித்துள்ளனர். (இ-5-60-20)

ஞானாசாரியார் கல்லூரியின் பரிசில் தின நிகழ்வு இன்று

யாழ். கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் பரிசில் தின விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கல்லூரி அதிபர் ப.செல்வவிநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங் கிணைப்புக் குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரினும் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க.பொன்னையா கரவெட்டி பிரதேச வைத்தியசாலை வைத்தியர் திருமதி ம. மங்கையர்மணி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

யாழ். கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் பிணக்கு சம்பந்தமான கலந்துரையாடல்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அன்றைய தின பிணக்குகள் அனைத்தும் எதிர்வரும் மார்கழி மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறுமெனவும்.பிரதேச மத்தியஸ்த சபையினரின் தவிசாளர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

இதே வளை சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை பிரதேச மத்தியஸ்த சபைகளின் நாளை இடம் பெற விருந்த பிணக்குகளும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி பிற்போடப்பட்டுள்ளதாக குறித்த பிரதேச மத்தியஸ்த சபைகளின் தவிசாளர் தெரிவித்துள்ளார். (இ-5-134)

கிட்டார் பயிற்சி நேர்முகத் தேர்வு

இலங்கை கிட்டார் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள இலவச கிட்டார் பயிற்சிக்கு கலைஞர்களை இணைத்துக் கொள்ளும் நேர்முகத் தேர்வு இன்று முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகைதரும் இசைக்கலைஞர்களால் மேற்படி நேர்முகத் தேர்வு நடைபெறுவதுடன் இதில் ஏற்கனவே கிட்டார் பயிற்சி பெற்றவர்களும் புதிதாக பயிற்சி பெற விரும்புபவர்களும் கலந்து கொள்ள முடியும்.அத்துடன் இப்பயிற்சிக்காக ஏற்கனவே தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்களும், பதிவு செய்யாதிருப்பவர்களும் கலந்து கொள்ள முடியும்.நேர்முகத் தேர்விற்கு வருகைதருபவர்கள் தம்வசம் கிட்டார் கருவி இருப்பின் அதனையும் கொண்டு வரலாம் எனவும் மேலதிக விபரங்களுக்கு 0777707332 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் உயிரிழப்பு

ஜம்மு காஷ்மீர் மாநில எல்லையில் ஊடுருவிய தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருககும் நேற்று முன்தினம் நடைபெற்ற கடும துப்பாக்கிச் சண்டையில் 4 தீவிரவாதிகள், 3 இராணுவ வீரர்கள் உட்பட 10 பேர் உயிரிழந் துள்ளனர்.

ஜம்மு மாவட்டம் ஆர்னியா பகுதியில் உள்ள சர்வதேச எல்லை வழியாக, தீவிரவாதிகள் சிலர் நேற்று முன்தினம் காலையில் இந்திய பகுதிக்குள் ஊடுருவி உள்ளனர். இது குறிதது தகவல் அறிந்ததும் இராணுவம், எல்லை பாதுகாப்புப் படை, பொலிஸாரை சேர்ந்த பாதுகாப்புப் படையின்ர் அப்பகுதியை சுற்றி வளைத்து தீவிரவாதிகளை தேடினர்.

அப்போது எல்லையிலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ள பிண்டி கட்டார் கிராமத்தில் இராணுவத்தால் கைவிடப்பட்ட பதுங்கு குழியில் அவர்கள் பதுங்கி இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து தீவிரவாதிகளை குறிவைத்து பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு தீவிரவாதிகளும் தாக்குதல் நடத்தினர்.

இருதரப்புக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதில் 4 தீவிரவாதிகள், 3 வீரர்கள், 3 பொதுமக்கள் என 10 பேர் கொல்லப்பட்டனர். காயமடைந்த 3 பேர் அருகில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அப்பகுதியிலிருந்த ஒரு காரை பாதுகாப்புப் படையினர் பறிமுதல் செய்தனர். இது தீவிரவாதிகள் பயன்படுத்திய காராக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. மேலும் பதுங்கி உள்ள சில தீவிரவாதிகளுடன் பாதுகாப்புப் படையினர் சண்டையிட்டு வருகின்றனர். இவ்வாறு பொலிஸ் துறையினர் மேலும தெரிவித்தனர். (இ-5)



தமிழரின் உணர்வுகளை மோடி மதிக்க வேண்டும்

ராமதாஸ் வலியுறுத்து

ஈழப் பிரச்சினையில் தமிழர்களின் உணர்வுகளை மதித்து அவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் பிரதமர் மோடி செயற்படுவதே சரியான அணுகுமுறையாகும் என்று சுட்டிக்காட்டியுள்ள பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் இலங்கையில் நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற மகிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியப் பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்திருப்பது வருத்தமளிப்பதாகவும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகவும் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷவையும், அவரது கூட்டாளிகளையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கூண்டில் ஏற்றி தண்டனை பெற்றுத்தர வேணடும் என்பதே உலகெங்கும் உள்ள தமிழர்களின் விருப்பமாகவுள்ளது என்றும், இந்த நிலையில், ராஜபக்ஷ, இலங்கை ஜனாதிபதி தேர்தலில் தொடர்ந்து 3ஆவது முறையாக வெற்றி பெற வேண்டும் என பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்திருப்பதன் மூலம ஒட்டுமொத்த

தமிழர்களின் உணர் வுகளையும் பிரதமர் நரேந்திர மோடி புண்படுத்திவிட்டார் என்றும் ராமதாஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் தமிழர்களின் உணர்வுகளை மதிக்கத் தவறியதால்தான் கடந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு தமிழ்நாட்டு மக்கள் படுதோல்வியை பரிசாகத் தந்தார்கள் என்று கூறியுள்ள ராமதாஸ், இத்தகைய சூழலில் ஈழப் பிரச்சினையில் தமிழர்களின் உணர்வுகளை மதித்து, அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் பிரதமர் செயற்படுவதே சரியான அணுகுமுறை ஆகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

சர்ச்சையில் சந்திப்பு

நேபாளம் காத்மண்டுவில் நடைபெற்ற 18 ஆவது சார்க் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோர் சந்தித்துக் கொண்ட போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம் அருகில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிற்கின்றார்.

சார்க் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மோடி பாக்.பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்திக்காமல் புறக்கணித்திருந்த நிலையில் இருவரும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியுள்ளனர்.

பிரதமர்கள் இருவரின் சந்திப்பும் இடம்பெறமாட்டாது என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் சர்ச்சையான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மோடியும் ஷெரீப்பும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசாமில் ஆயுதக் குவியல் கண்டுபிடிப்பு; மோடி பயணத்துக்கு கூடுதல் பாதுகாப்பு

அசாம் மாநிலம், டின்சுகியா மாவட்டத்தில் இருவேறு இடங்களில் நேற்று முன்தினம் ஆயுதக் குவியல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி அசாமில் சுற்றுப்பயணம் செய்ய உள்ள நிலையில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அசாம் தலைநகர் குவாஹாட்டியில் நாளை 30ஆம் திகதி நடைபெறும் பொலிஸ் தலைவர்களின் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார். பிரதமர் வருகையின்போது பல்வேறு நாசவேலைகளில் ஈடுபட உல்பா தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதைத்தொடர்ந்து மாநிலம் முழுவதும் தீவிர சோதனை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டின்சுகியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சோதனையில் இருவேறு இடங்களில் ஆயுதக் குவியல் கண்டுபிடிக்கப்பட்டது.

டோகாஜன் என்ற கிராமத்தில் ரொக்கெட் லோஞ்சர்கள், துப்பாக்கி குண்டுகள், 5 வெடிகுண்டுகள் சிக்கின. இதேபோல் திஸ்பூர் பொலிஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட குவாஹாட்டி-ஷில்லாங் சாலையில் பொலிஸார் நேற்று முன்தினம் சோதனை நடத்தினர். அப்போது சந்தேகத்திற்கிடமான ஒரு வாகனத்தை தடுத்து நிறுத்தினர்.

அதில் 30 பக்கெற் ஜெலட்டின் குச்சிகள், 18ஆயிரம் டெற்னேட்டர்கள், 12 பக்கெற் கார்டெக்ஸ் ஆகியவை கோணிப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வாகனத்தின் சாரதி உட்பட இருவரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். (இ-5)

வன்னியிலும் மாவீரர்களுக்கு அஞ்சலி

(முல்லைத்தீவு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தினம் தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

களமாடி வீரச்சாவினைத் தழுவிய வீரமறவர்களுக்கு வீடுகளிலும், கோவில்களிலும், பிரத்தியேக இடங்களிலும் விளக்கேற்றி உணர்வு பூர்வமாக மாவீரர்தினம் நடந்தேறியது.

இந்நிகழ்விற்கு வடக்கில் இராணுவமும் பொலிஸாரும் தடைவித்திருந்த நிலையில் இத்தடையினை மக்கள் மீறியும் ஈகச்சுடரேற்றி அஞ்சலியினை செலுத்தினர்.

விடுதலைப்புலிகள் வன்னியுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட பின்னரும், அவர்கள் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் அனைத்தையும் இராணுவம் கடந்த 2009 ஆம் ஆண்டு கைப்பற்றிய பின்னரும் இந்த மாவீரர் நினைவு நிகழ்வுகள் நடத்தப்படக்கூடாது என்பதில் அரசு முனைப்பாகவிருக்கிறது.

இதனை அடுத்து நேற்று முன்தினம் வன்னியின் பல இடங்களிலும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொண்டதோடு கண்காணிப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

இவை அனைத்தையும் மீறி கடும் இராணுவ மற்றும் புலனாய்வாளர்களின் அழுத்தத்திற்கும் மத்தியிலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பொது இடங்கள் மற்றும் வீடுகளில் மாவீரர் நினைவு நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதில் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஈகைச் சுடரேற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மக்களுடன் நடைபெற்ற இந்நிகழ்வு உணர்வு பூர்வமாக நடத்தப்பட்டதுடன் கண்ணீருடன் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ரவிகரன் கருத்து தெரிவிக்கையில்,

இன்றைய நாள் மாவீரர் நாள் (நேற்று முன்தினம்) தமிழ் இனத்தின் தேசிய வாழ்வுக்காக தமது வாழ்வின் சுகங்களை தியாகம் செய்து இந்த மண்ணில் விதையான வர்களே மாவீரர்கள். அவர்கள் எங்கள் மக்களின் பிள்ளைகள்.

இந்நாளில் காலத்தால் சாகாத அந்த காவிய நாயகர்களை பூசித்து எம் நியாயமான உணர்வுகளை உலகின் முன் எங்கள் மக்கள் வெளிப்படுத்துகிறார்கள்.

உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்துவது மனிதநாகரீகம் ஆகும். அந்த உலக பொது நாகரீகத்தையே எங்கள் மக்கள் இன்று நிலை நிறுத்தியிருக்கிறார்கள். இனியும் நிலை நிறுத்துவார்கள் என அவர் உறுதிபட தெரிவித்துள்ளார். (அ-2)

வேரவில் இந்துவின் நூற்றாண்டு விழா

கிளி/ வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணி க்கு பாடசாலை மண்டபத்தில் பாட சாலை அதிபர் திருமதி இ ப.சோதி லிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் சிறப்பு விருந்தினராக த.தே. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி:சிறீ தரன் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் க.முருக வேல் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்விற்கு பழைய மாணவர்கள், பெற்றோர், பாட சாலை நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(அ-2-277)



மண்சரிவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வட மாகாணசபையால் நிவாரண உதவி

(மன்னார்)

பதுளை மாவட்டத்தில் கொஸ்லாந்தை மீரியபெத்த மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்களால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களை கடந்த 24 ஆம் திகதி வடமாகாண சபையினர் நேரில் சென்று வழங்கினர்.

வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கந்தையா சிவஞானம், வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாணசபை உறுப்பினர்களான இ.ஆனோல்ட், து.ரவிகரன், மேரி கமலா குணசீலன், தர்மபால செனவிரட்ன ஆகியோர் சென்று 5 முகாம்களிலுள்ள 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கும்உடுபுடைவைகள், உணவுப்பொருட்கள், பால்மா பைக்கற்கள் உட்பட நிவாரணப்பொருட்களை வழங்கினர்.

இதன்போது வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பெர்து மக்களால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து பெற்றோர் பாதுகாவலரை இழந்த மூன்று பிள்ளைகளின் பராமரிப்புக்காக 25 ஆயிரம் ரூபாவை வழங்கியதுடன் பாதிக்கப்பட்ட ஏனைய பிள்ளைகளுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடி அவர்களது தேவைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி கேட்டறிந்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி குறித்த விடயத்தில் தொடர்ந்து உதவ நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது. ஒரு முகாமில் மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களும் ஏனைய முகாம்களில் மண்சரிவு அபாயம் காரணமாக இடம்பெயர்ந்தோரும் உள்ளனர்.

இவர்களுக்கு உறைவிடம் இல்லாமையானது பெரியதொரு பிரச்சினையாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

கொட்டித் தீர்த்தது கன மழை

வவுனியாவில் 703 குடும்பங்கள் பாதிப்பு

வவுனியாவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக 703 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 440 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று நேற்று மாலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில் தொடர்ந்து பெயது வரும் மழை காரணமாக வவுனியா பிரதேச செயலக பிரிவில் 642 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 258 பேரும், வவுனியா வடக்கில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரும், வவுனியா தெற்கில் 46 குடும்பங்களைச் சேர்ந்த 138 பேரும், செட்டிகுளத்தில் 14 குடும்பத்தைச் சேர்ந்த 41 பேருமாக மொத்தம் 703 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து440 பேர் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியாவின் விளக்குவைத்தகுளம், புதியவேலர் சின்னக்குளம், சமனங்குளம் ஆகிய பகுதிகளில் தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டு 76 குடும்பங்களைச் சேர்ந்த 277 குடும்பங்கள் அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டு வருவதுடன் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த சில நாட்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக வவுனியாக்குளம் வான் பாய்கிறது. இதனால் பூந்தோட்டம் பாதையூடாக போக்குவரத்தும் பாதிப்படைந்துள்ளது.

தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர்மட்டம் அதிகரித்து வீடுகளுக்குளளும் வெள்ள நீர் புகுந்துள்ளமையால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. (அ-2-250)

குறுநாடக போட்டிக்கு விண்ணப்பிக்க முடியும்

(பனிக்கன்குளம்)

ADIC நிறுவனமும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும் இணைந்து "குடித்து அசௌகரியப்படுவதை விட குடிப்பவர்களை நக்கல் செய்வது Fun ஆகும்." எனும் தொனிப்பொருளில் தேசிய மட்டத்தில் குறுநாடகப் போட்டி ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளது.

எனவே "குடித்து அசௌகரியப்படுவதை விட குடிப்பவர்களை நக்கல் செய்வது Fun ஆகும்"எனும் தொனிப்பொருளில் 15 நிமிடங்களுக்கு குறையாத நாடகமொன்றைத் தயாரித்து நடித்து காட்ட முடியுமென்றால் முதலாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் பரிசாக 25ஆயிரம் ரூபாவும் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

மேலும் ஆக்கபூர்வமான 10 நாடகங்களுக்கு சிறந்த நடிகர், சிறந்த நடிகை, தயாரிப்பு, ஒளியாள்கை, சிறந்த உடல்மொழி, அரங்க நிர்மாணம் இசை போன்றவற்றிற்கும் பணப்பரிசில்களும் விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

சவாலை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் 15-30 வயதுக்குட்பட்ட ஆக்கபூர்வமான குழுவொன்றிருப்பின் விண்ணப்பங்களை குழுத்தலைவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மாவட்டம் ஆகியவற்றை குறிப்பிட்டு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் ADIC இல 40/18 பார்க் றோட், கொழும்பு-05 எனும முக்வரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (அ-2-281)

மன்னாரில் நாவலர் விழா

மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையம் நடத்தும் நாவலர் விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் இணையத்தின் தலைவர், சிவஸ்ரீ மஹா. தர்ம குமாரக்குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக, வவுனியாத் தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த.சிவகுமாரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக, மன்னார் பிரதேச செயலர் கே.எஸ். வரதகுமார், முசலி பிரதேசச் செயலர் செ.கேதீஸ்வரன், மாந்தை மேற்கு பிரதேசச் செயலர் மா.ஸ்ரீஸ் கந்தகுமார், மன்னார் உதவி மாவட்டச் செயலாளர் வி.பபாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக, மன்னார் வண்ணாமோட்டை அ.த.க.பாடசாலை அதிபர் ஆ.பிரகலாதன், மன்னார் மோட்டக்கடை அ.த.க.பாடசாலை அதிபர் ஜெ.விஜயகுமார், மன்னார் இலுப்பக்கடவை மகா வித்தியாலய அதிபர் த.கோகிலராஜா ஆகியோரும் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

இதில் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெறும். ஆசியுரையை சிவஸ்ரீ வி.விஜயபாபுக் குருக்கள் ஆற்றுவார். சிறப்பு நடன நிகழ்வை பேசாலை இந்து முன்னணி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்குவர். விசேட நிகழ்வாக "நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல்" என்னும் தலைப்பில், வெ.பொ.மாணிக்கவாசகர் தலைமையில் இடம்பெறும் கவியரங்கில் ச.ரமேஸ், ந.பிரதீப், பா.சதீஸ், சோ. றோகன்ராஜ், செல்வி. யோ. ஜோகினி ஆகியோர் கவிதை பாடவுள்ளனர்.

சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிவரும் ஒரு பெரியாருக்கு "நாவலர் விருது' வழங்கல், இறைபணியாளர் விருது வழங்கல், மன்னார் மாவட்ட சிவபூமி இந்து இளைஞர் மன்றத்தினரால் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுதல் என்பனவும் இடம்பெறவுள்ளன. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ கோட்பாடுகளையும் மீறி சர்வதேச குற்றங்களில் புலிகள்!

பாதுகாப்பு செயலர் கோத்தா கூறுகிறார்

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதக்கொள்கை சர்வதேச அளவில் பலமடையவும் சர்வதேச அளவில் விடுதலைப் புலிகள் பலமான இயக்கமாக உருவெடுக்கவும் இலங்கை மற்றும் சர்வதேச நாடுகளுக்கிடையேயான அரசியல் பாதுகாப்பு புரிந்துணர்வின்மையே காரணம் என தெரிவித்த பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தமிழீழ கோட்பாட்டையும் தாண்டிய சர்வதேச ரீதியாக குற்றங்களில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டனர் எனவும் தெரிவித்துள்ளார்.

தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு பிரதம விருந்தினர்களுக்கான மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமாகியது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்ப உரை நிகழ்த்து கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் முப்பது வருட கால ஆயுதப்போராட்டத்தினை விடுதலைப புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட போது சர்வதேசத்தின் பார்வை மிகவும் குறைவாகவே இருந்தது.

நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு புரிந்துணர்வு உடன்பாடுகள் இல்லாமையே இலங்கையில் இருந்து கொண்டு சர்வதேச பலம் பொருந்திய தீவிரவாத இயக்கமொன்று ஆரம்பமாக காரணமாக அமைந்தது. கடந்த மூன்று தசாப்தகாலத்தில் விடுதலைப் புலிகள் தீவிரவாதம மிக மோசமானதும் பயங்கரமானதுமான அமைப்பாக தோற்றம பெற்றிருந்தது.

விடுதலைப் புலிகளின் சர்வதேச தொடர்பு அவர்களின் சர்வதேச வலையமைப்பு என்பன மிகவும் சக்தி வாய்ந்ததாக மாற்றமடைந்திருந்தது.

குறிப்பாக தமிழீழம் என்ற கோட்பாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆரம்பமாகியது என்று கூறினாலும் அதையும் தாண்டி சர்வதேச குற்றங்களில் சர்வதேச தீவிரவாதிகளுடன் தம்மை இணைத்துக் கொண்டிருந்தனர்.

குறிப்பாக இந்த முப்பது ஆண்டுகளில் ஆட்கடத்தல், போதைப் பொருள் கடத்தல் மற்றும் ஆயுதக் கடத்தல்களில் ஈடுபட்டிருந்தனர். வடக்கு கிழக்கில் இருந்து விடுதலைப் புலி உறுப்பினர்கள் மற்றும் இயக்கத்தினரை மேற்கு மத்திய மற்றும் தென் ஆசிய நாடுகளுக்கு கடத்தியிருந்ததுடன் சட்ட விரோத ஆட்கடத்தல் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

அவுஸ்திரேலியா, கனடா மற்றும அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கு ஆட்கடத்தல் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களை செய்து வந்தனர்.

அதேபோல் மத்திய கிழக்கு நாடுகளுடனான ஆயுத மாற்றுக் கலாசாரத்தில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் காணப்பட்டது. இவை அனைத்திற்கும் ஆசிய மற்றும் தெற்காசிய நாடுகளை தமது சந்திப்பு வலயமாக பயன்படுத்திக் கொண்டனர்.

அதேபோல் சர்வதேச நாடுகள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் பணம் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டினை பலப்படுத்தியது. சர்வதேச வங்கிகள் பணப்பரிமாற்று செயற்பாடுகள் அனைத்தும் விடுதலை புலிகளின் வங்கிக்கணக்குகளை நிரப்பியது.

வடக்கில் தமது ஆயுத கலாசாரத்தையும் சட்ட விரோத செயற்பாடுகளையும் தயங்காது செய்வதற்கு பணவுதவியும் சர்வதேச பாதுகாப்பும் கைகொடுத்தது. அது மட்டுமன்றி விடுதலைப் புலிகளின் கடல் மார்க்க செயற்பாடுகள் தென்னிந்திய மற்றும் ஏனைய கடல் மார்க்கமான தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கிடையே பரவியதுடன் 2006 இல் தாய்லாந்து, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்த இயக்கமாக பிரகடனப்படுத்தவும் இதுவே காரணமாக அமைந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	நெல்லியடி	திருநெல்வேலி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	120	100	120
உருளைக்கிழங்கு	120	100	120
பச்சைமிளகாய்	180	180	220
தக்காளி	240	200	180
மரவள்ளிக்கிழங்கு	30	40	50
கோவா	120	80	120
கரட்	200	140	240
பூசணி	50	40	50
புடோல்	60	80	80
வாழைக்காய்	60	60	80
சின்ன வெங்காயம்	120	100	80-120
பெரிய வெங்காயம்	120	100	100
பாகற்காய்	200	180	160
வெண்டிக்காய்	100	120	80
கருணைக் கிழங்கு	60	50	80
பயற்றங்காய்	200	200	160
லீக்ஸ்	250	240	300
பீற்றூட்	200	140	160
கறிமிளகாய்	200	220	200
முருங்கைக்காய்	—	350	200
போஞ்சி	150	120	120
கத்தரிதம்புள்ள	—	80	120
கீரை - 1 பிடி	30	30	30
தேசிக்காய்	120	160	140
தேங்காய் (ஒன்று)	25-50	50	35-40
இராசவள்ளி	—	140	—

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 207

Search for people, places and things Nagendram Home

டொறின் மன்மதநாயகம்

"இல்லை" என்று
ஒரு போதும் சொல்லாதே
"என்னால் இயலாது" என்று
ஒரு நாளும் சொல்லாதே,
ஏனெனில் நீ வரம்பில்லா
வலிமை பெற்றவன்.

சிவா சக்தி



ராஜமணி சுப்ரமணி

ஒரு மகள் மற்றும் மகன் இருக்கிறார்கள்

ஒரு நாள் மகள் வீட்டிற்கு தாமதமாக வருகிறாள்.
உடனே அவரின் தந்தை "ஏன் இவ்வளோ லேட்?"
அதற்கு மகள் "ப்ரண்ட்ஸ் வீட்டிற்கு போயிருந்தேன் அப்பா??" என்கிறாள்.
தந்தைக்கு சந்தேகம் வரவே, மகளின் 10 தோழிகளுக்கு போன் செய்தார்.
அவளின் தோழிகளோ "**அங்கிள் அவ இங்க வரவே இல்லை**" என்கின்றனர்.
மகளுக்கு கிடைத்தது தர்ம அடி...,

(இப்போ ஹீரோ என்டரி) சிறிது நேரத்தில் மகனும் உள்ள நுழைகின்றான்.
மீண்டும் அப்பா : "ஏன் இவ்வளோ லேட்?"
மகன் : "ப்ரண்ட்ஸ் வீட்ல இருந்தேன்ப்பா?"
அப்பாக்கு மீண்டும் சந்தேகம், மகனின் 10 நண்பர்களுக்கு போன் செய்தார். அதில் 8 நண்பர்கள் "**இவ்வளோ நேரம் இங்க தான் அங்கிள் இருந்தான்**" என்கிறார்கள்.
மற்ற இரண்டு உயிர் நண்பர்கள் "**இப்போதான் அங்கிள் தூங்குறான், நான் வேணும்னா எழுப்பட்டுமா??**" என்கிறார்கள்...

இரத்தினசபாபதி பாலராஜா

தேவை இருந்தால்
உன்னை தெய்வம் என்பர்
உன்னால் தேவை முடிந்த
பின் உன்னையே தேவாங்கு
என்பர்

அபிஷ்க் உமாகாந்தன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைகள் அல்ல, பரிந்துரைகள்!

தமிழருவி மணியன்

இன்று தமிழகத்தில் தேசியக் கட்சிகளில் ஒன்றுகூட வலிமையாக இல்லை. இரண்டு திராவிடக் கட்சிகளிடமிருந்து மக்களை விடுவித்து மாற்று அரசியலை வளர்த்தெடுக்க ஓர் வலிமையான கூட்டணி 2016 சட்டமன்றத் தேர்தலில் களம் காண வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

வைகோ, விஜயகாந்த், ராமதாஸ் ஆகியோர் தனித்தனியாக நின்று எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது.

மோடியைக் காட்டி மட்டுமே பா.ஜ.க. தமிழகத்தில் தனிப் பெரும் சக்தியாக வளர்வதற்கு வாய்ப்பே இல்லை.

ஒவ்வொருவரும் முதல்வர் கனவில் மூழ்கியிருந்தால் வலிமையான ஒரு கூட்டணிக்கு வழியே இல்லை.

இரண்டு திராவிட கட்சிகளும் ஊழல் சேற்றில் சிக்கி எழ முடியாமல் தடுமாறும் இந்த அரசியல் சூழலை, மாற்று அரசியலை வளர்த்தெடுக்க விரும்பும் கட்சிகள் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த முக்கியமானத் தருணத்தில் வாசன் காங்கிரஸிலிருந்து வெளியேறி தனிக்கட்சி தொடங்கியிருப்பது தமிழக அரசியலில் புதிய மாற்றத்தை உருவாக்கப் பெரிதாக உதவக்கூடும் என்று நடுநிலையாளர்களும், மாற்று அரசியல் மலர வேண்டும் என்று ஆர்வத்துடன் எதிர்பார்ப்பவர்களும் அழுத்தமாக நம்புகின்றனர்.

வாசன், மூப்பனார் மறைவுக்குப் பின்பு 2002 இல் நேரடி அரசியலில் கால் பதித்தார்.

தமிழ் மாநில காங்கிரஸின் தலைவரானார். தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு வலிமை சேர்க்கும் நோக்கில் தன் கட்சியை அதில் இணைத்தார்.

கடந்த 12 ஆண்டுகளாக அவர் தமிழ்நாடு காங்கிரஸின் தனிப் பெருந்தலைவராகத் திகழ்ந்தார்.

தொண்டர்களிடையே மிகப் பெரிய செல்வாக்குடன் வலம் வந்த வாசனை காங்கிரஸ் தலைமை அங்கீகரிக்கவில்லை.

அவரைப் பின்பற்றிய பெருந்திரளான தொண்டர்களின் நிர்பந்தத்தினால் காங்கிரஸிலிருந்து வெளியேறி இன்று தனிகட்சி கண்டிருக்கும் வாசன், தமிழக அரசியலில் தவிர்க்க முடியாத தலைவராக உருவெடுக்கவும், அவரது கட்சி மக்களின் மகத்தான ஆதரவைப் பெறவும் சில முக்கியமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

1. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் 10 ஆண்டு கால ஆட்சியில் மத்திய அமைச்சராக இருந்து ஊழல் கறை சிறிதும் படியாமல் சிறப்பாகப் பணியாற்றிய பெருமைக்குரியவர் வாசன். ஆனால், அவர் மட்டும் தூய்மையானவராக இருந்தால் போதாது.

வாசன் ஊழல் கறை படியாத, கிரிமினல் குற்றச்சாட்டுக்குள்ளாகாத, அரசியல் பதவிகளைத் தங்கள் சொந்த நலனுக்குப் பயன்படுத்தாத, தவறான வழிகளில் சொத்து சேர்க்காத மிகச்சிறந்த மனிதர்களை மட்டுமே இனங்கண்டு அவர்களை முதன்மைப்படுத்த வேண்டும்.

2. நேர்மை, எளிமை, கடின உழைப்பு ஆகியவற்றின் மூலம் தன்னுடைய கட்சி மக்களிடம் சென்றடையும் என்றும் மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் கட்சி போர்க் குணத்துடன் செயலாற்றும் என்றும், மக்களின் எதிர்பார்ப்புக் கேற்பத் தன்னுடைய கட்சியின் தலைவர்களும், தொண்டர்களும் அர்ப்பணிப்புடன் கடும் உழைப்பை நல்குவார்கள் என்றும் வாசன் உறுதி மொழி வழங்கியிருக்கிறார்.

இந்த உறுதிமொழிப்படி அவருடைய நம்பிக்கைக்குரிய தளபதிகளும் தொண்டரகளும் சிறிதும் வழுவாமல் நடந்து கொள்கிறாரகளா என்று தொடர் கண்காணிப்பில் அவர் ஈடுபட வேண்டும்.

3. பெருந்தலைவர் காமராஜரின் கால்கள் படாத கிராமமே தமிழகத்திலில்லை. அதனால்தான், 1967 இல் காங்கிரஸ் ஆட்சியை இழந்த போதும் 41 விழுக்காடு வாக்குகளைப் பெற முடிந்தது. காமராஜர் மறை வுக்குப் பின்பு தலைமைப் பொறுப்பேற்றவர்கள் அனைவரும் சத்தியமூர்த்தி பவனில் இருந்தபடி அன்றாடம் காகித அறிக்கைகள் மூலமே கட்சியை நடத்தினர்.

மூப்பனார் "காமராஜர் ஆட்சி" தமிழகத்தில் மலர வேண்டும் என்று கனவு கண்டார். அந்தக் கனவை நனவாக்க அவர் "கிராம தரிசனம" என்ற பெயரில் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று மக்கள் பிரச்சினைகளை அறிய முற்பட்டார். ஆனால், அதற்குள் காலம் அவரைக் களவாடிவிட்டது.

வாசன் குக்கிராமங்கள் வரை நேரில் சென்று மக்களுடன் நெருக்கங் கொண்டு அவர்களுடைய பிரச்சினைகளை அறிய வேண்டும்.

4. அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மீது மாறாத நேசங் கொண்டிருந்த மூப்பனார், எந்த நிலையிலும் காங்கிரஸ் கட்சியின் தோழனாகவே தன்னை வெளிப்படுத்திக் கொண்டார்.

ஒரு மாநிலக் கட்சியைத் தொடங்கிய பின்பு "பூர்வாசிரம வாசனை" யிலிருந்து முற்றாக விடுபட்டு விட வேண்டும்.

தன்னுடைய தந்தை செய்த அரசியல் தவறை வாசன் செய்யக் கூடாது. காங்கிரஸ் மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அதைப் பாரபட்சமின்றி நேர்மையாக விமர்சிக்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சியின் ஊழல் நடவடிக்கைகள், உள்கட்சி ஜனநாயகத்திற்கு வாய்ப்பின்மை, ஒற்றைக் குடும்பத்தின் ஆதிக்கம் போன்ற பல தவறுகளை மக்கள் கடுமையாக எதிர்ப்பதை வாசன் கவனத்தில் கொள்ள வேண்டும்.

"காங்கிரஸ் நட்புக் கட்சி" என்று வாசன் சொன்னால், என்றாவது ஒருநாள் இவர் மீண்டும் காங்கிரஸில் இணைந்து விடுவார் என்ற சந்தேகத்திற்கு அது சாட்சியமாகிவிடும்.

5. காமராஜர் கண்மூடும் வரை "இரண்டு திராவிட கட்சிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்" என்று பாமரருக்கும் புரியும் வகையில் விளக்கினார்.

காங்கிரஸ் கட்சி 41 விழுக்காடு வாக்குகளைப் பெற்ற நிலையிலிருந்து 4.3 விழுக்காடு வாக்குகளைப் பெற்று, 38 நாடாளுமன்றத் தொகுதிகளில் "டெபாசிட்" பறிகொடுத்த நிலைக்குத் தள்ளப்பட்டதற்கு முதன்மையான காரணம், அது அடுத்தவர் தோள்களில் அமர்ந்து கொண்டு, சொந்தக் கால்களில் நடப்பதாகக் கற்பனை செய்து மகிழ்ந்ததுதான். வாசன் இரண்டு திராவிட கட்சிகளுடன் தேர்தல் உறவு கொள்ளக்கூடாது.

சில அரசியல் ஆதாயங்களுக்காகப் பதவி விரும்பிகளின் நிர்பந்தத்தினால் வாசன் 2016 இல் நடக்கவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அல்லது அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தால் வாசனின் கட்சி தமிழகத்தில் பத்தோடு பதினொன்றாகிவிடும்.

6. தன்னுடைய புதியக் கட்சியில் பெரும்பாலான பொறுப்புகளும், பதவிகளும் இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் வழங்கப்படும் என்று வாசன் வாக்களித்திருக்கிறார்.

நாற்பதாண்டுகளுக்கு மேல் நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகளில் நிற்கும் காங்கிரஸ் வேட்பாளர்களின் முகங்கள் மாறியதே இல்லை.

ஏறக்குறைய ஒவ்வொரு தொகுதிக்கும் இன்னாருக்கென்று பட்டா போட்ட கதைதான். இந்த நிலை வாசன் கட்சியில் நீடிக்கலாகாது.

கட்சியை வளர்க்க அரும்பணியாற்றும் இளைய தலைமுறைக்கு 50 விழுக்காடு இடங்களையாவது வாசன் ஒதுக்க முன்வர வேண்டும்.

7. வாரிசு அரசியலை வளர்த்தெடுக்காத மாநிலமே இன்று இந்தியாவில் இல்லை. காஷ்மீரம் தொடங்கி, தமிழகம் வரை எங்கும் வாரிசு மயம். இதில் விதிவிலக்காக இருப்பவை இடதுசாரி இயக்கங்களே.

வித்தியாசமான தலைவராக தமிழகத்தில் வாசன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள, இந்த விடயத்தில் வைகோவை முன் மாதிரியாக ஏற்க வேண்டும்.

மூப்பனாரின் வாரிசாக வாசன் அரசியலுக்கு வந்திருக்கலாம். ஆனால், மூப்பனார் இருக்கும் போதே கட்சியைக் கைப்பற்ற அவர் அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்தவில்லை. மூப்பனார் மறைவுக்குப் பின் பும் அவர் கட்சித் தலைவராவதற் குக் காரியமாற்றவில்லை.

தமிழ் மாநில காங்கிரஸின் தலைவர்கள் ஒருமனதாக அவருடைய தலையில் சூட்டிய மகுடந்தான் கட்சித் தலைமைப் பதவி. வாசன் தொடங்கியிருக்கும் புதிய கட்சியில் ஒரு குடும்பத்தில் இருவருக்குப் பதவி என்ற நிலை என்றும் ஏற்படக் கூடாது.

8. வாசன் கட்சியின் சார்பாகத் தேர்தலில் நின்று வெற்றி பெற்று நாடாளுமன்றம், சட்டப்பேரவை, உள்ளாட்சி அமைப்புகளில் பதவி வகிப்பவர்கள் ஆண்டுதோறும் தங்கள் சொத்துப் பட்டியலை மக்கள் மன்றத்தில் வெளியிட வேண்டும்.

பதவியைப் பயன்படுத்தி அறத்துக்குப் புறம்பாக ஒரு ரூபாய்கூட சேர்க்கவில்லை என்பதை வாக்காளர்களுக்கு அவர்கள் வெளிப்படுத்துவதன் மூலம் கட்சியின் மீது மக்களின் மதிப்பீடு உயரும்.

9. தமிழினம் சார்ந்தும், தமிழ மொழி சார்ந்தும் முழுமையான அர்ப்பணிப்புடன் செயறபடும் அரசியலமைப்பாக வாசனுடைய கட்சி வடிவம் பெற வேண்டும்.

தமிழினத்தை பாதிக்கக கூடிய, தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக விளங்கக்கூடிய சக்திகளுக்கு எதிராகப் போராடும் போராளிகளின் பாசறையாக இக்கட்சி பரிணமிக்க வேண்டும்.

இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் சக்திகளின் ஆதிக்கத்தில் தமிழினம் வீழ்ந்து விடாமல் "வளமான தமிழகம், வலிமையான பாரதம்" என்ற மூப்பனாரின் வாசகத்தை வாசன் கட்சி எந்நாளும் சோர்வின்றி முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

10. வாசன் தனிக்கட்சி தொடங்கிய நிலையிலேயே காமராஜர் ஆட்சியை அமைத்துவிட முடியாது.

இரண்டு திராவிட கட்சிகளுக்கு மாற்றாக ஓர் அணி அமைய வேண்டும். அந்த அணியில் வாசன் கட்சி முக்கிய அங்கம் வகிக்க வேண்டும். "நாளையே முதல்வர் ஆவோம்" என்ற கனவுக்கு இடந்தராமல் பொறுமையோடு காய் நகர்த்த வேண்டும்.

இவை யூதர்களுக்கு மோசஸ் வழங்கியது போன்று பத்துக் கட்டளைகள் அன்று தமிழகத்தில் வாசன் தனித்துவமிக்க தலைவராகப் பரிணமிப்பதற்கான பத்துப் பரிந்துரைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ed. S.L.T.S.I) அவர்களின் மணிவிழா-2014.11.29

யில் பிரதி அதிபராகச் சேவையாற்றி ஓய்வு பெற்றார்)

ரம்

வேலி சரஸ்வதி வித்தியாலயம்
ர் சோமஸ்கந்தக்கல்லூரி
னம் பல்கலைக்கழகம்
வி நிறுவகம் -மதுகம
மரியாள் தமிழ் வித்தியாலயம்
யாந்தோட்டை
-03-12-1989-08-13
பாய் கிறிஸ்தவ கல்லூரி
-08-14-2014-07-15
-26-2014-07-15
14-2007-11-11
வுடன் வாழ்த்தி நிற்கும்
ாணவர்களும்.

ஆசிரியத்துவத்தின் குறியீடு- திரு.சி.சிவலிங்கம் ஆசிரியர்

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியுடனான எனது தொடர்புகள் 1994 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகின. அன்றிலிருந்து எனக்கு நன்கு பரீச்சயமானவர் திரு.சிவபுண்ணியம் சிவலிங்கம் ஆசிரியர் அவர்கள்

இக்கல்லூரி தனது வாழ்வில் பல சிறப்புக்களை, ஏற்றங்களை கண்டிருந்தது மட்டுமன்றி, பலதுன்பதுயரங்களையும்சுமந்துள்ளது. இக்கல்லூரியின்ஏற்றத்திற்குஉழைத்தஆசிரியர் அவர்கள், துன்ப, தயரங்களின்போதும் பக்கபலமாக நின்றதை நான் அறிவேன்.

ஆசிரியர்களின் வாண்மை தொடர்பாக குறிப்பிடும்போது குறித்தபாடத்துறையில் அவரை விஞ்ச யாருமில்லை என்ற நிலையை அடையவேண்டுமெனக் குறிப்பிடுவர். தமிழ்ப் பாடத்துறையில் அவ்வாறானதொரு நிலையில் வைத்துப் போற்றப்பட்டவர் திரு.சி.சிவலிங்கம் ஆசிரியர் அவர்கள்.

ஆசிரியர் அவர்களும், அவரது துணைவியாரும் இறையன்பு மிக்கவர்கள், தம்மிடம் கற்ற மாணவர்களை தமது குழந்தைகளாகவே கருதி கல்வியறிவை ஊட்டியவர்கள். இணைபிரியா இத்தம்பதியர் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து கல்விச் சமூகத்திற் குத் தம்மாலான சேவையை ஆற்றவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

ஆ.ராஜேந்திரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.

பிரதேச செயலரின் வாழ்த்து

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பிரதி அதிபராக கடமையாற்றி 15.07.2014 ஆம் திகதி ஓய்வு பெற்ற பிரதி அதிபர் திரு.சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூகத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவதில் ஆசிரியர்களுடைய பணி மிக உன்னதமானது. அந்தவகையில் 30 வருடங்களாக ஆசிரியர் பணியாற்றி பிரதி அதிபராக ஓய்வுபெறும் திரு.சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்கள் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மிக நீண்டகாலம் அரும்பணியாற்றியுள்ளார்.

25 ஆண்டுகள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலே ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் தமிழ்மொழி பாடத்தை சிறந்த முறையில் கற்பித்து பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கும் கல்வியியற்கல்லூரிகளுக்கும் அனுமதி பெறுவதற்கு காரணகர்த்தாவாக இருந்துள்ளார்.

அத்துடன் பாடசாலை வளாகத்தினுள் தமிழ்த்தாய் சிலை வள்ளுவர், ஔவையார் தாமோதரம்பிள்ளை போன்றோர்களது உருவச்சிலைகளை நிறுவமுன்னின்று உழைத்தமையானது இவருடைய தமிழ்ப்பற்று சிறந்த முறையில் வெளிக்கொணரப்பட்டுள்ளது. 12 வருடங்களாக பிரதி அதிபராக பல அதிபர்களோடு ஒன்றிணைந்து செயற்பட்ட இவருடைய ஓய்வுக்காலம் மிகச்சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறையருளை வேண்டிநிற்கின்றேன்.

ம.பிரதீபன்
பிரதேச செயலர், பிரதேச செயலகம்,வலிகாமம் கிழக்கு,கோப்பாய்

நல் ஆசானுக்கு வாழ்த்துக்கள்

162 ஆவது ஆண்டுகளாக கல்வி சேவை ஆற்றி வரும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் 25 வருடங்களாக ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் அளப்பெரிய சேவை ஆற்றி 15.07.2014 இல் மணிவிழாக்காணும் எனது அன்புக்குரிய ஆசிரியர் சிவ புண்ணியம் சிவலிங்கம் அவர்களை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன் .இவர் எமது கல்லூரியில் க.பொ.த சாதாரண வகுப்புக்களில் தமிழ் மொழிப் பாடத்தையும் சிறப்புறக் கற்பித்து பல மாணவர்களின் உயர் பெறுபேறுக்கு காரணமாய் அமைந்தார். எமது கல்லூரியில் 6 அதிபரின் கீழ் கடமையாற்றிய போதும் அதிபர்களுடனும் ஆசிரியர்களுடனும் நல்லுறவை வளர்த்து அதிபர்களுடன் ஒத்தாசையாக இருந்து கல்வி, இணைப் பாடவிதான செயற்பாடுகளின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்துள்ளார்.

உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களைக் கொண்ட தமிழ் சங்கத்தை அமைத்து ஆண்டுதோறும் தமிழ் விழா கொண்டாடுவதற்கும் காரணமாக இருந்தவர். தமிழ் சங்கத்தின் மூலம் பாடசாலை நுழைவாயில் கதவு, கலையரங்க அலங்கார வளைவு, பெரியார் சிலைகள் போன்றவற்றை அமைத்து வழி ஏற்படுத்திக் கொடுத்தார். பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் ஆண்டு தோறும் மார்கழி 27 இல் கல்லூரியில் கொண்டாடப்படும் அமரத்துவ அதிபர் தினத்தில் வெளியிடப்படும் சுவடு என்ற சஞ்சிகை வெளிவர உழைத்தார்.

ஏழை மாணவர்களின் கல்வி உயர்விற்கு மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்ட பிரதி அதிபர் அவர்கள் தமது ஓய்வு காலத்தில் நோய் நொடி அற்று குடும்பத்தாருடன் சிறப்புற வாழ்ந்து கல்வி பணிக்கும் கோவில் திருத்தொண்டுக்கும் அரும்பணி ஆற்ற வேண்டும் என்று எமது கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் விநாயகப்பெருமானை வேண்டி நிற்கிறேன்.

க.இ.இராசசேகரம், ஓய்வு நிலை அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

என் ஆசானுக்கு மணிவிழா வாழ்த்துக்கள்

தாரமும் குருவும் தலைவிதிப்படி என்ற கூற்றுக்கிணங்க நல்ல குருவாக எனக்கு தமிழ் பாடத்தை க.பொ.த சாதாரண தரத்திலும் , க.பொ.த உயர்தரத்திலும் போதித்து உயர் பெறுபேறுகளைப் பெறவும், 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது பல இன்னல்கள் மத்தியில் தன் இல்லத்திற்கு எம்மை அழைத்து இன்முகத்துடன் கற்பித்து உயர் கல்விக்கு வழிகாட்டிய எனது மதிப்பிற்குரிய ஆசான் திரு.சி.சிவலிங்கம் ஆசிரியர் இறையருள் பெற்று இன்புற வாழ வாழ்த்துகிறேன்.

திருமதி. செல்வறஞ்சினி சிவசக்திவேல்
ஆசிரியை (யா/ ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்)

வாழ்த்துச் செய்தி

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியினது பிரதி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.முப்பது வருடங்கள் கல்வித்துறையில் ஆசிரியராக, பிரதி அதிபராக நிறைவான சேவையை ஆற்றி இவர் ஓய்வு பெறுகின்றார். கலைமாணிப் பட்டதாரியான இவர் க.பொ.த (சா.த), (உ.த) வகுப்புக்களில் தமிழ் மொழிப் பாடத்தைச் சிறப்பாகக் கற்பிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

இதன் மூலம் இப்பாடசாலையில் இருந்து அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு இவர் வழிவகுத்தார்.

கல்லூரியின் அனைத்துச் செயற்பாடுகளிலும் தூணாக நின்று செயற்பட்ட இவரது பணிகளை பாராட்டுவதோடு இவரது ஓய்வுக்காலத்தில் மகிழ்வாக வாழ வாழ்த்துகின்றேன்.

செ.உதயகுமார்,வலய கல்விப்பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

வாழிய நெடிதே...

சிவபுண்ணியம் சிவலிங்கம் ஓய்வு பெறுகிறார் என்ற செய்தியைக்கேட்டதும் அப்பாடா... இவனுக்கும் அறுபதாகிவிட்டதா? ஆச்சரியத்தால் என்கண்கள் அகலத்திறந்தன. எழுபதுகளில் தொடங்கி எண்பதுகளில் நிறைவுற்ற அவரது பல்கலைக்கழக மாணவப்பருவம் நினைவுத் திரையில் நிழலாடியது .அச்சவேலி, அழகான, செழிப்பான கிராமம். மண்ணோடு போராடி மனதோடு உறவோடி வாழும் விவசா யக்குடும்பம்,

சி.சிவலிங்கம்–நீ
சி.சிவலிங்கராசாநான்

என்னுடன் ஒரு இராசா ஒட்டிக்கொண்டாலும் ஊராலும் உறவாலும் நட்பாலும் நான் சிவலிங்கம் தான் . பேராசிரியர் கைலாசபதியின் அபிமான மாணவனாய் மூதறிஞர் சிவராமலிங்கம் ஆசிரியரின் திருக்குறிப்புத்தொண்டனாய், மாணவனாய் பண்டிதர் க.வீரகத்தியைச் சைக்கிள் பாரிலேவைத்துத் தினமும் பயணிக்கும் பார்த்தசாரதியாய்,எனக்கு நண்பனாய்,மந்திரியாய், மாணவனாய் நீ வாழ்ந்த காலங்கள்– நினைக்க நினைக்க இனிக்கின்றன. அந்த நாள் வராதோ? என்ற ஆதங்கம் என் அடி மனதில் வேரோடுகிறது.

பண்பு,பணிவு,படிப்பு,தேடல், எல்லாம் ஒருங்கே அமைந்த மானுடம்,மனிதம்,சிவலிங்கம் உன் தமிழார்வமும் என் தமிழார்வமும், கைலாசபதியின் தமிழ் ஆற்றலும் திரிவேணி சங்கமம் ஆகிய நாட்கள் நினைக்க நினைக்க இனிக்கிறது. கவிதை,கட்டுரை,சிறுகதை, நாவல்,நீ படித்து வந்து கூறும் பாங்கு எனக்கு ஒரு படிப்பாகியது.உன் வளர்ச்சி கண்டு, உயர்ச்சி கண்டு, திறமை கண்டு உளம் மகிழ்ந்தவன் நான்.

நீ இராகினி தேவியை மணம் செய்தபோது
அந்த நிகழ்விலே மாப்பிள்ளை வீட்டு ஆளாய் நான் நின்றது...
உன் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தை
அரங்கேற்றிப் பேசி ஆனந்தித்தது.
ராகினியின் சிறுகதைத் தொகுதி வெளியீட்டிலே
கலந்து பேசி மகிழ்ந்தது
எனக்கு என்றும் இனிப்பான, உவப்பான
சிவலிங்கம் வாழிய நெடிதே,
இராகினி சிவலிங்கம் வாழிய இனிதே

அன்புடன்
பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

குருவைப் போற்றுவோம்

மாணவர் சமூகம் மகிழ்ந்தெடுக்கும் மணிவிழாவில் உதிக்கும் மலருக்கு மகத்தான என் குருவின் உத்தம சீடனாய் உருவான பெருமையுடன் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

எமது கல்லூரித்தாயின் வரலாற்றில் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக அளப்பெரும சேவையாற்றி ஆயிரக்கணக்கான உத்தம சீர்களை உருவாக்கிய பெருமை எம் குருநாதரைச்சாரும். இன்முகம்,இனிய வார்த்தை, எல்லோருக்கும் இனியவனாய் விளங்கும் விதம் இது எவராலும் புரிய முடியாத தத்துவம்.எப்படிப்பட்ட சிறுபட்டிகளையும் அன்பால் கட்டி தன்பால் ஈர்க்கும் உளவியலாளராலும் அறிய முடியாத உளவியல் திறன் இவை எம் ஆசானுக்கே தனித்துவம் கற்ற மாணவர்கள் அனைவரும் பணிவோடு புகழ்ந்துரைக்கும் அளவிற்கு உயர்ந்ததன் மர்மத்தைக் கூட கற்பிக்கும் ஆசிரியர்களாலே அறிந்து கொள்ள முடியாத உயர் சிறப்புடையவர்

ஐந்திற்கும் மேற்பட்ட கல்லூரி முதல்வர்கள் ஆற்றிய சேவைக்கு அடிப்படை தூணாக நின்று சேவையாற்றிய பெருமையும் எத்துறை சாய்ந்தாலும் கலைத்துறை சாயாது. ஏற்றப்பாதையில் உயற்றிய பெருமையும் எம் குருவையே சாரும்.

குரு வீட்டில் சென்று கற்ற குமுமத்தில் நானும் ஒருவன். சிவலிங்கத்தின் சிறந்த பகுதி ஆவுடையார். அது இலிங்கத்துடன் அத்துவிதமாய் கலந்த வடிவம். அதனை பிரித்தறிதல் முடியாது. சிவத்தின் பெருமை சக்தியைச்சாரும். சக்தியின் பெருமை சிவத்தைசாரும். அதுபோல குருநாதர் சிவலிங்கத்தையும் குருபத்தினி இராஜினி தேவியையும் எம்போன்ற சீடர்களால் பிரித்தறிய முடியாது. அவர்கள் ஈருடல் ஓர் உயிர் கொண்டவர்கள் நல்ல மேய்ப்பரற்ற தகர்களாகிய எமக்கு நல்ல மேய்ப்பர்களாக இறைவனால் படைக்கப்பட்ட வழிகாட்டிகள். அவர்கள் காட்டிய புனிதப் பணியில் எம்பயணம் தொடர்கின்றது. எம் குருநாதரும் அவர் தம் குருபத்தினியும் உடல் உள ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

மாணவர் சார்பில்
S.K.கிருபாகரன்
ஆசிரியர், தமிழ்த்துறை,
யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்.
நிர்வாக இயக்குநர், மதுரம் கல்வி நிறுவனம்.

த அகவை அறுபது

ருமைமிக்க பாடசாலைகளில் கோப்பாய்
யில் நீண்டகாலமாக ஆசிரியராக. பிரதி
மணிவிழாக் கண்ட எனது மதிப்பிற்குரிய
ர் மணிவிழாச்சிறப்பு மலரிற்கு வாழ்த்துச்
ன்.
ழியாம் தமிழை முறையான விதத்திலே
முன்னேற்றத்திற்கு வித்திட்ட வித்தகன்.
களை தலைமையேற்று மாணவர்களை
னாளன்.
ஆசானாய் விளங்கியதால் ஆசிரியருக்கும்
கரித்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
ரியரிற்கும் தனித்துவமான இடமுண்டு.
த்தி கல்வி போதித்து நல்மாணாக்கனாக்கி
வுக்கு மனமார்ந்த மணிவிழா வாழ்த்துக்
ம் சிறப்புடனும் வாழ வாழ்த்தி நிற்கும்
ரன், உதவி முகாமையாளர்,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வரைபடத்தை பீட்டர் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

எப்படி அது கிடைத்தது?

சாலையில் நடந்து வரும்போது, காற்றில் பறந்துவந்து பீட்டர் முகத்தில் மோதியது அந்தக் காகிதம்.

யாராவது தவறவிட்டிருக்க வேண்டும் என நினைத்த பீட்டர், சுற்று முற்றும் பார்த்தான்.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒருவரும் இல்லை.

பிறகு, அதில் இருந்ததைப் படித்தான்.

பெரும் புதையல்.....

ரகசியக் குறிப்புகள் என்று இருந்தது.

காடு, மலை, சமவெளி, பாலைவனம், கடல் எனப் படங்களுடன் குறிப்புகள் இருந்தன.

பீட்டருக்கு சுவாரஸ்யம் தொற்றிக் கொண்டது.

'இந்தப் புதையல் வேட்டை, ஒரு வீர சாகசமாக அமையப் போகிறது' என நினைத்தவன்,

ஒரு தோள் பையில் அத்தியாவசியமான பொருள்களை எடுத்துக்கொண்டு கிளம்பி விட்டான்.



நகரத்தைவிட்டு வெகுதூரம் நடந்து, காட்டுக்குள் போய் விட்டான்.

இப்போது, வரைபடத்தைப் பார்த்தான்.

'காட்டுராஜா' என்ற குறிப்பு இருந்தது.

கொஞ்ச தூரம் நடந்ததும், "கண்டேன்காட்டுராஜாவை" என்று வாய்விட்டுக் கத்தினான்.

அங்கே நின்றிருந்த ஒரு சிங்கத்தின் அருகே சென்றான்.

"காட்டு ராஜாவே, நீ பலசாலியாகவும் வீரம் நிறைந்தும் விளங்குகிறாய்.



நான் ஒரு புதையல் வேட்டைக்காகச் செல்கிறேன்.

என்னோடு நீயும் வருகிறாயா? என்று கேட்டான்.

சிங்கம், அவனை கம்பீரமாகப் பார்த்தது.

எனக்கும் காட்டுக்குள் இருந்து சலித்துவிட்டது.

உன்னோடு வருகிறேன்" என்று தலையைச் சிலுப்பி, சம்மதம் சொன்னது.

இருவரும் சேர்ந்து நடந்தனர்.

அடர்த்தியான மரங்கள், விலங்கினங்களின் சத்தம் பீட்டரைக் கொஞ்சம் கலவரப்படுத்தியது.

அந்தப் பக்கமாக வந்த சில பயங்கர விலங்குகள் எல்லாம் சிங்கம் அருகே இருந்ததால், பீட்டரை அமைதியாகக் கடந்துசென்றன.

இருவரும் காட்டைக் கடந்து, ஒரு பெரிய மலையை எதிர்கொண்டனர்.

பீட்டர் வரைபடக் குறிப்பைப் பார்த்தான்.

கூரிய பார்வை கொண்ட பட்சி' என்றிருந்தது.

கண்டேன் பட்சியை என்றான்.

மரம் ஒன்றில் அமர்ந்திருந்த அந்தக் கழுகைப் பார்த்து, கழுகாரே, நானும் சிங்க ராஜாவும் புதையல் வேட்டைக்காகப் போகிறோம்.

உமது உதவி தேவை.

உமது கூரிய பார்வையால், தூரத்தில் வரும் ஆபத்தைக் கண்டறிந்து எச்சரிக்கை செய்யலாம். எங்களோடு வர இயலுமா? என்று கேட்டான்.

அந்தக் கழுகு சம்மதம் தெரிவிக்க, மூவருமாக புதையலைத் தேடிக் கிளம்பினர்.

செங்குத்தான பாறையில் ஏறும்போது சிங்கம் வழுக்கி உருள, நல்ல வேளையாக பீட்டர் தடுத்துக் காப்பாற்றினான்.

ஒரு வழியாக மலையின் மறுபக்கத்தை அடைந்தனர்.

உயரப் பறந்த கழுகு, அவ்வப்போது சூழ்நிலையைப் பற்றி சொல்லி, வழி காட்டியது.

மூவரும் சமவெளியை அடைந்ததும், குறிப்பை எடுத்துப் பார்த்தான் பீட்டர்.

'போர்வை' என்று இருந்தது.

கொஞ்ச தூரத்தில் அந்த செம்மறி ஆடு நின்று கொண்டிருந்தது.

"செம்மறி ஆடே, எங்களுடைய புதையல் வேட்டையில் நீயும் இணைந்துகொள்கிறாயா? உன்னால் எங்களுக்கு நிச்சயம் பயன் ஏற்படும்" என்றான்.

செம்மறி ஆடும் தன் சம்மதத்தைத் தெரிவிக்க, நால்வருமாக புதையல் வேட்டையைத் தொடர்ந்தனர்.

தாழ்நிலப் பகுதியில் போகும் போது, குளிரால் நடுங்கினர்.

செம்மறி ஆட்டின் அரவணைப்பில் வெதுவெதுப்பாக அந்தக் குளிர்ப் பகுதியைக் கடந்து, சேர்ந்த இடம், பாலைவனம்.

வரைபடக் குறிப்பைப் பார்த்தான் பீட்டர்.

'பாலைவனக் கப்பல்' என்று இருந்தது.

அங்கே ஒரு ஒட்டகம் ஒய்யாரமாக நின்றுகொண்டிருந்தது.

பாலைவனக் கப்பலே, நாங்கள் புதையல் வேட்டைக்காகப் போகிறோம்.

இந்தப் பாலைவனத்தைக் கடக்க எங்களுக்கு உதவி செய்வதோடு, நீயும் புதையல் வேட்டையில் இணைந்து கொள்ளலாம்" என்று தன் விருப்பத்தைச் சொன்னான் பீட்டர்.

ஒட்டகமும் மகிழ்ச்சியோடு சம்மதித்தது.

தன் மீது மூவரையும் ஏற்றிக் கொண்டது.

மணற்கடலில் பயணத்தைத் தொடங்கினர்.

(தொடரும்)

11.2014 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1781 - கூலிகளை ஏற்றிச்சென்ற சொங் (Zong) என்ற கப்பல் மாலுமிகள் காப்புறுதிக்காக 133 ஆபிரிக்கர்களை கொன்று கடலுக்குள் எறிந்தனர்.
- 1830 - போலந்தில் ரஷ்யாவின் ஆட்சிக்கெதிராக புரட்சி வெடித்தது.
- 1855 - துருக்கியில் தாதியர் பயிற்சிக்காக புளோரன்ஸ் நைட்டிங்கேல் நிதியம் நிறுவப்பட்டது.
- 1877 - தோமஸ் அல்வா எடிசன் போனோகிராஃப் என்ற ஒலிப்பதிவுக் கருவியைக் முதற்தடவையாகக் காட்சிப்படுத்தினார்.
- 1922 - ஹவார்ட் கார்ட்டர் பண்டைய எகிப்தின் துட்டன் காமுன் மன்னனின் கல்லறையை பொதுமக்களின் பார்வைக்கு திறந்து விட்டார்.
- 1929 - ஐக்கிய அமெரிக்காவின் ரிச்சார்ட் பயேர்ட் தென்முனை மேல் பறந்த முதல் மனிதரானார்.
- 1945 - யூகொஸ்லாவிய சமஷ்டி மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1947 - பாலஸ்தீனத்தைப் பிரிப்பதென ஐ.நா பொதுச் சபை முடிவெடுத்தது.
- 1950 - வட கொரியா மற்றும் சீனப்படைகள் ஐ.நா படைகளை வட கொரியாவிலிருந்து வெளியேறும்படி செய்தனர்.
- 1961 - நாசாவின் மேர்க்குரி-அட்லஸ் 5 விண்கலம் சிம்பன்சி ஒன்றை ஏற்றிக்கொண்டு விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இது பூமியை இரு தடவைகள் சுற்றிவந்து புவேர்ட்டோ ரிக்கோவில் இறங்கியது.
- 1963 - 118 பேருடன் சென்ற கனடாவின் விமானம் மொனட்ரியாலில் விபத்துக்குள்ளாகியது.
- 1982 - ஐ.நா பொது அவை சோவியத்படைகளை ஆப்கானிஸ்தானிலிருந்து உடனடியாக விலகும் படி சோவியத் ஒன்றியத்தைக் கேட்டது.
- 2006 - அணுவாயுதங்களை எடுத்துச் சென்று 700 கி.மீ தூரம் உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய ஷாகீன் 1 என்ற ஏவுகணை சோதனையை பாகிஸ்தான் வெற்றிகரமாக நடத்தியது.

பிறப்புகள்

- 1889 - எட்வின் ஹபிள், வானிலையாளர் (இ. 1953)
- 1908 - என். எஸ். கிருஷ்ணன், தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர் (இ. 1957)
- 1913 - எஸ். வி. சகஸ்ரநாமம், நாடகக் கலைஞர், திரைப்பட நடிகர் (இ. 1988)

இறப்புகள

- 1989 - மருதகாசி, திரைப்படப் பாடலாசிரியர் (பி. 1920)
- 1993 - ஜே. ஆர். டி. டாடா, இந்தியாவின் முதன்மையான தொழிலதிபர்களுள் ஒருவர், இந்திய வானூரதிப் போக்குவரத்தின் முன்னோடி (பி. 1904)
- 2008 - ஜோர்ன் அட்சன், டென்மார்க் கட்டடக்கலைஞர் (பி. 1918)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கருவாச்சி காவியம்

வைரமுத்து– 05

...அத்துக்கிட்டே போயிரு. இன்னொரு பொழப்புப் பொழைக்க எங்க திரேகத்துலயும் நெஞ்சுக்கூட்லயும் சக்தி இல்ல சாமி. கையெடுத்து கும்பு டறேன். எம் பொண்ணத் தீத்து விட்றாதீக. சேத்துவையுங்க.

இந்தக் கெட்டசாதிப் பயலக் கெஞ்சிக் கஞ்சி குடிக்காட்டி என்னா? அவன் போக்குலயே அத்துவிட்டுப் போடி. ஆம்பளைக்கும் மூஞ்சியில மீசை ன்னா பொம்பளைக்கும் மொழங்கா ல்ல மீச. பெரிய மூக்கி கும்புட்டு அழுகிறதக் காணப் பொறுக்காத வைத்தியச்சி கருவாச்சியத் தாங்கிப் பிடிச்சுக்கிட்டே கத்துறா.

ஏ கெழவி வாயப்பொத்தி ஒக்காரு. இல்லாட்டி ஒன்னிய அஞ்சா ஆறா மடிச்சு அடுப்புல வச்சு எரிச்சுப் புடுவோம். கட்டையன் கையாளுக பன்னியான் பேரன் சலம்பல் பாண்டி ஒலக்கையன் மூணு பேரும் எந்திரிச்சுக்கத்த மொதல கம்பட்டியிலிருந்து வந்திருந்த பெரிய மூக்கி அண்ணன் மகன்ங்க நாலு பேரும் தவ்வி எந்திரிச்சாங்க இடுப்புல சூரியத் தடவிக்கிட்டு.

ஏலே விருதாப் பயலுகளா?! அது ஆம்பளையில்லாத வீடாயிருக்கலாம். ஆனா இது ஆம்பளையில்லாத ஊரு இல்லடா ஒக்காருங்க. காவற்க்காரர்ச் சக்கணன் ஒரு அமட்டு அமட்டவும் மொனங்கிக்கிட்டே ஒக்காந்தாங்க ரெண்டு தரப்பும்.

ஏம்ப்பா... கட்டையன் வெவகாரத்த அவன் சொல்லிட்டான். அதுக்கு கருவாச்சி என்ன மறு வார்த்த சொல்றான்னு கேக்கணுமா? இல்லையாகுக்கு நோவு வந்த கோழி மாதிரி பம்பி கிட்டேயிருந்தா எப்பிடி? வரச் சொல்லுங்கப்பா.

வைத்தியச்சியும் சோட்டுக்காரியும் பவளமும் வைத்தாங்கலாக் கட்டியார ஒரு மொளப்பாரி நடந்து வாரது மாதிரி வாராய்யா கருவாச்சி. ஒம் பொழப்பா தாயி இப்படிப் போச்சுன்னு ஊரே உச்சு கொட்டிப் பாக்குது அவள.

கருவாச்சி ஒண்ணும் ஒங்கு சாங்கான உயரம் இல்ல குட்டச்சிதான்.

ஆனா எட்டுரு எல்லையில அப்படி ஒரு அம்சமான பொம்பல இல்ல.

சுத்திவச்சுத் தட்டித் தட்டி ஒப்பரவு பண்ணினது மாதிரி நெத்தி.... கார்த்திகை மாசம் கட்டியில எண்ணெய நெப்பி தீபம் போடுவோமா இல்லையா அப்படி ரெண்டு கண்ணு... மினுக்கு மினுக்குன்னு. சிறுக்கி மகளுக்கு அடிச்சு வச்ச கத்தி மாதிரி செவக்கி வச்ச மூக்கு சும்மா மதுரை மீனாச்சிக்கு இருக்கிறமாதிரி. சின்ன வாயி. செப்பு உதடு. என் உடம்புக்குத் தேவையானது போக ஒரு பொட்டுச் சத எச்சா மிச்சா எங்கயுமில்ல பாத்துக்குங்க மாதிரி வழிச்சு விட்ட தேகம்.

நெறம் கறுப்பு; கறுப்புல பல கறுப்பு இருக்கு. அட்டக் கறுப்பு, அடிச்சட்டிக் கறுப்பு, கெட்டிக் கறுப்பு, கரிக் கறுப்பு, பார் மேகக் கறுப்பு, காக்கா கறுப்பு குயில் கறுப்பு, இப்படி எத்தனையோ கறுப்பு கருவாச்சி அழகுக் கறுப்பு அம்சமான கறுப்பு நவ்வாப்பழத் தோல்ல முனு மினுமினுன்னு ஒரு மின்னலடிக்குமா இல்லையா... அப்படிக் கண்ணுக்குக் குளுச்சியா ஒரு கறுப்பு ஆத்தா மாதிரியே கருவாச்சியும் காது வளத்தவ. லவுக்க போடாத பொம்பள சீலையச் சுத்தி வச்ச செப்புக் கொடம். ஒச்சம் சொல்லணுமானா ஒண்ணே ஒண்ணு சொல்லலாம். அவ கால் ரெண்டுலயும் கட்ட வெரலும் அடுத்த வெரலும் ஒண்ணே ஒண்ணு தொட்டுக்கிட்டதில்ல.

இந்த சென்மத்துல ஒண்ணு சேர மாட்டோம்ன்னு ஒண்ணு வடக்க காத்து நிக்கும். ஒண்ணு தெற்க பாத்து நிக்கும். (தொடரும்)

ஆத்ம ஞானத்தைத் தேடி

கவலைகள் இன்றி வாழ்தல்!

...மக்கள் என்னிடம் சொல்கிறார்கள். ஸ்வாமிஜி நாங்கள் விடுமுறைக்காகச் சென்றிருந்தோம். ஆனால், அது நரகமாகிவிட்டது. நான் சொல்கிறேன், உங்களுக்குத் தான் நரகம் இருக்கிறது. நீங்கள் செல்லுமிடமெல்லாம் அதை உங்களுடனேயே எடுத்துச் சொல்கிறீர்கள். அதனால் நீங்கள் எங்கு சென்றாலும் அதைக் கண்டுதானே ஆக வேண்டும். நீங்கள் வாழும்போது மற்றவர்களுக்கு நரகத்தைக் கொடுக்கிறீர்கள். நீங்கள் இறக்கும் பொழுது உங்களுக்கு நரகம் கிடைக்கிறது!

நீங்கள் எங்கு சென்றாலும் உங்கள் நரகத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவே விரும்புகிறீர்கள். நீங்கள் நரகத்துடன் மிகவும் பரீச்சியமாகி வீட்டீர்கள். அதனால் சொர்க்கத்தைக் காட்டினாலும் நீங்கள் அங்கே பொருத்தமற்று இருப்பதாக உணர்கிறீர்கள்.

ஒரு சின்னக் கதை.....

ஒரு நாள் மூன்று மீனவபெண்கள் மீன் விற்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பும் சமயம் இரவு வெகு நேரமாகிவிட்டது. அன்று இரவு வழியில் ஏதாவது ஒரு வீட்டில் தங்கலாம் என்று முடிவு செய்தார்கள். பிழைப்பிற்காக மல்லிகைப்பூக்களை விற்று வாழ்க்கை நடத்தும் ஒரு பெண்ணின் வீட்டிற்குச் சென்று அன்று இரவு அங்கு தங்கிக்கொள்ள அனுமதி கேட்டனர். அந்தப் பெண் சம்மதிக்க அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அறையில் உறங்கச் சென்றனர். அந்த வீடு முழுவதும் மல்லிகையின் மணம் நிரம்பியிருந்தது. ஆனால், எவ்வளவு முயன்றும் அந்த மீனவப் பெண்களால் உறங்க முடியவில்லை. அவர்கள் உருண்டு புரண்டு கொண்டிருந்தனர். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பிறகு திடிரென்று அவர்களின் ஒருவர் எழுந்து சென்று காலியான மீன் கூடையை கொண்டு வந்து அவர்கள் தலைமாட்டருகே வைத்துக் கொண்டவுடன் சிறிது நேரத்தில் உறங்கிவிட்டனர்!

(சிரிப்பு)

நாம் எங்கு சென்றாலும் நமது கவலைகளையும் உடன் கொண்டு செல்கிறோம். அவர்களை போஷிப்பதில் இதமாக உணர்கிறோம். ஆனால், எப்போதும் கவலையுடன் இருப்பதாக புகாரும் செய்கிறோம்! நாம் சில விடயங்களிலிருந்து விடுதலை பெற விரும்புகிறோம். ஆனால், உருமாற்றமடைவதையும் அதிலிருந்து விடுதலையடைவதையும் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறோம். இவ்வாறு நாம் நமக்

ஆன்மீகம் 89

குள்ளேயே முரண்பட்டிருக்கிறோம்

சொல்லுங்கள்..... ஏதேனும் கேள்விகள்?

ஸ்வாமிஜி இதிலிருந்து எவ்வாறு விடுதலை பெறுவது? எங்களுடைய மனோபாவம் எப்படி இருக்க வேண்டும்?

எவ்வாறு விடுதலை பெறுவது. மேலும் உங்களுடைய மனோபாவம் எப்படி இருக்க வேண்டும். இரண்டு கேள்விகளுக்கும் ஒரே ஒரு பதில்தான்; நீங்கள் என்ன செய்தாலும் ஆனந்தமான உணர்வுடன் செய்ய முயல வேண்டும் அவ்வளவுதான்! பாருங்கள் உங்களுக்குள் இருக்கும் அந்த வெற்றிடம் அல்லது உங்கள் விழிப்புணர்வுதான்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் திரு. சிவபுண்ணியம் சிவலிங்கம் (B.A.Dip.in

(2014.07.15 இல் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

ஆசிச் செய்தி

யாகோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நிறைவான கல்விப் பணியாற்றியவர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் சிவ புண்ணியம் சிவலிங்கம் என்றால் மிகையாகாது. ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக அவர் கடமையாற்றிய காலங்களில் அவரின் நற்பண்புகளையும், அமைதியான குணத்தையும் கண்டு வியந்திருக்கின்றேன். முருகன் மீது பக்தி கொண்ட இவர் தங்கள் குல தெய்வமாகிய காட்டு மலைக் கந்தசுவாமி மீது பிள்ளைத் தமிழ் பாடியது இவரது சமயப் பற்றுக்கு எடுத்துக் காட்டாகும். தமிழ் புலமையும், ஆன்மீக நாட்டமும் கொண்ட இவர் தம்மாணவர்களிடமும் தமிழையும், சமயப் பற்றையும் ஊட்டினார்.

இவரிடம் கல்விகற்ற மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் பதவிகளிலும், உயர்ந்த நிலையிலும் வாழ்கின்றார்கள். மாணவர்கள் மத்தியிலும், சமூகத்திலும் அவருக்கிருக்கும் நன்மதிப்பு அவரது சேவைக்குக் கிடைத்த கௌரவம் எனலாம்.

ஓய்வு காலத்தில் தனது குடும்பத்துடன் நோய் நொடியின்றி மகிழ்வுடன் வாழ வெள்ளெருவைப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

ச.பசுபதீஸ்வரசர்மா
வெள்ளெருவைப் பிள்ளையார்
கோவில், கோப்பாய்.

கல்விப் பணி வரலாற்றில் தடம் பதித்தவர்

யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் கல்விப் பணி வரலாற்றில் தடம்பதித்த திரு.சி.சிவலிங்கம் எனும் கனவானைக் கல்லூரிச் சமூகம் இலகுவில் மறக்கமுடியாது. தனது 30 வருட கல்விச் சேவையில் 25 வருடங்களை இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்தவர். ஆசிரியராக, பிரதி அதிபராக அவர் ஆற்றிய பணியை அவரது விசுவாசம் மிக்க மாணவர்கள் தொகையை வைத்துக் கணிப்பிடலாம்.

புகழ்பெற்ற பேராசிரியர் K.கைலாசபதி பண்டிதர், க.வீரகத்தி, பேராசான் சிவராமலிங்கம்பிள்ளை போன்றோரால் உருவாக்கப்பெற்ற தமிழாசிரியர் சி.சிவலிங்கம் அவர்கள் தன்னுடைய அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர் பணியால் பல மாணவர்களை நன்நிலைக்கு இட்டுச் சென்றுள்ளார்.

தமிழ்த்துறை வளர்ச்சிக்காகத் தமிழ்ச்சங்கத்தை விருத்தி செய்து பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டவர். தான் மட்டுமன்றித் தனது பாரியாரையும் இக்கல்லூரியின் வளர்ச்சியின் பால் ஈர்த்தவர். பல வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்து அதிக மாணவ நெஞ்சங்களில் நீங்காத இடம்பெற்றவர்.

ஆறு அதிபர்களுடன் பணியாற்றி பாடசாலை நிர்வாக நடவடிக்கைகளிலும் பக்கபலமாக விளங்கும் திரு.சி.சிவலிங்கம் அவர்கள் இக்கல்லூரிக்கு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா.

தனது அகவை அறுபதில் ஓய்வு பெற்றாலும் இக்கல்லூரியின் வளர்ச்சியின் பால் அவரது சேவை தொடரவும் அவரது நீடித்த வளமான எதிர்காலத்துக்காகப் பிரார்த்திப்போம்.

திரு.ச.வேலழகன்
அதிபர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

கல்லூரியின் ஒளிவிளக்கு

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து அங்கு தனக்கென ஒரு தனித்தடம் பதித்து ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களின் பெருமதிப்பைப் பெற்ற ஆசிரிய பெருந்தகை திரு.சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்கள் ஓய்வு பெறுவதை அறிந்த போது மிகவும் கவலையாக உள்ளது. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அவரின் சேவை ஏறக்குறைய கால்நூற்றாண்டுகளுக்கு மேற்பட்டது. இதில் 5 வருடங்கள் என்னுடன் அங்கு கடமையாற்றியுள்ளார். ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பொறுமை, தியாகம், சீரிய சிந்தனை போன்ற உயரிய பண்புகளைக் கொண்டவராக புன்னகை பூத்த முகத்துடன் என்றும் காட்சியளிப்பார். அடக்கு முறையும் அளவு கடந்த அதிகாரமும் ஆசிரியர்களிடம் இருக்கவேண்டிய பண்புகளல்ல என்ற உயரிய நோக்குடன் செயற்பட்ட ஒரு ஆசிரியர். ஆசிரியர் உயிர் ஜீவன்களின் தேவைகளுக்கு, உணர்வுகளுக்கு ஏற்ப தொழிற்படவேண்டும் என்ற நோக்குடன் தனது தொழிலை மிகவும் நன்முறையில் செய்த ஒரு ஆசான் சிவலிங்கம் என்றால் மிகையாகாது. பயனுறுதி மிக்க ஆசிரியர்கள் அறிவுத்திறன், மனப்பாங்கு என்பவற்றை மாணவரில் விருத்தி செய்யும் கற்பித்தலை மாத்திரம் மேற்கொள்ளலாகாது என்பதை உணர்ந்து பல்கிப் பெருகி வரும் தேவைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளும் சமநிலை ஆளுமை மிக்க ஒரு சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் செயற்பட்ட உத்தமர்.

வெறுமனே மனனம் செய்வதை அடிப்படையாகக் கொள்ளாது சிந்தித்தல், நியாயித்தல், பரிசோதனை செய்தல் போன்ற பரந்த நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் மாணவர்களை உருவாக்கியவர். தனது கற்பித்தலால் ஏற்படும் கற்றலினால் அறிவுப் பாத்திரங்களில் திரட்டி வைக்கப்படாமல் புத்தகங்களில் பதித்து வைக்கப்படாமல் மாணவர்களின் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியவர்.

தமிழைத் தமிழாகக் கற்பித்து அதில் ஆர்வத்தை ஊட்டி இன்பத்தைப்பெருக்கி உள்ளப்பண்பை ஏற்படுத்தி நல்ல சமுதாயத்தை தோற்றுவித்த ஒரு வித்தகர். தனது கவர்ச்சிகரமான கற்பித்தல் மூலம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்திய ஒரு ஆசான். அவர் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப முகபாவனையுடனும் தொனியுடனும் கற்பித்தல் பணியை மேற்கொண்டது மட்டுமன்றி தான் ஒரு நடிகர்போலவும் வகுப்பறையை ஒரு நாடகமேடை போலவும் மாற்றித் தமிழைக் கற்பிக்கும் முறையில் கற்பித்து மாணவரை இன்பமடையச் செய்து மாணவர் நன்மதிப்பைப் பெற்ற, மாணவர் மனதில் நீங்கா இடம்பெற்ற ஒரு சிறந்த மாணவர் வழிகாட்டி.

அவரது எதிர்காலம் அவரது குடும்பத்துடன் என்றும் மகிழ்ச்சியுடன் வாழ அவரது கல்விப்பணி வழிகாட்டும். இன்று போல் என்றும் வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

தம்பிப்பிள்ளை- முத்துக்குமாரசாமி, ஓய்வு நிலை அதிபர், யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கொ/ பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி.

யாழ். ஆயரின் ஆசிச் செய்தி

காலத்தால் அழியாதது கல்விச் செல்வம். கல்வியைக்கற்று உயர்ந்தவர்கள் தாம் கற்றதோடு நின்றுவிடாமல் அதனை மற்றவர்களுக்கும் கற்பிக்கும் சேவை ஓர் உயர்ந்த சேவை. எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற வார்த்தைக்கு ஒப்ப கடந்த 30 வருட கால ஆசிரிய சேவையை ஆற்றி ஓய்வு பெறும் ஆசிரியர் திரு.சிவபுண்ணியம் சிவலிங்கம் அவர்களைப் பற்றி நான் அறிந்தவைகளை கொண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் உப அதிபராக பணியாற்றி ஓய்வு பெறும் ஆசிரியர் அவர்களின் சேவை பாராட்டத்தக்கது. மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு வழிகாட்டும் பணியில் தன்னை இணைத்து பல அரிய சேவைகளை பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் இவர் ஆற்றி உள்ளார்.

தனது ஓய்வு நிலையை அடைந்து இவர் கல்விச்சேவையில் இருந்து இளைப்பாறி னாலும் தொடர்ந்தும் மாணவர்களின் கல்வித்தேடலில் இவர் பணிபுரியவும் தன் ஓய்வு நிலையில் நல் உடல் உள சுகத்துடன் வாழவும் இறைவனின் அருட்துணை வேண்டி செபிப்பதுடன் எனது ஆசியையும்,வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றேன்.

பேரருட்திரு.இ.தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ்.ஆயர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

தமிழ்ப் பேராசான்

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல் என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக பிரதி அதிபராக உயரிய பணியாற்றி மணிவிழாக் காணும் திரு.சி.சிவலிங்கம் அவர்களது சேவை நயப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.மூன்று தசாப்த ஆசிரியர் பணியில் இக்கல்லூரியில் வெள்ளிவிழாக் காணும் திரு. சி.சிவலிங்கம் அவர்கள் சிறந்த தமிழ்ப் பேராசான் ஆவார். மாணவர்களது உள ஆற்றல்களுக்கு ஏற்ப கற்றல் கற்பித்தல் முறைமைகளை தனக்கே உரித்தான பாணியில் கையாண்டு தனக்கென ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கியவர்.

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார் முன் கற்ற செலச்சொல்லுவார்

என்பதற்கிணங்க அவரது புலமையின் வெளிப்பாடு இவர் யாழ். கல்வி வலய ஆளுகைச் சபையின் (ZMP) தமிழ்ப்பாட வளவாளராகப் பரிணமிக்க ஏதுவாயிற்று. வலய ஆளுகைச் சபை வளவாளராக பணிபுரிந்த காலப்பகுதியில் தமிழ்த்துறை சார்ந்த ஆசிரியர்களுக்கு சிறந்த வழிப்படுத்தலை மேற்கொண்டு தமிழ்ப்பாட உயர் அடைவிற்கு வித்திட்ட பெருமைக்குரியவர் திரு. சிவலிங்கம் அவர்கள்.கல்லூரித் தாயின் பௌதீக வளத் தேடலுக்கு அவரது பங்களிப்பு அளப்பரியது. தமிழ்ச்சங்கத்தின் ஊடாக கல்லூரி வளாகத்தில் தமிழ் அறிஞர்களது சிலைகளை நிறுவியமை, தமிழ்த்துறைசார் நூல்களை வெளியிட்டு வைத்தமை தமிழின் பால் அவர் கொண்ட தீராக் காதலின் வெளிப்பாடு எனலாம்.இவர் தனது ஓய்வுக்காலத்தில் தமிழன்னைக்கு தொண்டாற்றி குடும்பத்தவருடன் சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல சந்நிதியான் துணை நிற்பானாக.

யோ.ரவீந்திரன், பி.க.ப. , வடமராட்சி

கல்லூரியின் சாதனையாளனே வாழ்க!

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கால் நூற்றாண்டு காலம் ஆசிரியராக, பிரதி அதிபராகச் சேவையாற்றிய நண்பன் திரு.சி.சிவலிங்கம் 15.7.2014 இல் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். இவர் இக்காலத்தில் ஆற்றிய சேவைகள் கல்லூரி சமூகத்தால் மறக்க முடியாதவை. இவர் தமிழையும் தமிழ் இலக்கிய வரலாற்றையும் கற்பித்து க.பொ.த (சாதாரண, உயர்தர)பெறுபேற்றை அதிகரிக்க அரும்பாடுபட்டார்.

இவர் கற்பிக்கும் போதும் உரையாற்றும் வேளையிலும் சிந்தனைத்திறன், ஆய்வுத்திறன், விமர்சிக்கும் திறன் போன்றன வெளிப்படுவதையும் இலக்கிய நயத்துடன் பேசுவதையும் கேட்டிருக்கின்றேன். பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி போன்ற மகான்களிடம் கல்வி கற்ற காரணத்தால் அவர்களின் சாயல் இவரின் மொழி நடையில் பிரதிபலிப்பதைக் காண முடியும். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அநேகமான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு மூல காரணமாக இருந்துள்ளார்.

கல்லூரி வளாகத்தில் தமிழ்த்தாய், வள்ளுவர் ,ஔவையார் தாமோதரம்பிள்ளை போன்றோரின் சிலைகளை நிறுவி மாணவர்களிடையே தமிழ்ப்பற்றை ஊட்டினார். கல்லூரியில் தமிழ் விழா ஆண்டு தோறும் நடைபெறுவதற்கு காரண கர்த்தாவாக இருந்தவர். கல்லூரியின் 150 ஆவது ஆண்டு மலர், 160 ஆவது ஆண்டு நிறைவு மலர், பல்வேறு சஞ்சிகைகளின் ஆக்கங்களின் சிற்பியாக விளங்கி எல்லா அதிபர்களினதும் நன்மதிப்பை பெற்றவர். கல்லூரியின் பிரதி அதிபராகவிருந்து பாடவிதானம், இணைபாட விதானம் போன்ற கலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கு துணையாக இருந்தவர்.

நான் இக் கல்லூரியில் அதிபராக இருந்த பொழுது தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியவர். என்னால் முன்னெடுக்கப்பட்ட அனைத்துச் செயற்றிட்டங்களையும் பொருத்தமான ஆசிரியர்கள் ஊடாக நிறைவேற்றிய செயல் வீரன் இத்தகைய பெருமைக்குரிய ஆசிரியர் கல்லூரியிலிருந்து ஓய்வு பெறுவது இக் கல்லூரிக்கும் கல்விச் சமூகத்திற்கும் இழப்பாக கருதினாலும் ஓய்வு தவிர்க்க முடியாதது. இவர் ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடனும் நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் துணை புரிவாராக

அ.அகிலதாஸ்,முன்னாள் அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, கோட்டக் கல்விப்பணிப்பாளர்-நல்லூர்.

ஆரம்பக் கல்வி:-
உயர்தரம் :-
உயர்கல்வி :
தொழில் தகைமை :-
சேவை:-

சேவை வி
கல்வி :
யா/ அச்சு
யா/ புத்து
யாழ்ப்பா
தேசிய கல்
K.G/புனித
எட்
198
யா/ கோ
198
பிரதி அதிபர்:- 2002-05
பதில் அதிபர்:- 2007-09
மாண்புறு ஆசானை மனநிறை
மணிவிழாக்குமுனம் ப

அறிவூட்டிய ஆசானிற்

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தின் ஆ
கிறிஸ்தவக் கல்லூரியும் ஒன்றாகும். இக்கல்லூ
அதிபராக அரும்பணியாற்றி 16.07.2014 அன்
ஆசான் சிவபுண்ணியம்-சிவலிங்கம் அவர்களி
செய்தி வழங்குவதையிட்டு பேருவகை கொள்கிறே
சிறந்த ஆசிரியத்துவ சேவையில் தாய்மெ
மாணவர்களிற்குப் போதித்து மாணவர்களின்
பாடசாலையின் இணைபாடவிதான செயற்பாடு
நெறிப்படுத்தி செவ்வனே செயலாற்றிய செயற்றி
மகத்தான ஆசிரியப்பணியில் மீத்திறன் மிக்க
அடுத்தடியாய் பிரதி அதிபர் ஆசனத்தையும் அ
உயர்வுக்காய் உழைத்தவர்களில் சிவலிங்கம் அ
எனது பாடசாலை காலத்தில் என்னை வழிப்
இன்று என் உயர்வு கண்டு மனம்மகிழும் என்கு
களை செப்புவதோடு ஓய்வு நிலைக் காலத்தில் சீ
தங்கள் மாணவன், ப.பரமேஸ்
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணித்தவர்கள் நினைவாக நடப்படும் மரங்கள் உயிருள்ள நினைவாலயமே!

அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு

எமக்காகப் போராடியவர்களின் நினைவு இடங்கள் நிர்மூலமாக்கப்பட்டு அந்த இடங்களில் இன்று படையினர் நிலைகொண்டிருக்கின்றனர். அங்கு சென்று அஞ்சலி செலுத்தமுடியாத நிலையில் அவர்களின் நினைவாக மரங்களை நாட்டுகின்றோம்.

மரணித்தவர்களின் நினைவாக நடப்படும் மரங்கள் ஒவ்வொன்றும் ஓர் உயிருள்ள நினைவாலயமே என்று வடக்கு மாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வரணியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மரநடுகை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளோ அல்லது வேறு போராளிகளோ இலங்கை அரசாங்கத்தின் பார்வையில் பயங்கரவாதிகளாகத் தெரியலாம். ஆனால், அவர்கள் எங்களின் இரத்த உறவுகள். எங்களுக்காகத் தங்கள் உயிர்களைக் கொடுத்த தியாக சீலர்களுக்கு யாரும் அஞ்சலி செலுத்தக்கூடாது என்பதில் இராணுவம் மிகக்கவனமாக இருக்கிறது. நினைவு நடுகற்களை அழிப்பதன் மூலமோ, நினைவுதின நிகழ்ச்சிகளுக்குத் தடை விதிப்பதன் மூலமோ மக்கள் மனங்களில் இருக்கும் நினைவுகளை ஒருபோதும் அழித்துவிடமுடியாது என்பதை அரசாங்கமோ, இராணுவமோ புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை.

நாங்கள் நடுகின்ற மரங்கள் வெறும் மரங்கள் அல்ல. மரங்களைத் தெய்வமாக வழிபட்ட மரபைக் கொண்டவர்கள் நாங்கள். அதன் தொடர்ச்சியர்கத்தான் இந்து ஆலயங்களில் தல விருட்சங்கள் காணப்படுகின்றன. அதுமட்டும் அல்லாது, சங்க இலக்கியங்களில் தமிழர்கள் மரங்களை உறவினர்களாகப் போற்றியதாகப் பதிவுகள் உள்ளன. எனவே மரம் என்பது தமிழர்களின் வாழ்வியலில் உணர்வுபூர்வமாகக் கலந்துவிட்ட ஒன்று. எனவே அந்த மரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் எமது உணர்வுகளுக்கு வடிகால் தேடுவதோடு, சுற்றுச்சூழலையும் பாதுகாத்துக்கொள்ளமுடிகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் விவசாய அமைச்சர் பொ.ஐங்கர நேசனோடு, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாணசபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், வே.சிவயோகன், ச.சுகிர்தன், சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் சி.துரைராசா, வலி வடக்கு பிரதேசசபைத் தலைவர் ச.சஜீவன் ஆகியோருடன் பொதுமக்களும் கலந்துகொண்டு மரங்களை நாட்டி வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

பலசேனா போகவேண்டிய இடத்துக்கே போயுள்ளது

(கொழும்பு)

பொது பல சேனா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளமை குறித்து தான் கவலையடையவில்லை என பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பொது பலசேனாவின் ஆதரவு தமக்கு அவசியமில்லை என்பதால் தனது அணியினர் பொது பலசேனாவுடன் பேச்சுக்களைக்கூட மேற்கொள்ளவில்லை. அவர்கள் அவர்களுக்குரிய இடத்திற்கு சென்று விட்டனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிங்கள கடும்போக்கு அமைப்பான பொதுபல சேனா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அறிவுரைக்கு அமைய எதிரணி பொது வேட்பாளரான முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபாலவுக்கு ஆதரவு அளிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

ஹரீன் எம்முடன் இணைந்தால் பதவியைக் கொடுக்கத் தயார்!

முதலமைச்சர் சஷீந்திர தெரிவிப்பு

(கொழும்பு)

ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஹரீன் பெர்னாண்டோ எமது கட்சியில் இணைந்து கொண்டாரேயானால் மாகாண முதலமைச்சர் பதவியையும் அவருக்கு விட்டுக்கொடுக்க தயாராகவுள்ளேன் என ஊவா முதலமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபை அமர்வு நிறைவு பெற்ற பின் மாகாண முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஊவா மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஹரீன் பெர்னாண்டோ உட்பட சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மூவர் தற்போதைய நிலையில் எமது ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இப்பேச்சுவார்த்தையில் சுமுக நிலை ஏற்படுமேயானால் ஹரீன பெர்னாண்டோவுக்கு மாகாண முதலமைச்சர் பதவியையும் விட்டுக் கொடுக்க நான் தயாராகவுள்ளேன்.

ஊவா மாகாண சபையை ஐ.தே. கட்சி பொறுப் பேற்குமென்ற நிலைப்பாடே இருந்து வந்தது. சபையின் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து பலர் ஐ.தே.க. வுக்கு தாவுவரென்று எதிர்பார்க்கப்பட்டது. அதனால்தான் நானும் சபை அமர்வில் கலந்து கொண்டேன்.

எதிர்க்கட்சியினர் கூறுவது போன்று ஊவா மாகாண சபையிலிருந்து எவரும் ஆளும் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்கு செல்லமாட்டார்கள். இதனை நான் உறுதியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

இன்று ஒரு தகவல்

தாவும் மனிதர்கள்

உண்மையும் நேர்மையும் உயர்வதற்கு வழிகள். அதைவிட்டு விட்டு உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே உயரப் போக வேண்டும் என்று நினைக்கக் கூடாது.

அதேபோல் செய்யும் தொழிலே தெய்வம். எந்தத் தொழிலைச் செய்தாலும் அந்தத் தொழிலுக்குரிய பெருமையை புரிந்து கொண்டு அதில் ஈடுபடவேண்டும்.

அதை விட்டு என்ன பிழைப்பு இது. இந்த தொழிலை மனுஷன் செய்வானா? என்று சொல்லிக் கொண்டே அந்தத் தொழிலை தொடர்ந்து செய்பவர்கள் நம்மில் பல்ருண்டு.

எனக்கு வேண்டப்பட்ட நண்பர் ஒருவரை சந்தித்தேன். அவர் ஒரு கதை சொன்னார். இந்தக் கருத்துக்கு அந்தக் கதை பொருத்தமாக இருக்கும்.

அதாவது ஒரு பெரிய மலைப்பகுதி. அந்த மலையடி வாரத்தில் ஒரு சிற்பி உட்கார்ந்து சிலை வடித்துக் கொண்டிருந்தான்.

கையில் ஒரு சின்ன உளியை வைத்துக் கொண்டு ஒரு பெரிய கருங்கல் பாறையை கொஞ்சம் கொஞ்சமாக உடைத்துக் கொண்டிருந்தான். சிற்பம் செய்வதற்கு எல்லோராலும் முடியுமா? அது எப்பேற்பட்டதொழில்,

அந்த தொழிலின் மூலம் சிற்பிக்கு மன நிறைவு ஏற்படவில்லை. வெயிலில் இருந்து வேலை செய்வது மிகவும் கஷ்டமாக இருந்தது. சூரியன் சுட்டெரித்துக் கொண்டிருந்தான். சிற்பியாக இருப்பதால் தானே சூரியன் கடுமையான வெயிலை நம் மீது பாய்ச்சுகிறான். நாம் அந்த சூரியனாக இருந்து விட்டால் கஷ்டமே இராது என்று நினைத்தான்.

உடனே அவனது எண்ணம் நிறைவேறியது. இயற்கை அந்த சிற்பியை ஒரு சூரியனாக மாற்றிவிட்டது. சிற்பி சூரியனாக மாறிவிட்டான். இந்த உலகத்தில் நம்மைவிட வலிமையுடையவன் யாரும் கிடையாது என்று நினைத்தான். இந்த நேரத்தில் மேகம் வந்து சூரியனை மறைத்துவிட்டது.

இப்பொழுது சிற்பி நினைத்தான். என்னையே மேகம் மறைக்கிறதென்றால், அது என்னைவிட பெரிய ஆளாகத்தான் இருக்க வேண்டும். அதனால் மேகமாக இருக்க வேண்டும் என்று நினைத்தான்.

இயற்கை அவனை ஒரு மேகமாக மாற்றிவிட்டது. மேகமாக மாறி வான வீதியால் உலா வந்து கொண்டிருந்த போது எதிரில் பெரியமலைகள் போகும் வழியை அடைத்துக் கொண்டு நின்றது. அதைத்தாண்டி போக முடியவில்லை. நாம் மேகமாக இருந்து பயனில்லை. மலையாக இருக்க வேண்டும். அதுதான் பெருமை என்று நினைத்தது மேகம்.

உடனே மேகமாக இருந்த சிற்பி மலையாக மாறிவிட்டான். இனிமேல் எந்த கஷ்டமும் இல்லை என்று நினைத்தது மலை. இப்படி நினைத்துக் கொண்டிருந்தபோது சிற்பி ஒருவன் மலையை உடைத்து சிற்பம் செய்து கொண்டிருந்தான்.

மலையையே ஒருவன் உடைக்கிறான் என்றால் அவன் எப்படிப்பட்ட வலிமையுடையவனாக இருக்க வேண்டும். இனிமேல் மலையாக இருந்து பிரயோசனமில்லை. மனிதனாக மாற வேண்டும் என்று நினைத்தது மலை.

உடனே மலை மனிதனாக மாறியது. மறுபடியும் பழைய நிலைமைக்கு வந்து விட்டான் அந்த ஆள். இதிலிருந்து விளங்கிக் கொள்வது என்னவெனில்,

"தன்னுடைய உண்மையான பலம் தெரியாமல் தாவித்தாவி தடுமாறிக் கொண்டிருக்கிறான் மனிதன்" என்பதுதான்.

இனிமேலாவது அதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு குடும்பத் தலைவருக்கு விபரீதமான ஆசை. அதாவது ஒருநாள் முழுவதும் சேலை கட்டிக் கொண்டு மனைவி செய்யும் வீட்டு வேலைகள், சமையல் எல்லாம் செய்ய வேண்டும். மனைவியை ஆண் வேடம் போட்டு அலுவலகத்துக்கு அனுப்ப வேண்டும். இதுதான் அந்த ஆசை. அதே மாதிரி செய்து விட்டார். பெண் வேடத்தில் சமையல் செய்து கொண்டிருந்த போது இருட்டி விட்டது. யாரோ கதவை தட்டும் சத்தம் கேட்டது. ஓடிப்போய் திறந்தார். பக்கத்து வீட்டு அம்மா ஏதோ வாங்குவதற்கு வந்தார். இவர் பயந்துபோய் "கமலா அம்மா... நான் சுசிலா இல்லை. சுசிலாவின் புருஷன். சும்மா ஒரு சேஞ்சுக்கா!" என்றார். உடனே அந்த அம்மா "பயப்படாதே நானும் கமலா இல்லை. கமலாவின் புருஷன். இதுவும் ஒரு சேஞ்சுக்குத்தான்" என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -28

முருங்கை இலை சார் தொழில்நுட்பம்

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் என் இனிய உறவுகளே...

இந்த முறை கட்டுரை முருங்கை பற்றி அலசவிருக்கின்றது. காணிகளில் வேலிகளில் கவனிப்பாரற்று கிடக்கும் முருங்கைக்கு அப்படியென்ன முக்கியத்துவம் என தோன்றுகின்றதா? எமக்கு தெரிந்தது அவ்வளவே! உலக நடப்பினை சற்று ஆழ்ந்து பார்த்தால் முருங்கை வெளிநாட்டு சந்தைகளில் கொடிகட்டி பறக்கின்றது. முருங்கைக்காய்க்கு திடீரென கிராக்கி வந்ததற்கான காரணமென்ன என்றொரு கேள்வி இப்போது மனதில் எழத்தான் செய்யும். அப்படியென்ன மவுசு இந்த முருங்கையின் காய்க்கு வந்ததென எண்ணுகின்றீர்களா? இங்கே விடயம் முருங்கைக காயைப் பற்றியதல்ல. முருங்கையிலையைப் பற்றியது. முருங்கையிலையில் உள்ளதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்ததனால் அதுபற்றிய செய்தி உலகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதனால் இந்த உயர்ச்சி முருங்கைக்கு. அந்த செய்தியை எம்மினிய உறவுகளுடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்தில் முருங்கை இலையும் அதுசார்ந்த தொழில்நுட்பமும் இங்கே உருப்பெற்றது. வாருங்கள் தொடர்ந்து உள்ளிறங்கி அலசுவோம்.

முருங்கையின் பயன்பாடு

முருங்கையில் இதுவரைக்கும் முருங்கைக்காய்தான் பயன்பாட்டில் அதிகளவில் இருந்தது. முருங்கையிலையை அவ்வப்போது சிலர் சுண்டி அல்லது சொதி வைத்து சாப்பிடுவதைத்தவிர முருங்கையினால் வேறு பயன்பாடுகள் இருந்ததில்லை. முருங்கை மரத்தை எதற்கும் பயன்படுத்தவும் முடியாது. காணிவேலியில் இருக்கும் ஒரு மரம் போதும காய் பிடுங்கி சமைப்பதற்கு. பெரிதாக பலமில்லாத மரமது. இது தெரியாமல் முருங்கை மரத்தில் ஏறுபவர்கள் கொப்பு முறிந்து அல்லது மரம் முறிந்து இறுதியில் அவரும் முறிந்து கொள்வதைத் தவிர மரத்தில் ஏறுவது அவ்வளவாக உசிதமான காரியமல்ல. சில வேளைகளில் ஒரு முருங்கைக் காய்க்காக கைகாலை முறித்துக் கொண்ட பலசாலிகளை எங்களூரிலும் காணலாம். இதனை சொல்லி விளங்காவிட்டாலும் ஏறி அனுபவப்பட்டவர்களைக் கேட்டால் விலாவாரியாக தமது அனுபவத்தை கூறுவார்கள். மாறாக முருங்கையில் வேதாளம் ஏறுவதாகத்தான் கதைகள் விக்கிரமாதித்தன் காலத்திலிருந்து கூறப்பட்டு வருகின்றது. வேதாளம் என்றவுடன் 'சுப்பர்மான்' என்ற கனவுடன் அதையிதை சிறுசுகளை முதுகில் கட்டிக்கொண்டு முருங்கை மரத்தில் ஏறி கனவு காண இடம் வைத்து விடாதீர்கள். ஏனென்றால் விளைவு விபரீதமாகிவிடும்.

முருங்கைக்காயும் முருங்கையிலையும்

பொதுவாகவே முருங்கைக் காய் தான் பணப்பொருளாக முருங்கை மரத்திலிருந்து பெறப்பட்டு விற்கப்பட்டு வந்தது. ஆனால் முருங்கைக்காயை விட முருங்கையிலையிற்கு தற்போது மவுசு அதிகரித்துள்ளது. சாதாரணமாக எமது காணிகளில் வளரும் முருங்கையிலிருந்து இலையினை பெற்று அவ்வப்போது சுண்டி மக்கள் உணவாக உட்கொளவது வழக்கம். ஆனால் முருங்கையிலையிலுள்ள சத்துக்களை ஆய்வு ரீதியாக அறிந்த பின்னர் முருங்கையிலை வெளிநாட்டவரை இப்போது சுண்டியிழுத்திருக்கின்றது. இலைக் கறிவகைகளுள் ஒன்றாகவும் இலகுவாக வளர்க்கக் கூடியதுமான முருங்கையை நாம் தொழிற்றுறை சார்ந்து நோக்கினால் நிச்சயமாக அதற்குள் பலவிடயங்கள் உள்ளடங்கும்.

பேரிடர் நடந்த 2009க்கு பின்பு அநேகமாக அனைவரினதும் கவனம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதிலேயே இருந்தது. மக்களும் பலவாறாக இன்னலுற்ற நிலையில் அவர்களது உணவு, ஊட்டச்சத்து, இன்னும் வருமானம் என்பன அவசியம் கவனிக்கப்பட வேண்டியதாயிற்று. பலர் இதற்காக உழைத்திருக்கின்றார்கள். தற்போது நாம் ஐந்தாண்டுகளை பூர்த்தி செய்தநிலையில் தொடர்ந்து வாழ்வாதாரம் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்க முடியாது. வாழ்வாதாரத்துடன் எமது மண்ணுக்கான தொழிற்றுறை பற்றியும் நாம் அலசியாராய வேண்டும். வேலைவாய்ப்பு என்பது தொழிற்றுறை விருத்தியிலேயே தங்கியிருக்கின்றது. தொழிற்றுறை விருத்தியும் எமது வளங்களை முழுமையாக சுரண்டாமல் பாதுகாப்பதோடு பயன்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். குறிப்பாக முருங்கையிலையை சிறப்பாக பொதிசெய்து ஐரோப்பா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளில் முருங்கையிலையை வெளிநாடுகளிலிருந்து தருவித்து அதனை சந்தைப்படுத்துகின்றார்கள். இந்த வாய்ப்பையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எமது பிரதேசத்தில் குறிப்பாக மணற்பாங்கான பிரதேசத்தில் இதனது பயிர்ச்செய்கையை முன்னெடுப்பது இதற்கான வழியுமாகும்.

குடாரப்பு, செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் பரீட்சார்த்தமாக மக்கள் முருங்கையை வளர்க்கத் தொடங்கி தற்போது சிறப்பாக முருங்கை இபபகுதிகளில் வளர்வதனை காணக்கூடியதாக உள்ளது. இதற்கு ZOA என்னும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் பங்களிப்பு அளப்பரியது. வீட்டுத்தோட்டத்தில் வளர்ப்பதற்காக முருங்கை வளர்க்கப்பட்டு தற்போது அதனது பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ள நிலையில் இதனை பாரியளவில் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மீனவ குடும்பங்களை அனேகமாக உள்ளடக்கிய இப்பகுதிகளில் மீன் பிடியிலும் போதிய வருமானம் பெறமுடியாத நிலையில் இக்குடும்பங்களின் பெண்களை ஊக்கப்படுத்தி இவ்வாறான பயிர்ச்செய்கையை மேற்கொள்ள திட்டமிடல்கள் அவசியமாகும். தொடர்ந்து இலவசமாக பொருட்களை வாழ்வாதாரம் என கொடுப்பதற்கு பதிலாக எம்மினிய உறவுகளுக்கு அவர்கள் உழைத்து தமது வருவாயை பெருக்குவதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறான தொழிற்றுறையை அதற்குரிய அமைச்சுக்கள் இணைந்து மேம்படுத்த வேண்டும். குடாரப்பு, செம்பியன்பற்று மற்றும் சித்தன்கேணி ஆகிய மணற்பாங்கான பகுதிகளில் பெரிதாக வேறு தொழிற்றுறையை விருத்தி செய்வதென்பது சிரமமாகும். இங்குள்ள மணற்பாங்கான நிலைமை முருங்கை மற்றும் பிள்ளைக்கற்றாழை ஆகிய பயிர்களுக்கு சிறந்ததாக காணப்பட்டமையினால் இதனை ஒரு மாதிரியாக கருதி இத்தொழிற்றுறையை விருத்தி செய்து அதனது பலாபலன்களை கருத்தில்கொண்டு ஏனைய பகுதிகளுக்கும் திட்டமிடலாம்.

அதே நேரத்தில் உற்பத்தியாகும் முருங்கையிலையை பதப்படுத்தி பொதிசெய்து வெளிநாட்டு சந்தையில் விற்பதற்கான சந்தைவாய்ப்பினையும் நாம் இனங்கண்டு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் சந்தைப்படுத்தலினை முக்கிய தொழிலாக கொண்ட புலம்பெயர்ந்த உறவுகள் இவ்வாறான உலகசந்தை பற்றிய அறிவினையும் வாய்ப்பினையும் எமது மக்களுக்கு தெரியப்படுத்தினால முருங்கை மட்டுமல்ல அங்கு தேவையான ஏனைய பயிர்கள் பற்றியும் கவனமெடுத்து அவற்றை நாம் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பினை அதிகரித்துக்கொள்ளலாம்.

தொழில்நுட்பம் எதுவரை?

எங்களூர் முருங்கையின் விளைச்சல் குறைவு. இந்தியாவில் இதனது உற்பத்தி அதிகரித்திருக்கின்றது. இப்போது இந்தியாவிலிருந்து தருவிக்கப்படும் முருங்கை விதை ஆண்டு முருங்கையாகவும் நிறைந்த காய்களை விரைந்து உற்பத்தியாக்கும் திறனையும் கொண்டிருககின்றது. முருங்கையி லையை உலரவைத்து பவுடராக்கி வெளிநாடுகளில் பயன்படுத்துகின்றார்கள்.

கானா நாட்டில் முருங்கையிலையை உலரவைத்து அதிலுள்ள ஈரப்பதன் 9 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கும் போது அதனை உரலிலிட்டு இடித்து பவுடராக்கி பயன்படுத்துகின்றார்கள் என அறிய முடிகின்றது. ஆனாலும் இது நேரத்தை அதிகமாக உள்வாங்குவதனாலும் அதிகளவில் உற்பத்தி செய்ய முடியாதென்பதாலும் இதற் காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அரைக்கும் இயந்திரத்தை பயன்படுத்துகின்றார்கள். இதற்குரிய செலவாக ரூபா 40ஆயிரத்திலிருந்து 3 இலட்சம் வரை தேவையென அறிய முடிந்தது. அரைத்த இலைப் பவுடரை இலக்கம் 6 உடைய அரிப்பனுக்கூடாக அரித்தெடுத்து பொதி செய்யப்படுகின்றது. எங்களவர் இதனைப்போல சிறந்த ஒரு இயந்திரததை எமக்கேற்றாற்போல விலை குறைவானதாக வடிவமை க்க முடியும். நாம் அரிசி அரைக்கும் இயந்திரத்தைப் போல முருங்கையிலையை அரைக்கும் இயந்திரத்தை வடிவமைக்க முடியும். இன்னும் இருப்பதில் மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் அரைப்பதை இயந்திரமயமாக்கி இலகுவாக்கி விடலாம். பொறியியல் பகுதி வல்லுநர்களுக்கும் தொழில் நுட்பம் கற்கும் மாணவர்களுக்குமான செய்தியிது.

முருங்கையிலையில் அப்படி என்ன இருக்கின்றது?

அதிசயிக்கத்தக்க வகையில் முருங்கையிலையில் விசேடமான அன்ரிஒக்சிடன்கள் (Antioxidents) இருக்கின்றன. இவை மனிதரை இளமையானவர்களாக வைத்திருக்க உதவும். அநேகமான நோய்களை அணுகவிடாமல் எமது உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்கவும் உதவும் என கண்டறியப்பட்டுள்ளது. புற்றுநோய், இதய நோய்கள் மற்றும் நரம்பு சம்பந்தமான நோய்களை அண்டவிடாது எனவும் முருங்கையிலையில் கண்டறியப்பட்டுள்ளது. முருங்கையிலைப் பவுடரை சுடுநீரில் கரைத்து அதனை முருங்கையிலை தேநீர் ஆக பயன்படுவதையும் இங்கே குறிப்பிடுவது சாலப்பொருந்தும். உடலிலுள்ள சக்தியினளவை கூட்டக்கூடியதாகவும், சமிபாடடையும் தன்மையை ஊக்குவிக்கும், மூளையின் விருத்திக்கு பயன்படுவதோடு, விரைந்த சிந்தனை மற்றும் ஆற்றலை அதிகரிக்கவும, ஆழ்ந்த நித்திரையை கொண்டு வருவதற்கும், உடலுக்கு தேவையான அனைத்து விற்றமின்களையும் கொடுக்கவல்லது, அதி கரித்த அளவில் நார்ச்சத்தைக் கொண்டிருத்தல், உடலிலுள்ள தேவையற்ற பதார்த்தங்களை அகற்றுவதற்கும், உடலில் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கவும், புற்று நோய் கலங்களுடன் போட்டியிடும் ஆற்றலுடையதாகவும் வயதாகும் போது ஏற்படும் மாற்றங்களிலிருந்து விடுபட்டு தோல் வசீகரமாக இருக்கவும், நீரிழிவு நோய்க்கு மருந்தாகவும், இரத்தத்திலுள்ள கொலஸதிரோலை கட்டுப்படுத்தவும், இதயம் சிறப்பாக தொழிற்பட இவ் விலை பயன்படும் எனவும் அறிய முடிந்தது.

எது எப்படியிருந்தாலும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அறிந்ததை எம்மினிய உறவுகளுக்கு தெரியப்படுத்துவதே இக்கட்டுரை பரிணமிப்பதற்கு காரணமாகும். இவற்றுடன் இன்னும் பல பயன்பாடுகளை அறிய முடிந்தாலும் இதற்கான பயிர்ச்செய்கைக்கு வழிகாட்டியாக இதில் விற்பன்னர்களாக உள்ளவர்களை ஆரம்பத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சாதாரண முருங்கையிலைக்குள் இவ்வளவு அதிசயத்தை உள்ளடக்கிய இறைவன் அதனை மனிதர் இனங்காண வைத்தமையே இங்கே சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

முருங்கையை பயிர் செய்யும் போது அதில் இலையரிபுழு, சாறு உறிஞ்சும் பூச்சி மற்றும் மயிர்க் கொட்டி என்பன பீடைகளாக காணப்படுகின்றன.

இவற்றை ஆய்வு செய்து சேதன முறையில் முகாமைத்துவப்படுத்த முயற் சிகள் விவசாய உயிரியல்துறை யில் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் இதனை சிறப்பாக கரையோர பிரதேசங்களில் பயிரிடலாம் என்பது நிதர்சனமே. முருங்கை சார் தொழில்நுட்பத்தின் அவசியம் எமது மக்களுக்காக இன்னும் விருத்திசெய்யப்பட வேண்டும்.

முருங்கை இலையில்.....

- காரட்டிலுள்ள விற்றமின் A ஐ விட 4 மடங்கு அதிகம்
- பாலிலுள்ள கல்சியத்தை விட 4 மடங்கு அதிகம்
- கீரையிலுள்ள இரும்புச்சத்தை விட 2 மடங்கு அதிகம்
- தோடம்பழத்திலுள்ள விற்றமின் C யைவிட 7 மடங்கு அதிகம்
- யோகட்டிலுள்ள புரதத்தை விட 2 மடங்கு அதிகம்
- கொலஸ்திரோல் இல்லை

காய்ந்த முருங்கை இலை அரைக்கும் இயந்திரம்

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XVII

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானில் ஐ.எஸ்.ஐ.எஸ்

சர்ச்சையை ஏற்படுத்திய முன்னாள் மத்திய அமைச்சர் மாலிக் கருத்து

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத இயக்கம் பரவியிருப்பதற்கு தன்னிடம் போதுமான ஆதாரங்கள் உள்ளன என அந்நாட்டின் முன்னாள் உள் துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ். ஐ.எஸ். இயக்கம் வேகமாகப் பரவுவது குறித்து, சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்க பிரதமர் நவாஸ் ஷெரீப் சார்க் மாநாட்டைப் பயன்படுத்திக் கொள்ள வேணடும். அந்த அமைப்பு குறித்த தகவலைப் பகிர்ந்து கொள்ள சரவதேச அளவிலான அமைப்பை உருவாக்க அவர் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.

ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு, பாகிஸ்தான் தெஹ்ரிக் இ தலிபான் அமைப்புடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பதற்கு என்னிடம் போதுமான ஆதாரங்கள் உள்ளன. அந்த அமைப்பின் பாகிஸ்தான் பிரிவு தலைவராக, ஏதேனும் ஒரு தலிபான் தலைவர் விரைவில் நியமிக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. தலிபான்களைப் போல, ஐ.எஸ். அமைப்பும் பாகிஸ்தானில் பரவி மேலுமொரு பயங்கரவாத அச்சுறுத்தலை நாடு எதிர்கொள்வதற்கு முன்பாக, பாகிஸ்தான் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். கொடிகள், பதாகைகள் காணப்படுவதாக தகவல் வந்துள்ளது. பயங்கரவாதிகளின் தாக்குதலால் நாடு ஏற்கனவே ஆயிரக்கணக்கான குழந்தைகள், பெண்கள், ஆண்கள், பாதுகாப்புப் படையினரை இழந்துள்ளது. எனவே, பாகிஸ்தானில் ஐ.எஸ்ஐ.எஸ்அமைப்பு இல்லை என தொடர்ந்து மறுத்து வருவதற்குப் பதிலாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தா. (இ-5)

நடுக்கடலில் தவித்த 700 அகதிகள் மீட்பு



சரக்கு கப்பலில் ஏற்பட்ட கோளாறால் நடுக்கடலில் தவித்த சுமார் 700 அகதிகளை கிரீஸ் கடற்படை மீட்டுள்ளது.

77 மீற்றர் நீளமுள்ள சரக்கு கப்பல் கிரீஸ் நாட்டின் லெராபெட்ரா கடல் பகுதியில் தத்தளிப்பதை அந்த நாட்டு கடற்படையினர் கண்டுபிடித்தனர். அந்த கப்பலில் ஆண் கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 700 பேர் இருந்தனர்.

உள்நாட்டுப் போரினால் பாதிக்கபட்டுள்ள சிரியா மற்றும் ஈராக்கைச் சேர்ந்த அவர்கள் ஐரோப்பாவுக்கு சட்டவிரோதமாக குடியேறுவதற்காக சரக்கு கப்பலில் சென்றுள்ளனர். அவர்கள் வந்த கப்பலின் என்ஜினில் திடீரென கோளாறு ஏற்பட்டு நடுக் கடலில் நின்றுவிடடது.

இந்தக் கப்பலை கிரீஸ் கடற்படையினர் கண்டுபி டித்து இழுவை கப்பல் மூலம் கரைக்கு இழுத்து வந்தனர். அகதிகள் தங்குவதற்காக லெராபெட்ராவில் உள்ள கூடைப் பந்து விளையாட்டு அரங்கில் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

கப்பலில் இருந்த கர்ப்பிணி ஒருவர் கடுமையாக உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் மட்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றவர்கள் நலமாக உள்ளனர் என்று கிரீஸ் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து லெராபெட்டா முதல்வர் தியோடஸ் கூறியபோது, அகதிகளுக்கு தேவையான உதவிகளை நாங்கள் வழங்குவோம். அவர்களை சில நாடகளுக்கு விருந்தினர்களாக மட்டுமேஉபசரிக்க முடியும் இங்கேயே நிரந்தரமாக தங்க அனுமதி அளிக்க முடியாது என்று தெரிவித்தார்.

உள்நாட்டு குழப்பம் நிலவி வரும் சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் ஐரோப்பாவில் சட்டவிரோதமாக குடியேறி வருகின்றனர். சிறிய ரக கப்பலில் வரும் அவர்கள் அடிக்கடி பல்வேறு விபத்துகளிலும் சிக்குகின்றனர். அந்த வகையில் கடந்த ஓராண்டில் மட்டும் 2500 அகதிகள் உயிரிழந்துள்ளனர் என்று அம்னஸ்டி இன்டர்நஷனல் மனிதவுரிமை அமைப்பு தெரிவித்துள்ளது. (இ-5)

குழந்தையுடன் கையில் துப்பாக்கி ஏந்தியபடி டுவிட்டரில் புகைப்படம்

இந்திய வம்சாவளி இளைஞனால் பரபரப்பு

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை சேர்ந்த வராக சந்தேகிக்கப்படும் இந்திய வம்சாவளி இளைஞர் ஒருவர் தனது குழந்தையையும் துப்பாக்கி யையும் கையில் ஏந்தியபடியான படத்தை டுவிட்டரில் பகிரங்கமாக வெளியிட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ் கிளர்ச்சியாளர்கள் ஈராக் மற்றும் சிரியாவில் போரிட்டு வருகின்றனர். இந்த கிளர்ச்சி இயக்கத்துடன் சர்வதேச பயங்கரவாத இயக்கங்களுக்கு நெருங்கிய தொடர்புள்ளதும், மேலும் அந்த இயக்கத்தில் பல நாட்டைச் சேர்ந்த இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து வருவதும் உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்த இயக்கத்தில் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற ஆசிய நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இருப்பதாகவும் தொடர்ந்து தகவல்கள் வெளியாகி வருகிறது. இந்த நிலையில் இந்திய வம்சாவளி பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த இளைஞரான சித்தார்த்தர் பிரிட்டனில் வாழ்ந்த போது பயங்கரவாத செய ல்களுக்கு துணை போன தாக சித்தார்த்தர் அந்நாட்டு பயங்கரவாத எதிர்ப்பு பொலிஸாரால் கைது செய்யப் பட்டார். பின்னர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் பிணையில் வெளி யான அவர் தனது பெயரை அபு ரமேஸா என்று மாற்றிக் கொண்டு சிரியாவில் செயற் படும் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக் கத்தில் இணைந்து பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வருகிறார்.

சித்தார்த்தர் என்கிற அபு ரமேஸாவை பிரிட்டன் பொலிஸார் கடந்த ஒரு வருடமாக தேடி வருகின றனர். இந்த நிலையில் சித்தார்த்தர், அவரது குழந்தையையும் ஏ.கே.47 ரக துப்பாக்கியையும் கையில் ஏந்தியபடியான தனது புகைப்படத்தை டுவிட்டரில் பகிர்ந்துள்ளார்.

அத்துடன்தனது குழந்தை ஐ.எஸ். ஐ.எஸ் படைக்கு மேலும் ஒரு கூடுதல் பலம் என்றும், இந்த குழந்தைக்கும் பிரிட்டனுக்கு இப்போது தொடர்பு இல்லை என்று பகிரங்கமாக அவரது டுவிட்டரில் பதிவேற்றம் செய்துள்ளார். (இ-5)

மனித வெடிகுண்டுத் தாக்குதலால் ஆப்கானிஸ்தானில் 5 பேர் மரணம்

குழந்தைகள் உட்பட 34 பேர் படுகாயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பிரிட்டன் தூதரகத்துக்கு சொந்தமான காரை குறிவைத்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட மனித வெடிகுண்டு தாக்குதலில் 5 பேர் பலியாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதலை உறுதிப்படுத்தி உள்ள தூதரக செய்தித் தொடர்பாளர், காரில் பயணம் செய்த சிலர் காயமடைந்ததாகவும், அதேநேரம் அதில் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் யாரும் பயணம் செய்யவில்லை என்றும் தெரிவித்துள்ளார். காபூலில் உள்ள வைத்தியசாலையின் தலைமை நிர்வாக அதிகாரி கபிர் அமிரி கூறும்போது, மனித வெடிகுண்டு தாக்குதலில் ஆப்கானைச் சேர்ந்த 5 பேர் பலியாகினர். மேலும் குழந்தைகள் உட்பட 34 பேர் காயமடைந்தனர் என்றார். இந்தத் தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (இ-5)

லைபீரியாவில் இந்தியர் எபோலாவினால் மரணம்

லைபீரியாவில் பணியாற்றிய இந்தியத் தொழிலாளி ஒருவர் எபோலா வைரஸால் பாதிக்கப்பட்டு கடந்த செப்டெம்பர் மாதம் மரணமடைந்ததாக இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

எபோலா மிக மோசமாகப் பரவியுள்ள நாடுகளில் ஒன்று லைபீரியா. அந்த நபரின் மரணம் குறித்து அவரது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தப்பட்டுவிட்டதாகவும், அவரது உடல் லைபீரியாவிலேயே புதைக்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

கினியா, சியாரா லியோன், லைபீரியா ஆகிய நாடுகள் எபோலா நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மூன்று நாடுகளிலும் சேர்த்து, இதுவரை 5 ஆயிரத்து 400 பேர் மரணமடைந்துள்ளனர். நைஜீரியா, ஸ்பென், அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் சிலர் இந்நோயினால் மரணமடைந்துள்ளனர்.

மருந்தாளுனராகப் பணியாற்றிய இந்த நபர்தான் எபோலாவினால் மரணமடையும் முதல் இந்தியராவார்.

மேற்கு ஆபிரிக்காவில் சுமார் 45 ஆயிரம் இந்தியர்கள் வசித்து வருகின்றனர்.

இந்த நபர் எபோலா நோய்த் தொற்றினால் செப்டெம்பர் 7ஆம் திகதி மரணமடைந்ததாக, மத்திய வெளியுறவுத் துறை இணையமைச்சர் வி.கே. சிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த மாதத் தொடக்கத்தில் லைபீரியாவிலிருந்து வந்த ஒருவர், எபோலா நோய் குணமடைந்துவிட்டாலும், பாலுறவு மூலம் நோய் தொற்றலாம் என்பதால், அவரை இந்திய அதிகாரிகள் தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்தனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இன்னும் இருப்பவர்களையும் விடுவியுங்கள்” கதறும் மீனவர்கள்

இலங்கை நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து மீனவர்களது தண்டனையை ரத்து செய்ததன் மூலமாக கருணையுள்ளவராகக் காட்டப்படுகிறார் இலங்கை அதிபர் ராஜபக்ஷ. ஐந்து மீனவர்களும் விடுவிக்கப்பட்டு தமிழகம் வந்த மறுநாளே 14 தமிழ் மீனவர்களைக் கைதுசெய்துள்ளது, இலங்கை கடற்படை. நித்தமும் நடக்கும் கொடுமையான அத்தியாயமாக மீனவர் கைது சம்பவம் தொடர்கிறது.

வங்கக்கடலின் பாக் ஜலசந்தி பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் மறுநாள் கரை திரும்பும் வரை அவர்களது குடும்பத்தினர் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் காத்திருக்கின்றனர். கடந்த 30 ஆண்டுகளாக ராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகபட்டினம் உள்ளிட்ட 6 மாவட்ட மீனவர்களின் இந்தத் துன்பம் இன்றுவரை நின்றபாடில்லை. இதுவரை 600இற்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை கடற்படையின் கொலைவெறிக்குப் பலியாகி இருக்கிறார்கள். பல நூறு மீனவர்கள் உடல் ஊனப்பட்டிருக்கிறார்கள். படகின் முதலாளிகளாக இருந்த பலர், இன்று வாழ வழியின்றி முடங்கிக் கிடக்கிறார்கள். இத்தனைக்கும் பிறகும் வாழவழியில்லாததால், மீண்டும் மீண்டும் மீன்பிடிக்கச் செல்வதும் அவர்களை இலங்கை கடற்படை சிறைபிடித்துச் செல்வதும் அன்றாட செய்திகளாக மாறிவிட்டன. ஆரம்ப காலங்களில் இலங்கையின் கொடுமைக்கு எதிராகக் கொதித்தெழுந்து போராடிய மீனவர்கள், நாளாக நாளாக ‘இதுவும் கடந்துபோகும்’ என்ற வசனங்களைக் கடைப்பிடித்து அமைதியாகிப் போனார்கள். மீனவர்களின் அமைதியை தங்களுக்குச் சாதகமாக எடுத்துக்கொண்ட இலங்கை கடற்படை, விடுதலைப்புலிகளுக்கு உதவியதாகச் சொல்லி மீனவர்களை இதுவரை பழிவாங்கி வந்தது. புலிகள் அமைப்பு முடிவுக்கு வந்த பிறகு போதைப் பொருள் கடத்துவதாகச் சொல்லி பொய் வழக்கு போடுகின்றது. இந்த சதி வலையில் சிக்க வைக்கப்பட்டவர்கள்தான் தங்கச்சி மடம் மீனவர்கள் 5 பேரும்.

இவர்களுக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. ‘இப்படி தண்டனை கொடுத்தால்தான் இனி யாரும் மீன்பிடிக்க வரமாட்டார்கள்’ என்று நினைத்துத்தான் அப்படி தண்டனை கொடுத்தார்கள். இந்தச் செய்தி பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய நிலையில், வேறு வழியில்லாமல் அவர்களை விடுவிக்கும் முடிவுக்கு இறங்கி வந்தது ராஜ அரசு.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள்...

இந்த 5 மீனவர்களை விடுவித்த ராஜபக்ஷ அரசு, இன்னும் சிறையிலிருக்கும் பலரை மறைப்பது ஏன் என்று மீனவர்கள் கொதிக்கிறார்கள்.

கடந்த ஜூன் மாதம் 1 ஆம் திகதி மீன்பிடி தடைக்காலம் முடிந்தது. அதன் பின்னர் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறை பிடித்துச் சென்றனர். அன்று தொடங்கிய இலங்கை கடற்படையின் இந்தச் சிறைபிடிப்பு வேட்டை கடந்த அக்டோபர் மாதம் 7 ஆம் திகதி வரை தொடர்ந்து கொண்டிருந்தது. இந்த நான்கு மாதங்களில் 300 இற்கும் மேற்பட்ட மீனவர்களும் அவர்கள் சென்ற 82 படகுகளும் சிறைபிடிக்கப்பட்டன. மத்தியில் பி.ஜே.பி அரசு பதவி ஏற்ற நிலையில், மீனவர்கள் கொத்துக் கொத்தாக சிறைபிடிக்கப்பட்ட சம்பவம், மீனவர்களை மீண்டும் போராட்டத்தில் குதிக்க வைத்தது. இதன் விளை வாக சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களில் கடைசியாகப் பிடித்து செல்லப்பட்ட 24 மீனவர்களைத் தவிர, அனைவரும் விடுவிக்கப்பட்டு ஊர் திரும்பிவிட்டனர். இன்னும் சிறையில் 24 மீனவர்கள் இருக்கிறார்கள். கடந்த 23 ஆம் திகதி கைதான 14 பேரையும் சேர்த்தால் இலங்கை சிறையில் இப்போது 38 பேர் இருக்கிறார்கள்.

இது குறித்து நம்மிடம் பேசிய படகு உரிமையாளர் முனியசாமி, ‘30 ஆண்டுகளாக எங்கள் மீனவர்கள் அனுபவித்துவரும் வேதனைகளுக்கு ஆட்சி மாற்றம் முடிவு கட்டும் என நினைத்தோம். ஆனால், ஆட்சி மாறியும் காட்சி மாறாத நிலையே தொடர்ந்தது. காங்கிரஸ் ஆட்சியின்போது தாமதமானாலும்கூட சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களுடன் அவரகளது படகுகளையும் விடுவித்தது இலங்கை அரசு. ஆனால், பி.ஜே.பி ஆட்சிக்கு வந்த பின் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் மட்டுமே விடுவிக்கப்பட்டு வருகின்றனர். அதுகூட முழுமையாக விடுவிக்கப்படவில்லை. இலங்கை கட்டுப்பாட்டில் தற்போது 85 படகுகள் உள்ளன. தலைமன்னார் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த 15 பேருகுச் சொந்தமான படகுகள் மீட்க முடியாத நிலையில் மூழ்கிக் கிடக்கின்றன. ஒவ்வொரு படகும் 20 முதல் 25 லட்சம் ரூபாய் மதிப்புடையவை. நாங்கள் யாரும் பரம்பரை முதலாளிகள் இல்லை. கடல் தொழிலின் அடிமட்ட தொழிலாளிகளாக இருந்து கடன்மூலம் வாங்கிய படகுகளைக்கொண்டு தொழில் செய்து வருபவர்கள்தான். இந்த நிலையில் கடந்த 5 மாதங்களாகப் படகுகளைப் பறிகொடுத்து விட்டு பரிதவிக்கிறோம்” என்றார்.

> போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டார்கள் என குற்றம் சாட்டப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து இந்திய மீனவர்களையும் விடுதலை செய்த அரசை அனைவருக்கும் ஒரே நியாயம்தானே? என்று அதே குற்றச்சாட்டில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று மீனவர்களின் உறவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் அவர்களை மீட்டுத்தரக் கோரி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (ஆ.ர்)

தூக்கிலிருந்து மீனவர்களைக் காப்பாற்றியது யார் என மோதிக் கொள்ளும் மத்திய, மாநில அரசுகள் இலங்கை சிறைகளில் அடைபட்டு கிடக்கும் அப்பாவி மீனவர்களையும் அவர்களது வாழ்வாதாரமான 85 படகுகளையும் விரைவாக மீட்டு வர முயன்றால் நல்லது.

–ஜூனியர் விகடன்–

ஊழலை எதிர்க்கும் ரஜினி பி.ஜே.பி.யில் எப்படி சேர முடியும்?



...மத்திய அரசுக்கு எதிராக கம்யூனிஸ்ட் இயக்கங்கள் கூட்டுப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில்- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணனை சந்தித்தோம். சில கேள்விகளை முன்வைத்தோம்.

“தஞ்சாவூர் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களில் மார்க்சிஸ்ட் கட்சியின் அலுவலகங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறதே?”

ஜி. ராமகிருஷ்ணன்

“தஞ்சாவூரில் நடந்த சம்பவத்துக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இரவு நேரத்தில் அலுவலகம் மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டிருந்தது. இதனைக் காவல் துறையினர் விசாரித்து வருகிறார்கள். தமிழகத்தில் இன்று மக்கள் சந்தித்து வரும் முக்கியமான பிரச்சினைகளுக்கு எங்கள் கட்சி குரல் கொடுத்து வருகிறது. இது பிடிக்காத சில விஷமிகள் இதுபோன்று செய்துள்ளனர். புதுச்சேரியில் நடந்த ஓர் ஆலய பிரவேசப் போராட்டத்துக்காகத்தான் எங்கள் அலுவலகம் தாக்கப்பட்டது. பெரியார் மண்ணில் இன்னமும் தலித் மக்களுக்கு எதிரான இது போன்ற கொடுமைகளைக் கண்டித்துப் போராட வேண்டியுள்ளது. சாதியை வைத்து சிலர் அரசியல் செய்து வருவது மிகவும் தவறு. சாதி அரசியலை வேருடன் ஒழிக்க வேண்டியது அவசியம்.”

“தமிழகத்தில் முக்கியப் பதவிகளுக்கு எல்லாம் ‘ஆலோசகர்’ என்ற பதவி உருவாக்கப்பட்டுள்ளதே?”

“இதுபோன்ற பதவிகளை உருவாக்கி வைத்திருப்பது தவறான ஒன்று. ஓய்வுபெற்ற அதிகாரிகளை ஆலோசகராக நியமித்தால் பதவியிலிருக்கும் அதிகாரிகள் திறமையற்றவர்களா என்ற கேள்வி எழுகிறது. உதாரணமாக சட்டசபைச் செயலாளர் ஜமாலுதீன் பிரச்சினை. ஜெயலலிதா மீதான தண்டனை குறித்து அரசிதழ் வெளியிட்டதால் சிக்கலுக்குள்ளாக்கப்பட்டுள்ளார். அவருக்கு முதலில் பணி நீட்டிப்பு கொடுக்கப்பட்டதே தவறு.”

“ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கின் மீதான தீர்ப்பு [illegible] மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது?”

“உச்ச நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு உருவாக்கப்பட்ட சட்டவரைவு திருத்தத்துக்குப் பிறகு பதவியிலிருக்கும் ஒரு முதல்வர் தண்டிக்கப்பட்டு, பதவியிழந்துள்ளது இதுவே முதன்முறை. இது ஊழலுக்கு எதிராகப் போராடும் எங்களைப் போன்ற கட்சியினருக்கு வலுச்சேர்த்திருக்கிறது. இது அனைத்து அரசியல் கட்சியினருக்கும் ஓர் எச்சரிக்கை மணியை அடித்துள்ளது. எல்லா அரசியல்வாதிகளும் கலங்கிப் போயுள்ளனர்.”

“ஓ.பன்னீர்செல்வத்தின் ஆட்சியை எப்படிப் பார்க்கிறீர்கள்?”

“மக்களின் பாதுகாப்பற்ற நிலைக்கு இது- எடுத்துக்காட்டு. சமீபத்தில் மதுரை விமலா தேவியின் கௌரவக் கொலை ஒன்றேபோதும். ஒரு தலித் இளைஞனை திருமணம் செய்து கொண்ட பெண்ணை வலுக்கட்டாயமாக அழைத்துவந்து பிரித்துள்ளனர். அதன்பின் காப்பகத்திலிருந்த பெண்ணை போலீஸாரே வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்தச் சமயத்தில் எங்களது கட்சி சார்பாக, அந்தப் பெண்ணின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று மெயில் மூலமாகவும் நேரிலும் புகார் அளித்தும் எஸ்.பி எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆட்சி என்பது அமைச்சர்களை மட்டும் கொண்டது இல்லை. அரசு நிர்வாகமும் அதிகாரிகளும் சேர்ந்தது. அதிகாரிகளே இப்படி அலட்சியமாக நடந்து கொள்கிறார்கள் என்றால், அமைச்சர்கள் பற்றி கூற வேண்டுமா?”

“ரஜினியை பி.ஜே.பியில் இணைக்க சிலர் முயற்சி செய்து வருகிறார்களே?”

“ரஜினி பி.ஜே.பியில் இணைவதோ, தனிக் கட்சி ஆரம்பிப்பதோ அவரது தனிப்பட்ட உரிமை. ஆனால், ஊழலுக்கு எதிராகப் போராட வேண்டும் என்று நினைக்கும் அவர், ஊழல் கட்சியான பி.ஜே.பியில் சேர்வதன் மூலம் ஊழலை எதிர்க்கவே முடியாது. அவருக்கும் அது நல்லதல்ல.”

“மோடி ஆட்சியின் செயற்பாடுகள், திட்டங்கள் எப்படி இருக்கின்றன?”

“ஆட்சி செய்வதைப்போல மாயையைத்தான் அவர் உருவாக்கி வைத்துள்ளார். மக்களின் நலனைவிட கார்ப்பரேட் கம்பெனிகளுக்குத்தான் அதிக அளவு சலுகை தருகிறார்கள். உதாரணமாக, அவர் பதவியேற்ற மூன்று நாட்களில் 108 உயிர்காக்கும் மருந்துகளின் மீதான விலைக் கட்டுப்பாட்டை அவரது அரசு நீக்கியது. இதனால் கேன்சர், இதய நோய், சர்க்கரை, ரத்த அழுத்தம், ரேபிஸ் ஆகியவற்றுக்கான மருந்துகளின் விலை ஐந்து மடங்கு உயரும். இந்தியாவிலிருக்கும் ஐந்து முக்கியமான மருந்து உற்பத்தி நிறுவனங்களில், மூன்று பன்னாட்டு நிறுவனங்கள். அடுத்து நில ஆர்ஜித சட்டம், காடுகள் மீதான சட்டம் ஆகியவற்றில் திருத்தம் கொண்டுவரவுள்ளனர். அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களிடையே வகுப்புவாதத்தைப் புகுத்த முயற்சி எடுத்து வருகிறார்கள். தூர்தர்ஷன் ஓர் அரசு நிறுவனம். அதில் ஆர்.எஸ்.எஸ் தலைவரை எப்படி பேச வைக்கலாம்? இவரது 100 நாள் ஆட்சியில் 4,600 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுளளனர். இதுவே அவர்களது ஆட்சியின் நிலை. இதனை மக்கள் மன்றத்தில் அம்பலப்படுத்தி வருகிறோம்!”

–ஜூனியர் விகடன்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் மழை;கடல்நீர் உட்புகுந்தது

மக்கள் இடப்பெயர்வு

5ஆயிரத்து 658 பேர் பாதிக்கப்பட்டனர்

மன்னார் மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக, ஆயிரத்து 428 குடும்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 658 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்துள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் என்.ஏ.சி.முஹமட் றியாஸ் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 758 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து903 பேரும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 658 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து714 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந் நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கடல்நீர் பல கிராமங்களுக்குள் உட்சென்றமையினால் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். உப்புக்குளம் தெற்கு, கோந்தைப் பிட்டி கிராமத்தினுள் கடல்நீர் புகுந்துள்ளமையினால் அக்கிராமத்தில் வசிக்கும் 45 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். இக்கிராமம் கடல் நீரினால் மூழ்கியுள்ளது. இக்கிராமமக்கள்உப்புக்குளம், கோந்தைப்பிட்டி பள்ளிவாசலில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதேவேளை பள்ளி முனை 41 வீட்டுத்திட்டம், பள்ளி முனை 49 வீட்டுத்திட்டம், பள்ளிமுனை 50 வீட்டுத் திட்டம் ஆகிய கிராமங்களிலும் கடல் நீர் புகுந்துள் ளமையினால் 140 குடும்பங்களைச் சேர்ந்த 600 பேர் பாதிக்கப்பட்டு இடம்பெயர் ந்துள்ளனர். இந்த மக்கள் பள்ளி முனையில் உள்ள பொது மண்டபங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சௌத்பார் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் கடல்நீர் புகுந்துள்ளமையினால் 105 குடும்பங்களைச் சேர்ந்த 515 பேர் இடம்பெயர்ந்து சௌத்பார் பொது மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உலர் உணவு பொருட்களை மன்னார் பிரதேச செயலகம் வழங்கி வருகின்றது. அதேவேளை ஜீவபுரம், கிருஷ்ணபுரம், சாந்திபுரம் ஆகிய கிராம மக்களும் இடம்பெயர் ந்துள்ளனர். அத்துடன் தலைமன்னார் பியர், எருக்கலம பிட்டி மேற்கு கிராம மக்களின் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களை மன்னார் பிரதேச செயலாளர் கே.வசந்தகுமார், வடமாகாண சபை உறுப் பினர் ஞானசீலன் குணசீலன், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி அஜந்த றொட் ரிகோ, மன்னார் நகர சபை தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், மன்னார் நகர சபை உறுப் பினர்களான இ.குமரேஸ், மெரினஸ் பெரேரா, என்.நகுசீன ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதேவேளை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்தில் 120 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் இடம் பெயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

ஏ.பி.சி.வகைப்பாட்டால் நோயாளர்கள் பாதிப்பு

(முக்கொம்பன்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைத்தியரிடம் சிகிச்சை பெறச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

நோயாளர்களை வைத்தியர் பார்வையிடுவதற்காக பதிவு செய்யும் இடத்தில் ஏ, பி, சி என வகைப்படுத்தப்பட்டு அனுமதி சிட்டை வழங்கப்படுகின்றது.

இச்சிட்டையின்படி நோயாளர்கள் வரிசையில் ஏ,பி,சி என தரப்படுத்தப்பட்டு வைத்தியரிடம் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

வைத்தியரிம்ஆலோசனை பெறுவதற்கு கொண்டு செல்லும் சிட்டையில் ஏஅல்லது பிஅல்லது சி எனும் எழுத்துக்களில் ஒன்று எழுதப்பட்டு நோயாளிக்கு வழங்கப்படுகிறது.

இதனால் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்து வைத்திய ஆலோசனை சிகிச்சை பெற வேண்டியுள்ளதாக நோயாளர் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏ பிரிவில் வைத்தியர் பார்வையிடுவதற்காக நோயாளர்கள் இன்றி இருந்தால் பி பிரிவில் உள்ள நோயாளி ஏ பிரிவு வைத்தியரிடம் தம்மை காண்பிக்க முடியாது தமக்கு நியமிக்கப்பட்டுள்ள பி பிரிவ வைத்தியரிடமே சிகிச்சை பெற வேண்டும்.

இதனால் நோயின் நிமிர்த்தம் சிகிச்சை பெற வருவோர் நீண்ட நேரம் காத்திரு ந்து வைத்தியரை சந்தித்து சிகிச்சை பெற்று செல்வதை அவதானிக்க முடிகிறது.

எனவே ஏ, பி, சி எழுதுவதை நிறுத்தி நோயாளர்களை நீண்ட நேரம் காத்திருக்க வைக்காது சிறந்த முறையில் விரைவாக சிகிச்சை பெற்று வீடு செல்ல வைத்திய சாலை நிர்வாகம் ஒழுங்குகளை செய்ய வேண் டுமென நோயாளிகள் கோரி க்கை விடுக்கின்றனர். (அ-2-283)

11 இலட்சம் ரூபா பெறுமதியான விதை தானியங்கள் வழங்கப்பட்டன

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பாள்புரம் கிராமத்திலுள்ள 200 விவசாயிகளுக்கு 11 இலட்சம் ரூபாய் பெறுமதியான விதை தானியங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் நிதியுதவியில் இந்த விதை தானியங்கள் கடந்த 23 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளன.

விதை தானியமான நிலக்கடலை, உழுந்து, பயறு, நெல் ஆகியவை வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றை பயிரிடும் நடவடிக்கைகளை விவசாயிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு இறுதியிலும், இவ்வாண்டும் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவிய கடும் வரட்சி காரணமாக தானிய செய்கைகள் அழிவடைந்தன. இதனால், விவசாயிகளால் விதை தானியங்களை பெற முடியாத சூழ் நிலையேற்பட்டது. இந் நிலையிலேயே, தற்போது விதை தானியங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

இளைஞர் கழகத்தின் நிர்வாகத் தெரிவு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நீராவிபிட்டி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள இளைஞர் கழக நிர்வாகத் தெரிவு கூட்டம் அண்மையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஜெ.சுகந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது 2015 ஆம் ஆண்டுக்கான நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதன்படி தலைவராக S.சுகைல், செயலாளராக S.சப்ராஸ், பொருளாளராக H.ஜெரித் அமைப்பாளராக, S.A.M.அசீம் உபதலைவராக H.ஜெரிஸ், உப செயலாளராக S.சப்ரிஸ் ஆகியோர் தெரிவாகினர்.

துறைசார்ந்த செயலாளர்களாக விளையாட்டுக்காக M.I.M.நாசிர் கலாசாரத்திற்காக M.S.சுஹ்சான், கல்வி பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டலுக்காக M.S.அகீல், கணக்கு பரிசோதகராக R.M.ராசித் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இந்நிகழ்வில் அக்கிராம சேவையாளர் பிரிவின் கிராம மட்ட அமைப்புக்களின் உறுப்பினர்களும் கரைதுறைப்பற்று பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தரினால் இளைஞர் கழக எதிர்கால செயற்பாடுகள் பற்றி பூரண விளக்கம் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இப்புதிய நிர்வாக தெரிவுக்கூட்டத்தில் இளைஞர்கள் 40 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (2-281)

இரணைமடு சந்தைக்குள் மழைகாலத்தில் நீர்த்தேக்கம்

கவனத்தில் எடுக்குமா கரைச்சி பிரதேச சபை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக் குட்பட்ட இரணைமடு பொதுச் சந்தை பள்ளக் காணியில் அமைக்கப்பட்டுள்ளதால்மழை காலங்களில் பொது சந்தை வளாகத்தினுள்மழைநீர்தேங்கி நின்று சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துவதாகவும் இதனால் வியாபார நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும் வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



குறித்த சந்தை வளாகத்தினுள் பலசரக்கு கடைகள், மீன், மரக்கறி, இறைச்சி கடைகள் என 40 இற்கு மேற்பட்ட கடைகள்அமைக்கப்பட்டுள்ளன.

இதில் மீன் மற்றும் மரக்கறி கடைகள் கரைச்சி பிரதேச சபையினரால் கட்டப்பட்ட கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

கிளிநொச்சியில் பெய்து வரும் மழையை அடுத்து இச் சந்தை நுழைவாயிலிலிருந்து வியாபார நிலையங்கள் வரை மழை நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால்டெங்குகாய்ச்சல், சிரங்கு கடி போன்ற நோய்கள் ஏற்பட லாம் என வர்த்தகர்கள் அச்சம் தெரி விக்கின்றனர்.

அத்துடன் வியாபார நிலையங்களுக்கு முன்பாக மழை நீர் தேங்கி நிற்பதால் பொருட்களை நுகரவருவோர் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்கொள்வதால் வியாபாரத்தில் பின்னடைவு ஏற்படுவதாகவும்அவர்கள்தெரிவிக்கின்றனர்.

குறித்த மீன் சந்தைக்கு மலை யாளபுரம், பொன்னகர் பாரதிபுரம் இரணைமடு கனகாம்பிகைக் குளம் அரை ஏக்கர் திட்டம், சாந்தபுரம், செல்வநகர், முறிகண்டி, திருமுறிகண்டி, கிளிநொச்சி 155 ஆம் கட்டை கிழக்கு மக்கள் கிருஷ்ணபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாட பொருட்களை கொள்வனவு செய்யும் இடமாக இது காணப்படுகின்றது.

இச்சந்தையினுள் தேங்கி நிற்கும் மழைநீரிலிருந்து துர் நாற்றம் வீசுவதாக வர்த்தகர்களாலும் நுகர்வோராலும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் மீன்சந்தைக்கு அருகாமையில் புற்றரைகள், குப்பைகள் காணப்படுவதால் டெங்கு நுளம்பு உற் பத்தியாகுமென வர்த்தகர்களால் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கரைச்சி பிரதேச சபையினரிடம் சந்தை வர்த்தகர்கள் நேரில் சென்று சந்தை வளாகத்தினுள் தேங்கி நிற்கும் மழை நீரினால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் வாய்க்கால்அமைத்துஅந்நீரை வெளி யேற்றித் தருமாறும் பலசரக்கு கடைகளின் முன்பாக குவிக்கப்பட்டுள்ள கல் மற்றும் மணற் குவியல்களை அகற்றித் தருமாறும் முறையிட்டும் நேற்று வரை எதுவித நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கட்டாக்காலி நாய் களின் பெருக்கம் அதிகரித்து காணப் படுவதால் அவை வியாபார நிலை யங்களினுள் நுழைந்து அசௌகரியங்களை ஏற்படுத்துவதாக வர்த்தகர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் சந்தைக் காப் பாளரிடம் முறையிட்டும் நாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப் படவில்லை.

எனவே கரைச்சி பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் இச் சந்தையை நேரில் சென்று பார்வையிட்டு மழை நீரை அகற்றுவதற்கான வழிமுறை அமைத்து வியாபார நடவடிக்கைகளுக்கு உதவுமாறு வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இச்சந்தையானது இவ்வாண்டு யூன் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனினால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2-271)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்த ஆட்சிக்கு விரைவில் முடிவு!

ஐ.தே.க.எம்.பி.தெரிவிப்பு

கொடுங்கோல் ஆட்சி மூலம் நாட்டை சீரழித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு விரைவில் முடிவு கட்டப்படவுள்ளது. இதனால், கலக்கத்தில் இருக்கும் கூட்டணி அரசு தற்போது அடக்குமுறை மூலம் தேர்தலில் வெற்றி கொள்வதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது. இது விடயத்தில் பொலிஸாரும் பக்கச் சார்பாகவே செயற்படுகின்றனர்.

சந்திரிகாவின் கருணையால்தான் மகிந்த ஜனாதிபதியான்ார். இன்று சந்திரிகாவாலேயே அவர் அரியணையில் இருந்து இறங்கப் போகின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான கே.வேலாயுதம் தெரிவித்தார்.

மகிந்த ஆட்சியின் கீழ் ஜனநாயகம், சுதந்திரம் ஆகியன படுகொலை செய்யப்பட்டதாலும், குடும்ப ஆதிக்கம் கோலோச்சியதாலுமே 47 வருடங்கள் சுதந்திரக் கட்சியில் இருந்த அக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன இன்று பொதுவேட்பாளராக களமிறங்கி, நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

எனினும், இவர்மீதும் தற்போது புலி முத்திரை குத்தப்படுகின்றது. சர்வதேச சூழ்ச்சி இதன் பின்னணியில் இருக்கின்றது என அரசு கொக்கரிக்கின்றது. 47 வருடங்களாக தேசப்பற்றாளராக விளங்கிய மைத்திரி இன்று எப்படி அரசின் கண்களுக்கு புலியாக விளங்குகின்றார். இதுவரை காலமும் தனது பிரசாரத்துக்காகவே இந்த அரசு புலிப் பல்லவி பாடியுள்ளது என்பது இதன்மூலம் புலனாகின்றது.

மகிந்தவை வீழ்த்த முடியாது என சூளுரைக்கும் ஆளும் கட்சியினர் ஏன் புலிகளை வைத்து பிரசாரம் செய்ய முற்பட வேண்டும்? ஜனாதிபதிக்கு கூட ஏன் திடீரென் மாவீரர் தினம் நினைவுக்கு வரவேண்டும்? இவை யாவும் அச்சத்தின் வெளிப்பாடுகளாகும். தோல்வியை முன்கூட்டியே உணர்ந்துள்ளதாலேயே, வெற்றி பெற்று விடுவோம் என்ற போலிப் பிரசாரத்தை அரசு முன்னெடுத்து வருகின்றது.

நல்லாட்சியை ஏற்படுத்தி, மகக்ளின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்கும் நோக்கிலேயே பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார். இதன பின்னணியில் எவ்வித சூழ்ச்சியும் இல்லை. சிங்கள மக்களை திசை திருப்புவதற்காகவே அரசு புலிக்கதை கூறுகின்றது. இதை நம்பு வதற்கு சிங்கள மக்கள் இனியும் தயாரில்லை என அவர்மேலும தெரிவித்துள்ளார். (இ-5)

மாவீரர் தினச்செய்திகளை பரிமாறிய இருவர் கைது

அலைபேசியூடாக மாவீரர் தினச் செய்திகளை பரிமாறியதாகக் கூறப்படும் இருவரை நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை கைதுசெய்துள்ளதாக மட்க்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவீரர் களாகிய நீங்கள் புதைக்க ப்பட்டவர்கள் அல்ல விதைக் கப் பட் டவர் கள், என்றோ ஒரு நாள் நீங்கள் வீறுகொண் டெழுவீர் கள் என்ற குறுஞ்செய்தியை பரிமாறிக்கொண்டதாகக் கூறப்படும் இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

உழவு இயந்திரம் புரண்டதில் காயமடைந்தவர் உயிரிழப்பு

நோட்டன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நோட்டன் ஒஸ் போன் 50 ஏக்கர் தோட்டத்திலிருந்து லெதண்டி தோட்டத்துக்கு கொழுந்து ஏற்றிச் சென்று கொண்டிருந்தபோது டிரக்டர் வண்டி விபத்துக்குள்ளானதில் காயமடைந் தவர் உயிரிழந்துள்ளார்.

இந்த டிரக்டர், நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் 25 அடி பள்ளத்தில் பாய்ந்தே விபத்துக்குள்ளானது.

டிரக்டர் வண்டியில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாகவே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் ஒஸ் போன் தோட்டத்தை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான சக்திவேல் (வயது 43) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதில் சாரதி உட்பட உயிரிழந்தவரான சக்திவேல் ஆகிய இருவரும் பயணித்துள்ளதாகவும் இவ்விபத்தில் சாரதிக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

ஜனாதிபதி மகிந்தவுக்கு தமிழரின் வாக்குகள்

சுவாமி நம்பிக்கை

இலங்கையில் 40 வீதமான தமிழ் மக்கள் ஜனாதபதி மகந்த ராஜபக்சவுக்கே தேர்தலில் வாக்களிப்பார்கள் என இந்தியு பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த சுப்ரமணிய சுவாமி தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர் இந்த தேர்தலில் ஜனாதபதி மகந்த ராஜபக்ச வெற்றி பெற்றால் இலங்கை தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வு கனவை நனவாக்க தான் உதவி புரிவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

டுவிட்டரில் சுப்ரமணிய சுவாமி குறிப்பிட்டுள்ள இவ்விடயத்துக்கு பலர் பாராட்டுக்களை தெரிவித்துள்ளதுடன், இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தாமும் உதவி புரிவதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மரண தண்டனை பெற்ற தமிழக மீனவர்கள் 5 பேரையும் விடுவித்தமைக்காக ஜனாதிபதி மகந்த ராஜபக்சவை வாழ்த்துவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர் என அரசுசார்பான ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள் ளன. (இ-5)

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரிகள் கலந்து கொண்ட சாசியன் eseaη உயர் மட்ட பாதுகாப்பு மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமானது. இந்த மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் ஜகத் சூரியவின் தலைமையில் கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகவும் பிரதான பேச்சாளராகவும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கலந்து கொண்டார்.

ஒரு இலட்சம் மெற்றிக்தொன் உப்பு உற்பத்தி எதிர்பார்ப்பு

ஆனையிறவு உப்பளம் குறித்து சிவஞானசோதி அறிக்கை

ஆனையிறவு உப்பளத்தின் ஊடாக வருடம் தோறும் 70 ஆயிரம் தொடக்கம் ஒரு இலட்சம் மெற்றித் தொன் உப்பினை உற்பத்தியில் செய்ய முடியும் என பாரம்பரிய கைத்தொழில்கள்மற்றும்சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

ஆனையிறவு உப்பளம் 1938 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை சிறப்பாக இயங்கி வந்ததுடன் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆனையிறவு உப்பளத்தின் வருடாந்த உப்பு உற்பத்தி 60 ஆயிரம் 80 ஆயிரம் மெற்றிக் தொன்களாகக் காணப்பட்டது. அக்காலத்தில் நாட்டின் மொத்த் உப்புத் தேவையில் 30 முதல் 40 சதவீதமான பகுதி ஆனையிறவு உப்பளத்தின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. ஆனையிறவு உப்பளம் மொத்தமாக 1946 ஏக்கர் பரப்பைக் கொணடதாகும். அதில் 1169 ஏக்கர் நிலம் வட பகுதியிலுள்ள குறிஞ்ச தீவில் அமைந்துள்ளது. மீதி 777 ஏக்கர்களும் பொதுவாக ஆனையிறவு என அழைக்கப்படும் பகுதியில் அமைந்துள்ளன.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த உப்பளம் உயர் தரத்திலான தூய வெள்ளை உப்பை உற்பத்தி செய்தது.

1938 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆனையிறவு உப்பளம் உயர்தரத்திலான தூய வெண்ணிற உப்பை மகவும் வெற்றிகரமான முறையில் உற்பத்தி செய்து வந்ததாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கூறுகின்றார் எவ்வாறாயினும், யுத்த சூழ்நிலையின் காரணமாக உப்பளத்தின் தொழிற்பாடுகள் 1990 ஆம் ஆண்டில் கைவிடப்பட்டு கடந்த 23 வருடங்களாக மூடப்பட்டிருந்தது.

பாரம்பரிய கைத்தொழிலகள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டு கோளின் பேரில் ஆனையிறவு உபபளத்தின் புனரமைப்பு வேலை களை ஆரம்பிப்பதற்காக 2014 மே மாதத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ 100 மில்லியன் ரூபா நிதியினை வழங்கினார.

இந்த ஆரம்ப நிதி ஒதுக்கீடு, கட்டம் 1 இன் புனரமைப் பணிக்காகப் பயன்படுத்தப் [illegible] கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கூறுகின்றார். கட்டம் 1 மீள ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வருடாந்தம் 20,000 - 25,000 மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வகையில் 15 நீராவியாக்கல் பாத்திகள், 267 உற்பத்திப் பாத்திகள், கடல் நீர் உள்வாங்கல் கால்வாய்கள், வான்வழிகள், கால்வாய்த தொகுதி, வெள்ளத் தடுப்பு அணைகள், நீர்த்தேக்கத்திற்கான கற்குவியல் பாதுகாப்பு, அணைகள், 30 உப்பள மேடைகள், நுழைபாதை, மின்சாரம், கட்டடங்கள் மற்றும் வசதிகள் உள்ளிட்ட தொர்மைய உட்கட்டமைபபு வசதிகள் என்பன மீள்நிர்மாணம் செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

கண்ணிவெடி அகற்றல் பூர்த்தி

உப்பளத்தில் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவியுடன் சமூக நல்லிணக்கத்திற்கான டெல்வொன் உதவி (DASH) நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 10 கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள் பொறுப்பேற்று நடைமுறைப் படுத் துகின் றமை இச்செயற்றிட்டத்தின் விசேட அம்சமாகும்.

ஆனையிறவு உப்பளத்தின் 447 ஏக்கர் கொண்ட இரண்டாம் கட்டத்தின் செயற்பாடுகள் 2015ஆம் ஆண்டில் திறைசேரியின் நிதிகளைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் மூலம் 30 000 மெற்றிக் தொன் உப்பை மேலதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்றும் 3000 இற்கும்மேற்பட்ட வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் வருடாந்தம் 70 ஆயிரம் தொடக்கம்-ஒரு இலட்சம் மெற்றிக் தொன் உப்பினை உற்பத்தி செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மிடமுள்ள குறைகளை நீக்கிக் கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும் -கதை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

சுபநேரத்திலும் சோதிடத்திலும் நம்பிக்கை கொண்ட இலங்கை

சோதிடத்தின் பிறப்பு இந்திய தேசமாயினும் அதன் வளர்ப்பு இலங்கை என்று சொல்லலாம் அந்தளவிற்கு சோதிடத்தின் மீதான நம்பிக்கை இலங்கையின் ஆட்சிப் பீடங்களில் மிகப்பெரிய ஆதிக்கத்தைக் கொண்டுள்ளன.

இலங்கை வேந்தன் இராவணன் முதல் இப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரை சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதை அறிய முடிகிறது.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ சோதிடர்களின் ஆலோசனைப்படியே நடந்து கொண்டார். அவர்ஒரு முறை பொது மேடையொன்றில் உரையாற்றுகையில்,

நான் பிறந்தபோது எனது தந்தையார் எனது ஜாதகத்தை ஒரு சோதிடரிடம் காட்டினார். ஜாதகத்தைப் பரிசீலித்த சோதிடர் இந்தக் குழந்தை ஒரு காலத்தில் இந்த நாட்டை ஆட்சி புரிவான் என்று கூறினார்.

எனினும் எனது தந்தை அதை நம்பவில்லை எங்களின் குடும்ப சமூக நிலைமையே அந்த நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருந்தது.

சோதிடரின் வாக்கை எனது தந்தையார் மறுதலித்தார் எனினும் சோதிடர் விடுவதாக இல்லை. குழந்தை பிறந்த நேரம் இது எனில் அந்தக் குழந்தை இந்த நாட்டை நிச்சயம் ஆழ்வான் என்று உறுதிப்படத் தெரிவித்தார்.

இதை பிரேமதாஸ மேடையில் கூறும் போது இந்த நாட்டின் ஜனாதிபதியாகவிருந்தார். பிரேமதாஸவிற்கு காலம் அதிகம் நல்லதல்ல என்று சோதிடர்கள் கூறியதன் காரணமாக அவர் வெளிநாட்டுப் பயணங்களை முற்றுமுழுதாக தவிர்த்து வந்தார்.

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டால் ஆபத்து ஏற்படலாம் என்ற அடிப்படையிலேயே ஆர்.பிரேமதாஸ இவ்வாறு நடந்து கொண்டார். எனினும் உள் நாட்டிலேயே அவரது உயிர் பறிக்கப்பட்டது.

இலங்கை வேந்தன் இராவணன் மிகப்பலம் பொருந்தியவன் அவன் பிறந்த நேரம் கிரக பலன்கள் மிகவும் பலமாக இருந்தன எனினும் மூவுலகையும் ஆழ வேண்டும் என்பது அவனின் ஆசையாக இருந்தது.

தனது ஆசையை நிறைவேற்றிக்கொள்ள நாரத முனியை இராவணன் நாடினான். இராவணனின் அரண்மனை வாயிலில் எட்டாவது படியில் முகம் குப்புறக்கிடக்கும் சனீஸ்வரனை நிமர்த்தி விட்டால் உனக்கு மூவுலகையும் ஆழும் அருமை கிடைக்கும் என்றார் நாரதர்.

நாரதர் கூறியதை ஆராயாமல் மூவுலகையும் ஆழ வேண்டும் என்ற ஆசையில் எட்டாம் படியிலிருக்கும் சனீஸ்வரனை நிமிர்த்தி விட அட்டமத்துச் சனியின் பார்வை இராவணன் மீது விழுகிறது.

அதன்பின் சூர்பனகை மூக்கறுபடுகிறாள். சீதையை சிறையிலிருந்த இராமர் இலங்கைத் தீவு மீது போர் தொடுக்கிறார். அனுமன் நாட்டை எரிக்கிறான். கூட இருந்த விபுஷனன் எதிர்த்தரப்புக்குச் செல்கிறார். கும்பகரணன் மாண்டு போகிறான் இருந்த பலனையும் இழந்து இலங்கைவேந்தன் உயிர் துறந்து போனான் என்று அறிகிறோம்.

எனினும் இவையெல்லாம் சோதிடத்தின் மீது கொண்ட அந்த நம்பிக்கையால் ஏற்பட்ட நாசங்கள் என்பதை உணர எவருமில்லை என்றாகி விட்டது.

இவை ஒருபுறமிருக்க ஜனாதிபதி ராஜபக்ஷ தேர்தல் உள்ளிட்ட எந்த முக்கியமான நிகழ்வுகளையும் எட்டாம் நம்பரிலேயே செய்து வருவதை காண முடியும். எட்டாம் நம்பர் அவருக்கு அத்துணை பொருத்தம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் கூட எட்டாம் நம்பரிலேயே நடக்கவிருக்கிறது. நம்பர் பொருத்தம் சரியா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

இதன் இடையே ஜனாதிபதித் தேர்தலை அறிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய படிவத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னதாக சுபநேரத்தை பார்ப்பதில் மிகக் கவனமாக இருந்தார்.

சோதிடர்கள் வகுத்துக் கொடுத்த சுப நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பில் மகிந்த ராஜபக்ஷ ஒப்பமிட்டார். அவர் ஒப்பமிட்டு ஒருசில தினங்களில் அவரோடு இருந்த மைத்திரிபால சிறிசேனவே தனது எதிர் வேட்பாளர் என்ற அதிர்ச்சியான செய்தி ஜனாதிபதிக்குக் காத்திருந்தது.

அதிர்ச்சியான செய்தியோடு முடிவுகள் முற்றுப் பெறுவதில்லை. தேர்தல் முடிவுகள் வரும் வரை பொறுத்திருக்க[illegible] ஆயினும் இலங்கையின் ஆட்சிப்பீடத்தில் சோ[illegible] கொண்டுள்ள வகிபாகம் மிகவும் உயர்வானது என்பதை மட்டும் இப்போதைக்கு கூறிக்கொள்ள முடியும்.

சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் விவகாரம்

முதலமைச்சர் தலைமையில் நேற்று முக்கிய கலந்துரையாடல்

யாழ்.சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள கிணறுகளில் கழிவு எண்ணெய் கலந்துள்ள விவகாரம் தொடாபாக வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விகனேஸ்வரன் தலைமையில் நேற்று வலிதெற்குப் பிரதேசசபை மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. வடக்கு சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாணசபை உறுப் பினர்கள் த.சித்தார்த்தன், பா.கஜதீபன்,வலிதெற்குப் பிரதேசசபைத் தவிசாளர் தி.பிரகாஸ், மத்திய சுற்றாடல் அதிகாரசபைப் பிரதிப் பணிப்பாளர் விஜிதா சத்தியகுமார், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயகுமரன், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமார் மற்றும் வலிதெற்குப் பிரதேசசபை உறுப்பினர்கள்,

பொதுமக்கள் பங்கேற்ற இக்கலந்துரையாடலில், சுன்னாகம் பகுதிக் கிணறுகளில் கழிவு எண்ணெய் கலப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்குத் தற்காலிக மற்றும் நிரந்தரத் தீர்வு தொடர்பாக விரிவாக ஆராப்பட்டுள்ளது. ஏற்கெனவே பிரதேசசபையும் வடமாகாண விவசாய அமைச்சும் குடிநீரை விநியோகித்து வருகின்ற போதும் அவற்றின் போதாமைகள் குறித்துப் பொதுமக்களால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதையடுத்து வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மேலதிகமாக நீர்த்தாங்கிகளை வழங்குவதற்கும் நீர்த்தாங்கி வாகனங்களின் சேவையை அதிகரிப்பதற்கும் தனது அமைச்சினூடாக உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளபபடும் என உறுதியளித்துள்ளார்.

எனினும் தண்ணீர்த் தாங்கி வாகனங்களின் மூலம் குடிநீரை விநியோகிப்பது தற்காலிகத் தீர்வாகவே அமையும் என்பதால், நிரந்தரமான குடிநீர் விநியோகத் திட்டம் ஒன்றை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

சுன்னாகத்தில் இயங்கிவரும் அனல் மின் நிலையத்தில் இருந்து வெளியேறி குடிநீரில் கலந்துள்ள எண்ணெய் மாசுகளை அகற்றும் செயற்பாடுகளுக்கு ஜப்பானிய அரசு உதவ முன்வந்திருப்பதாக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இதன் போது தெரிவித்தார்.

வடமாகாணசபை தோற்றம் பெற்றதன் பின்னர் சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாத தொழில் நிறுவனங்களுக்கு மாத்திரமே தங்களால் அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிவித்த சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சுன்னாகத்தில் இயங்கும் நொதேண் பவர் தனியார் மின் உற்பத்தி நிலையம் எத்தகைய சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றதென்ற அறிக்கையைத் தன்னிடம் கையளிக்குமாறு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக்கலந்துரையாடலின் முடிவில் மேலதிக தொடர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு வாரத்துக்கு ஒரு தடவை கூடி இப்பிரச்சினை தொடர்பாக ஆராயும் எனவும் மேற்படி கூடத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (இ-5)

வெள்ள நீரினால் மக்கள் கடும் அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ். கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி முகவரியில் வசிக்கும் எங்கள் வீடுகள் புகையிரதக் கடவையை அண்டிய கச்சேரிக்கு அண்மித்த சூழலில் இருக்கின்றது.புகையிரதக் கடவை புதுப்பிக்கப்பட்டு புகையிரதம் ஓடத் தொடங்கிய பின்னர் வீதி உயர்த்தப்பட்டு வாய்க்கால்கள் அடைக்கப்பட்டு விட்டன. இதன் காரணத்தால் எங்கள் பகுதியில் உள்ள வெள்ளம் ஓட முடியாது தேங்கி நிற்கின்றது.

வீடுகளில் உள்ள வெள்ளம் வழிந்தோடக் கூடியளவு கான் விடப்பட்டுள்ளது.

இருப்பினும் வெள்ளம் அடைக்கப்பட்டதன் காரணத்தால் இவ் வெள்ளத் தண்ணீர் கிணற்று நீருடன் கலந்து பாவனைக்குதவ முடியாத நிலையில் காணப்படுகின்றது.

கிராமப்புறங்களில் ஏற்படும் பிரச்சினை நகர்ப் புறத்திலும் ஏற்பட்டு எமது வாழ் நிலை பாதிப்படைகின்றது. தயவுடன் யாழ் மாவட்ட செயலகத்தை அண்டிய பிரதேசத்தில் காணப்படும் இந்த நிலையை கருத்தில் கொண்டு ஆவன செய்யுமாறு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை கச்சேரி பகுதியில் வாழும் மக்கள் கேட்டுக் கொள்கின்றனர் என அப்பகுதி மக்கள்ஊடகங்களுக்குஅனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்தனர்.(இ-5)

ஓவியக் கூடத்தின் வருட நிறைவு நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக்கூடம் நிறுவப்பட்டு முதல் ஆண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சிறப்பு நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்குஇலக்கம் 15,றக்கா வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றத்தில் நடைபெறவுள்ளது.

மூத்த ஓவியர் மு.கனகசபை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிறப்பம்சமாக ஜேர்மனி நாட்டின் மியூனிச் நகரிலுள்ள சிற்ப- ஓவியக் கூடம் பினக் கொத்தேக் டேர் மொடேர்ணே பற்றி காணொளியுடனான விளக்கவுரை இடம்பெறும், இதனை திருமறைக் கலாமன்ற இயக் குநர் நீ.மரிய சேவியர் அடிகளார் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் ஓவிய ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (இ-5)

விருது வழங்கும் நிகழ்வு

யாழ்.வலிகாமம் கல்வி வலயம் வழங்கும் வலய மட்டத்தில் சாதனை படைத்தோருக்கான விருது வழங்கும் நிகழ்வு இன்றுசனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் [illegible] சிறி [illegible] ளனர். (இ-5)

வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"மரம் போன்ற ஒரு அழகான கவிதையை ஒருபோதும் காணமாட்டேன் என நினைக்கிறேன்"

-ஜெய்சி கில்மர் (அமெரிக்க எழுத்தாளர்)

ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்

பெற்றோருக்கான செய்தி

ஒரு ராஜாவிடம் கடும் சொற்களைப் பேச முடியாது. முரட்டுத்தனமாக நடக்கலாகாது. மிகவும் பணிவாக இருத்தல் வேண்டும். இந்த நாடு முழுவதும் இவ்வாறு செய்யமுடிந்தால் இது ஒரு உண்மையான நாடாக மாறிவிடும். ஒரு மகத்தான நாடாக மாறிவிடும். நம் குழந்தைகளை வளர்க்கும் முறை நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். நீங்கள் கருத்தரிக்கும் முன்னரே சில முக்கியமான நிகழ்ச்சிகளில் நீங்கள் பங்கேற்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இன்று (ஒரு டாம், டிக் மற்றும் ஹரி) யார் வேண்டுமானாலும் குழந்தையைப் பெற்றுக்கொள்கிறார்கள். வளர்க்கிறார்கள். ஒரு பயங்கர உலகை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் இவைகளின் மேல் உங்கள் கவனத்தைச் செலுத்தி உழைக்கவேண்டும்.

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

விதியை நீயே வகுக்கலாம்

- நாம் நம்மைப் பற்றி எண்ணாத நேரத்தில் மட்டுமே உண்மையான வாழ்க்கையை அனுபவிக்கிறோம்.
- ஆற்றல் மிக்க மனிதர்கள் தங்களுக்குஉரிய விதியை தாங்களே வகுத்துக் கொள்கிறார்கள்.
- சுதந்திரமான நிலையில் மட்டுமே அன்பு முழு அளவில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்.
- எந்தப் பணியில் ஈடுபட்டாலும், அதை உயர்ந்த வழிபாடாக எண்ணிச் செய்யுங்கள்.
- அன்பும், வெறுப்பும் புறப்பட்ட இடத்திற்கே மீண்டும் வந்து சேரும் ஆற்றல் படைத்தவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப் ஹியூக்ஸின் மரணம் கதறி அழுத சீன் அப்போட்

அவுஸ்திரேலிய வீரர் பிலிப் ஹியூக்ஸின் மரணம் அவரது குடும்பம், நண்பர்கள் மற்றும் கிரிக்கெட் உலகத்தை சோகத்தில் ஆழ்த்தி இருக்கிறது.

இதைப்போலவே அவருக்கு பந்து வீசிய சீன் அப்போட்டும் மிகவும் மனமுடைந்த நிலையில் இருக்கிறார். அப்போட் 22 வயதேயான இளைஞர் என்பதால் இந்த சம்பவத்தை இலகுவாக அவரால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. பந்தில் அடிபட்டு தலை குப்புற பிலிப் ஹியூக்ஸ் கீழே விழுந்தவுடன் அப்போட் பதறிப் போனார். ஹியூக்ஸை தூக்கிச் சென்ற ஸ்ட்ரக்சரின் பின்னாலேயே ஓடிச் சென்றார்.

மருத்துவமனைக்கு சென்றும் நலம் விசாரித்தார். ஆனால் ஹியூக்ஸ் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்தார்.

இதனால் அவர் அதிர்ச்சியில் உறைந்துள்ளார். இந்த சம்பவத்தில் இருந்து அப்போட்டால் மீண்டு வர முடியவில்லை. இது அவரது மனதில் அப்படியே பதிந்துள்ளது.

சீன் அப்போட்டும் மருத்துவமனைக்கு வந்திருந்தார். ஹியூக்ஸின் உடலை பார்த்து கண்ணீர் விட்டு அழுதார். அவரை சக வீரர்கள் தேற்றினார்கள்.

இதையடுத்து அணியின் சார்பில் மனோதத்துவ மருத்துவர்களை கொண்டு அப்போட்டுக்கு கவுன்சிலிங் அளிக்கப்படுகிறது. அன்றைய போட்டியில் பங்கேற்ற அனைத்து வீரர்களுமே கவுன்சலிங்கிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கிளன் மெக்ராத், பிரெட்லீ, ஷான் பொல்லாக் போன்றோர்களும், அப்போட்டுக்காகவும் வேணடிக்கொள்வதாகவும், அவர் சோர்ந்து விட கூடாது என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வேகப்பந்து வீச்சாளரின் மன நிலை, அவர் எதற்காக பந்தை பவுன்சராக வீசினார் என்பவையெல்லாம் வேகப்பந்து வீச்சாளர்களுக்குதான் நன்கு தெரியும் என்பதால் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்கள் அப்போட்டுக்கு ஆதரவளித்துள்ளனர். (க)

தோழியை கரம்பிடிக்கிறார் டெனிஸ் வீரர் ஆன்டி முர்ரே

பிரிட்டன் டெனிஸ் வீரரான ஆன்டி முர்ரே தனது 9 ஆண்டு கால தோழியான கிம் சியர்சை திருமணம் செய்து கொள்ள போவதாக அறிவித்துள்ளார்.

ஸ்கொட்லாந்தில் உள்ள டன்பிளேனில் முர்ரேவின் இல்லத்தில் வசிக்கும் குடும்பத்தினரிடம் அவர் இந்த செய்தியை தெரிவித்துள்ளார்.

அவரது 83 வயது பாட்டியான ஷிர்லி எஸ்கைய்னிடம் இவ்விடயத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு முர்ரே கூறியபோது, திருமணத்திற்கான நேரம் வந்து விட்டது என்று அவர் நகைச்சுவையுடன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஷிர்லி, நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்துள்ளோம. கிம் மிகவும் அன்பான பெண்ணென்று



கூறியுள்ளார்அவரது தந்தா ராய் கூறு கையில், ஆனடி தொலைபேசியில் எங்களை அழைத்து கிம்மிடம் தனது விருப்பத்தை கூறியதாக தெரிவித்தார் என்று கூறியுள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் டெனிஸ் போட்டியிலும், 2012ஆம் ஆண்டு நடைபெற்ற யு.எஸ். ஓபன் டெனிஸ் போட்டியிலும் முர்ரே கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது. (க)

மத்திய கல்லூரி வெற்றி

ஹரிகரன் சிறப்பாட்டம்

ஹரிகரன் சிறப்பான பந்து வீச்சால் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தை வென்றது யாழ் மத்திய கல்லூரி.இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் மட்டுப்படுத்தப்படாத பந்துப்பரிமாற்றம் கொண்ட இரண்டு நாள் துடுப்பாட்ட போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியினை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் முதல் இனிங்ஸில் 25.4 பந்துப்பரிமாற்றத்தில் 28 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் யாழ். மத்தி சார்பாக சௌமிதரன், டர்வின், அலன்ராஜ் தலா 3 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 77.3 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் யூலியஸ் கலிஸ்ரன் 61 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் கம்சிகன் 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

172 ஓட்டங்கள் பின்னிலையில் தமது இரண்டாவது இனிங்ஸினைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 40 பந்து பரிமாற்றங்களில் 96 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து, இனிங்ஸ் மற்றும் 76 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பாக ஹரிகரன் 27 ஓட்டங்களைக் விட்டுக் கொடுத்து 9 இலக்குகளைக் கைப்பற்றி, ஓர் இனிங்ஸில் அதிக விக்கெட்களை கைப்பற்றிய சாதனையும் நிலைநாட்டியுள்ளார்.

இரண்டு இனிங்ஸிலும் இவர் 10 விக்கெட்களையும் கைப்பற்றினார். (க-23)

சாதனையில் மெஸ்ஸி

சம்பியன்ஸ் லீக் காற்பந்து போட்டியில் அதிக கோலடித்தவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் ஆர்ஜென்டீனாவின் லியோனல் மெஸ்ஸி.

சைப்ரஸின் நிகோஸியா நகரில் நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் ஆட்டத்தில் மெஸ்ஸி தலைமையிலான பார்சிலோனா அணியும், ஏபோல் நிகோஸியா அணியும் மோதின.

இந்த ஆட்டத்தின் 37ஆவது நிமிடத்தில் கோலடித்த மெஸ்ஸி 72 கோல்களுடன் சம்பியன்ஸ் லீக் வரலாற்றில் அதிக கோலடித்தவர் என்ற சாதனையைப் படைத்தார்.

முன்னதாக ஸ்பெயினின் ராவ்ல் 71 கோல்கள் (142 ஆட்டங்கள்)

அடித்ததே சாதனையாக இருந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு ஸ்பெயின் லீக்கில் அதிக கோலடித்தவர் என்ற சாதனையைப் படைத்த மெஸ்ஸி, இப்போது அடுத்த சாதனையை நிகழ்த்தியிருக்கிறார். (க)

அரிதான காயத்தால் உயிரிழந்த ஹியூக்ஸ் மருத்துவரின் ரிப்போர்ட் தெரிவிப்பு

பவுன்சர் பந்தில் அடிபட்டு பிலிப் ஹியூக்ஸிற்கு ஏற்பட்டிருக்கும் இத்தகைய காயம் அரிதானது என்று அவருக்கு அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் டோனி கிராப்ஸ் தெரிவித்துள்ளார். அடிபட்டவுடன் முதுகெலும்பு தமனி முறிந்தது. இதனால் கடுமையாக குருதிப் போக்கு ஏற்பட்டது. இதுவே அவரது மரணத்திற்குக் காரணமாக அமைந்தது என்று கூறியுள்ளார்.

மேலும் இது குறித்து டோனி கிராப்ஸ் கூறுகையில், முதுகுத் தண்டையும், மூளையையும் பாதுகாக்கும் சப்அரக்னாய்டு சவ்வுகளில் குருதிப்போக்கு ஏற்பட்டு பிலிப் ஹியூக்ஸ் மரணமடைந்தார்.

இது மிகவும் அரிதாக நிகழ்வதே. மொத்தமாகவே இதுவரை இதுபோன்ற நிலை 100 பேர்களுக்குத்தான் ஏற்பட்டுள்ளது.

அவருக்கு மூளையின் அந்தப் பகுதியில் அழுத்தத்தைக் குறைக்க சிகிச்சை அளிக்க முடிவெடுத்தோம். அதன் பிறகு மண்டை ஓட்டின் சில பகுதிகளை அகற்றி மூளை 'விரிவடைய வழிவகை செய்தோம்.

ஏனெனில் மூளை இரத்தக்கட்டியினால் சுருங்கிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தோம். அறுவை சிகிச்சை சுமார் 1 மணி நேரம் 20 நிமிடங்கள் நடந்தது. அதன் பிறகு தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு அவரை மாற்றினோம்.

இவ்வகை விடயங்களில் எங்களது அணுகுமுறை என்னவெனில்அவரை கோமாவில்ஆழ்த்துவது. ஏனெனில் மூளைக்கு ஓய்வு அளிக்கப்படவேண்டும். ஆனால் அதே சமயத்தில் உடலின் மற்ற செயற்பாடுகளை கண்காணித்து வந்தோம்.

24 மணி நேரம் முதல் 48 மணி நேரம் வரை காத்திருந்தோம், எங்களால் முடிந்தவற்றைச் செய்து பார்த்தோம், ஆனால் முன்னேற்றம் ஏற்படவில்லை. கடைசியாக அவர் உயிர் பிரிந்தது என்று கூறியுள்ளார். (க)

'புல்லட்' போல் தாக்கிய பந்து

'பவுன்சருக்கு' தடை

அகர வேகத்தில் வீசப்படும்பவுன்சர் பட்ஸ்மேனின் தலை,கழுத்து பகுதியைநோக்கிவரும்.இத்தகைய பந்துகளை சரியாக சமாளிக்க தவறினால் காயம் ஏற்படுவதை தவிர்க்க இயலாது .இதனால் தான் ஓவருக்கு ஒரு பவுன்சர் போன்ற கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன ஹியூக்ஸ் காயம்அடைந்ததை தொடர்ந்து பவுன்சருக்கு தடை விதிக்க வேண் டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.இதுகுறித்து அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஸ்டுவர்ட் கிளார்க் கூறுகையில். பட்ஸ்மேனைஅச்சுறுத்துவதே எங்களது பணி. டெஸ்ட் கிரிக்கெட்டில் பவுன்சர் என்பதுசகஜம். இதற்கு தடைவிதித்தால் போட்டியில் சுவாரஸ்யம் குறைந்து விடும் என்றார்.

சுமார் 160 கிராம் எடை கொண்ட பந்தை மணிக்கு 140 கி.மீ. வேகத்தில் பவுன்சராக வீசினார் சியான் அப்போட் உடல் அசைவு நிபுணர்கள் கணிப்பில் இது ஒரு புல்லட் வேகத்தில் பிலிப் ஹியூக்ஷின் தலை பகுதியை தாக்கியிருக்கிறது. இதன் காரணமாக....



- செரிபெலம் எனப்படும் சிறு மூளையில் மனிதனுக்கு சுய உணர்வு அளிக்கும் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது..
- மூளையில் வீக்கம் ஏற்படும்
- குணமடைய நீண்ட காலம் தேவைப்படும் மருத்துமனையில் தொடர்ந்து சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலனாய்வுப் பிரிவுகளின் பணிகள் முக்கியமானவை

பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



பிராந்திய பிரச்சினைகளை தீர்ப்பதில் புலனாய்வு பிரிவுகளின் பணிகள் மிக முக்கியமானவை என பாதுகாப்பு மற்றும் நீர்ர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்ப மாகிய தெற்கு மற்றும் கிழக்காசிய நாடுக ளின் பாதுகாப்பு தலைமை அதிகாரிகளின் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல், போதைப் பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாதம் என்பனவே தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகள் எதிர்நோக்கும் பிரதான பிரச் சினைகளாகும்.

நாம் பொருளாதாரம் மற்றும் முன்னே ற்றம் தொடர்பான பயணத்தை முன்னெடுக் கும் போது இவற்றை அடக்குவது மிக முக் கியமானது.

இதற்காக எம்மிடம் இருக்கும் சிறந்த ஆயுதம் புலனாய்வு பிரிவுகளாகும். புலனா ய்வு பிரிவுகள் பெறும் தகவல்களை நாடுக ளுக்கு இடையில் பரிமாறிக்கொள்ளப்படும் போதே புலனாய்வு பிரிவுகள் சிறந்த முறை யில் செயற்பட முடியும் என்றார் (எ-11)

கடற்படையின் இல்லத்தில் தங்கிய முன்னாள் நீதியரசர்?

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள கடற்படை இல்லத்தில் தங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள் ளன.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வைத் தோற்கடிப்பதற்கான எதிரணியின் முயற்சிகளில் முக்கிய பங்காற்றி வருபவர் இவர்.

இந்நிலையில், கடற்படையின் இல்லத் தில் அவர் தங்கியிருப்பது அரசியல் வட்டார ங்களில் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியு ள்ளது.

இவருடன் போதைப்பொருள் எதிர்ப்பு முகவரகத்தின் தலைவர் பேராசிரியர் அர்ஜுன டி சில்வாவும் காங்கேசன்துறையிலுள்ள கடற்படை இல்லத்தில் தங்கியுள்ளதாக படைத்துறை அமைச்சு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு உறுதிப்படுத்தியு ள்ளது.

இந்தக் கடற்படை இல்லத்தில் ஜனாதிபதி, மூத்த படையதிகாரிகள் மற்றும் அவர்களின் விருந்தினர்கள் மாத்திரமே தங்குவதற்கு அனுமதிக்கப்படுவது வழக்கமாகும்.

எனினும், இந்தக் கடற்படை இல்லத்தில் தங்குவதற்கு சரத் என்.சில்வா கடற்படைத் தலைமையகத்தின் அனுமதியைப் பெற்றுள் ளதாக படைத்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-11)

அவுஸ்ரேலியா சென்ற 37 பேர் இல.கடற்படையிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகச் சென்ற போது இந்தோனேசியக் கடற்பரப்பில் வைத்து அவுஸ்திரேலிய கடலோரக் காவற் படையால் கைது செய்யப்பட்ட 37 இலங்கை யர்கள் இலங்கை கடற்படையினரிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அகதிகள் 37 பேருடன் கடந்த முதலாம் திகதி சென்ற படகு ஒன்று இந்தோ னேசியாவுக்கு அருகே அவுஸ்திரேலிய கட லோரக் காவற்படையால் தடுக்கப்பட்டிருந் தது.

இந்நிலையில், மிகவும் இரகசியமான முறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இப் படகை இலங்கை கடற்படையிடம் அவுஸ்தி ரேலியக் கடலோரக் காவற்படை ஒப்படைத்து ள்ளது.

இவர்களை நேற்று முன்தினம் இலங்கை அழைத்துச் சென்ற கடற்படையினர், பொலி ஸாரின் குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படை த்துள்ளனர்.

இவர்களில் 13 சிங்களவர்களும், 23 தமிழர்களும் ஒரு பறங்கியரும் உள்ளடங் கியிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அத் துடன், ஒன்பது மாதம் முதல் 10 வயதுக்கு உட்பட்ட ஆறு சிறுவர்களும் இதில் அடங் கியுள்ளனர்.

இந்தப் படகில் பிடிபட்ட தமிழர்கள் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)

மூன்று மீனவர்களைக் காணவில்லை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடலுக்குள் நேற்று அதி காலை மீன்பிடிக்க சென்ற மூன்று மீனவர் களை காணவில்லையென் மீனவரின் உற வினர்களால் முறைப்பாடு பதிவு செய்யப்பட் டுள்ளது.

பருத்தித்துறை சக்கோட்டை பகுதியை சேர்ந்த பொன்ராசா நித்தியசீலன் (வயது 31), லூசியஸ் ஜெயபாலன் (வயது 28), செப மாலை றோபேட் கெனடி (வயது 36) ஆகிய மூன்று மீனவர்களே காணாமற்போயுள்ளனர்.

இவர்களுடன் கடலுக்கு சென்ற மற்றய மீனவர்கள் கரைக்கு திரும்பியபோதும், ஒரு படகில் ஒன்றாக சென்ற இவர்கள் மூவரும் இன்னமும் கரைக்கு திரும்பவில்லை.

இதனையடுத்து, சக்கோட்டை மீனவ சங் கத்தின் இரண்டு மீனவ படகுகள் தேடுதல் நடத்தியும் காணாமற்போனவர்களை மீட்க முடியவில்லை. கடற்கொந்தளிப்பால் தேடுத லுக்கு சென்ற மீனவ படகுகளும் மீண்டும் கரைக்கு திரும்பி வந்துள்ளன.

கடல் கொந்தளிப்புடன் காணப்படுவதால் கடற்படையினருடைய உதவியுடன் தேடுதல் பணியை மேற்கொள்ள முடியாமல் இருப்ப தாக பொலிஸார் கூறினர்.

மேற்படி 3 மீனவர்களும் பலாலி மற்றும் மயிலிட்டி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது தற்காலிகமாக சக்கோட்டை பகுதியில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(எ-10-60)

தவறிவிட்டது

(8475)

சச்சிதானந்தன் சர்மிலன் ஆகிய எனது N2788141 இலக்கம் கொண்ட கடவுச்சீட்டு அண்மையில் யாழ்ப்பாணத்திற்கும் சுது மலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெ டுத்தவர்கள் தயவுசெய்து 0778164606 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தரவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி இராஜினிதேவி சிவலிங்கம்

(ஆசிரியர்- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

சிறந்த ஆசிரியர்களுக்கான ஜனாதிபதி விருதான பிரதீபா பிரபா விருதினைப் பெற்று கல்விச் சமூகத்திற்கு பெருமை சேர்த்த அவரின் கல்விச் சேவை மற்றும் இலக்கிய சேவைகள் என்றும் சிறப்புடன் மிளிர இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

(சி-9200)

பலாலி வீதி, உரும்பிராய்

வள்ளுவர் அக்கடமி, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்

செல்வி நா.ஜெயராணி

திருமதி ச.சத்தியமாலா

(சி-9195)

எமது பாடசாலையின் அதிபர் செல்வி. நா.ஜெயராணி அவர்களும் ஆசிரியர் திருமதி ச.சத்தியமாலா அவர்களும் சிறந்த அதிபர், ஆசிரியருக்கான விருது பெறுவதையிட்டு உளமார பாராட்டுகின்றோம்.

ஆசிரியர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்

மரண அறிவித்தல்

சின்னக்குட்டி செல்லத்துரை

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி செல்லத்துரை நேற்று (28.11.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சின்னக்குட்டி அன்னம்மாவின் புத்திரனும், செல்லப்பா நாகம்மாவின் மருமகனும், கமலாதேவி, ஸ்ரீகாந்தா, வசந்தாதேவி, ஸ்ரீமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கம்மா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் இராசம்மா, மாணிக்கமலர், இராசமலர், துரைசிங்கம் ஆகியோரின் சகோதரனும், சின்னத்துரை, ஜெயக்குமார், வசந்தி, அகல்யா ஆகியோரின் மாமனாரும், பிரசாத், பிரதீப், பிரதாப், அனோஜா, கீர்த்தனா, ஷோபனா, கௌதமி, பிரியங்கன், அஷ்வின், அஷ்மிரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

அளவெட்டி மேற்கு (8467) தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும்...

டுகிறது.

மற்றைய அமைச்சர் மலையக அரசியல் குடும்பத்தில் இருந்து வந்தவர். அவர் ஏற்கெனவே ஆளும் கட்சியின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து அதிருப்தி வெளியிட்டு வருகிறார்.

கொழும்பு மாவட்ட அமைச்சர் பொது எதிர்க்கட்சியில் இணையும் போது அவருடன் இணைந்து இவரும் பொது எதிர்க் கட்சியில் இணைவர் என கூறப்படுகிறது.

அரசாங்கத்தில் இருக்கும் அதிருப்தியாளர்கள் படிப்படியாக பொது எதிர்க்கட்சியில் இணைவார்கள் என பொது எதிர்க்கட்சியின் பல மிக்க பிரதிநிதி ஒருவர் கூறியுள்ளார். (எ-11)

அஸ்வர் எம்.பி...

றது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ்வரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் அமீர் அலி நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிகின்றன.

இந்நிலையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தொடர்ந்தும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (எ-11)

கூட்டமைப்பின்...

யில்லை. அங்குள்ள மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே வாக்களிப்பர்.

வடக்கில் மக்களை பிரதிநித்துவப்படுத்தும பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் இருக்கின்றனர். எனவே மக்களின் ஆதரவு நிச்சயம் எமக்கு கிடைக்கும்.

ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக எந்த விமர்சனத்தையும் நாம் முன்வைக்க முடியாது.

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கட்சியில் போட்டியிடும் மகிந்த ராஜபக்ஷ அமோக வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

மேலும் எதிரணியினரின் செயற்பாடுகள் மாறுப்பட்டவையாக இருக்கின்றன. உண்மையில் கூற வேண்டுமென்றால் அவர்கள் பகல் கனவு காண்கின்றனர் என்றார். (எ-11)

மகிந்தவை...

அவசியமானது எனவும் அவர் கூறினார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவியிலேயே அவர் இதனைக் கூறினார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்ய வேண்டியது மிகவும் அவசியமானது.

ஜே.வி.பி கட்சி கடந்த காலங்களிலும் இதற்காக பல்வேறு அர்ப்பணிப்புக்களை செய்துள்ளது.

அன்று சந்திரிகா பண்டாரநயாக்க நிறைவேற்று அதிகாரத்தை ரத்து செய்வதாக வாக்குறுதி அளித்து ஆட்சி பீடம் ஏறினார்.

எனினும் அதனை செய்யவில்லை. தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராபஜக்ஷவும் இவ்வாறான வாக்குறுதி அளித்து ஆட்சியை கைப்பற்றினார். எனினும் நிறைவேற்று அதிகாரம் ரத்து செய்யப்படவில்லை.

நபர்கள் தொடர்பில் நம்பிக்கை வைக்காது நாடாளுமன்ற முறைமையின் ஊடான அதிகாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே நாம் கற்றுக்கொண்ட பாடமாகும்.

எனவே ஜனாதிபதி தேர்தலை விடவும் எங்களுக்கு நாடாளுமன்ற தேர்தல் ஒன்றே அவசிப்படுகின்றது.

அரசியல் அமைப்பில் திருத்தங்களை செய்யும் அதிகாரம் மக்களுக்கே காணப்படுகின்றது.

இந்த ஜனாதிபதி தேர்தல் சட்ட விரோதமானது எனினும் தேர்தல் நடத்த முயற்சிக்கப்படுகின்றது.

இந்த ஜனாதிபதியை தோற்கடிக்க நாட்டின் சகல சக்திகளுடனும் ஒன்றிணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம் என கே.டி. லால் காந்த மேலும் கூறினார். (எ-11)

சின்னமின்றி...

ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பே ஜாதிக பெரமுண (எங்கள் தேசிய முன்னணி) என்ற கட்சியில் மைத்திரிபால தேர்தலில் போட்டியிடுகிறார்.

இந்தக்கட்சியின் சின்னம் தொலை பேசியாகும்.

எனினும் அந்தக்கட்சி தேர்தல்கள் ஆணையாளரிடம், புறாவை அல்லது தாமரையை சின்னமாக கோரியுள்ளது.

எனினும் இதற்கான முடிவு தேர்தல்கள் ஆணையாளர் நாடு திரும்பிய பின்னரே மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளரின் வெளிநாட்டுப் பயணம் தவிர்க்க முடியாத ஒன்று என்ற அடிப்படையிலேயே அவர் நேற்றுக் காலை புறப்பட்டு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, 30ஆம் திகதியன்று தமது சொந்த இடமான பொலநறுவையில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கிறார்.

எனினும் இதன்போது அவருக்கு சின்னம் ஒன்றை அறிமுகப்படுத்த முடியாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. (எ-11)

பொது...

இந்நிகழ்வை நடத்த விடாமல் தடுக்க பல்வேறு முயற்சிகள் நடைபெற்ற நிலைமையில், தற்போது விகாரமகாதேவி பூங்கா திறந்தவெளி அரங்கில் இந்நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சோபித தேரர் தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தில் இணைந்துள்ள கட்சிகள், ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான பிரிவு ஆகியவற்றின் பிரதிநிதிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்து இடுவார்கள்.

இந்நாட்டில் ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் நோக்கில் நடைபெறும் எதிரணியின் இந்த நிகழ்வை தடுத்திட பல்வேறு சக்திகள் இடையூறு செய்து வருகின்றன. இந்த இடையூறுகள் எங்களை நிறுத்திவிட முடியாது என்பதுடன் அவசியமானால் நடு வீதியில் அமர்ந்தும் இந்நிகழ்வை நடத்திட, பொது எதிரணி தயாராக இருக்கின்றது என்றார். (எ-11)

சொன்னதை...

அவரது காதலியை இரவு நேர களியாட்ட விடுதியொன்றில் வைத்து தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த மேர்வின் சில்வாவின் மகன், மாலக்க சில்வா விளக்கமறிய லில வைக்கப்பட்டிருந்ததுடன் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இது குறித்து மேர்வின் சில்வா மேலும் தெரிவிக்கையில்,

கடந்த செவ்வாய்கிழமை மகனுக்கு பிணை வழங்கவில்லை என்பதால், நான் மிகவும் மன வேதனையுடன் ஜனாதிபதிக்கு எனது வேதனையை தெரிவித்தேன்.

எப்போது மீண்டும் வழக்கு விசாரணைக்கு வருகிறது என்று கேட்டார். வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வருகிறது என்று நான் சொன்னேன்.

சரி மேர்வின் நீ வெள்ளிக்கிழமை நீதிமன்றத்திற்கு போ.. நான் பிணை வழங்க ஏற்பாடு செய்கிறேன் என்று ஜனாதிபதி கூறினார். ஜனாதிபதி கூறியது போல் மகனுக்கு பிணை கிடைத்து விட்டது.

இவற்றை நீங்கள் இணையத்தளங்களில் எழுத வேண்டாம். ஜனாதிபதி சரியோ தவறோ சொல்வதை செய்யும் தலைவர்.

ரணில், மங்கள போன்றவர்கள் இப்படி மக்களுக்கு உதவி செய்துள்ளனரா?. ரணில், மங்களவிடம் இப்படியான உதவியை கேட்டால், நாங்கள் நீதிமன்ற சுதந்திரத்தை மதிக்கின்றோம். சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்கின்றோம் என்று கூறுவார்கள்.

அவர்கள் அடிக்கும் பைலா போன்று சட்டத்தின் ஆட்சி இருந்தால், எனது மகனுக்கு எந்த நாளும் சிறையில்தான் இருக்க நேரிடும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் இருக்கும் பெறுமதியை இப்போது நீங்கள் புரிந்து கொண்டீர்களா? என மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

மகனுக்கு தற்போது பிணை கிடைத்து விட்டது, இனி நீங்கள் எதிரணிக்கு போவீர்களா என இணையத்தள ஊடகவியலாளர் அமைச்சர் மேர்வினிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்த மேர்வின், ஆளும் கட்சியில் இருந்து கொண்டு எதிர்க்கட்சிக்கு சிறந்த சேவையை ஆற்ற முடியும். இதனால், எதிரணிக்கு போகும் திட்டத்தை கைவிட்டு விட்டேன். அரசாங்கம் மாறினால், புதிய அரசாங்கத்துடன் எனக்கு இணக்கத்தை ஏற்படுத்தி கொடுங்கள் என கூறியுள்ளார். (எ-11)

நாட்டின்...

அமைப்புடன் அணிதிரளும் என குறிப்பிட்டுள்ளார்.

சமூக பொருளாதார பிரச்சினை சம்பந்தமாக பௌத்தர்களின் எழுச்சியானது நாட்டில் வரலாற்றில் ஏற்பட்டிருக்கிறது. இதனால், பௌத்த சமூகம் இந்த காரணத்தின் அடிப்படையில் முன்னோக்கி வருவதை காணமுடியும்.

பொதுபல சேனா போன்ற அமைப்புகள் தாம் விரும்பும் நபருக்கு ஆதரவை வழங்கும உரிமையுள்ளது. இதனால், அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்குவது அந்தளவுக்கு சிக்கலானதல்ல.

அதேவேளை ஜாதிக ஹெல உறுய அடுத்த சில தினங்களில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள உள்ளது.

குறிப்பாக நீதித்துறையின் சுதந்திரம் மற்றும் நாடாளுமன்றத்தின் சுதந்திரம் போன்ற விடயங்கள் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது எமது தேவை. அது பற்றி அடுத்த சில நாட்களில அறிய தருவோம் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

புலம்பெயர்...

மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்த சவாலாக இருந்தாலும் தான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னரும் அவருக்காக குரல் கொடுக்க போவதாகவும் சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தால், அவரை சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல போவதாக வெளிநாட்டில் உள்ள விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்ட புலம்பெயர் அமைப்பு தெரிவித்துள்ளது.

நான் வெற்றி பெற்ற பிறகு, மகிந்த ராஜபக்ஷ, அவரது குடும்பம், பாதுகாப்புச் செயலாளர், அல்லது பயங்கரவாத பிடியில் இருந்து நாட்டை மீட்ட முப்படையினர் உட்பட அனைவரையும் புலிகளுடன் சம்பந்தப்பட்ட புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பாதுகாப்பேன் என்பதை தெளிவாக கூறி உறுதியளிக்கின்றேன் என வும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் என்னை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தால் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவேன். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதன் மூலம் பொறுப்புக்கூறலை வெளிப்படுத்த முடியும்.

எனது கையில் மக்கள் ஆட்சியை ஒப்படைத்தால் நான் நிச்சயமாக பொறுப்புக் கூறலை வெளிப்படுத்துவேன். என அவர் கூறினார்.

இந்த ஊடக மாநாட்டில் கரு ஜெயசூரிய, ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர், ராஜித சேனாரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-11)

பொலிஸ் சார்ஜன்ட் விபத்தில் பலி

(கொழும்பு)

அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவின் [illegible] காப்பு உத்தியோகஸ்தராக கடமையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட் நேற்று மதியம் இடம் பெற்ற விபத்தில் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம் மதவாச்சி பிரதான வீதியின் வான்கடவல குளத்திற்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் சார்ஜன்ட் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, பின்னால் சென்ற தனியார் பஸ் அதில் மோதியுள்ளது.

கொல்லப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் 46 வயதானவர் எனவும் பொலிஸார் கூறினர். (எ-11)

டென்மார்க்கில் நேற்று மாவீரர்நாள் அனுஷ்டிப்பு

டென்மார்க்கில் மாவீரர் நாள் மிகவும் உணர்வு பூர்வமாக வழமைபோல் கேர்ணிங் மற்றும் கொல்பெக் ஆகிய இரு நகரங்களில் சிறப்பாக நடைபெற்றது.

இம்மாவீரர் நாள் நிகழ்வுகளில் பல நூற்றுக்கணக்கான மக்கள் எழுச்சியுடன் கலந்து கொண்டு, தாயக விடுதலைக்காகத் தமது இன்னுயிர்களை வித்தாக்கிய மாவீரர்களை வணங்கிச் சென்றனர்.

மாவீரர்நாள் நிகழ்வானது பிராந்தியப் பொறுப்பாளரினால் பொதுச்சுடரேற்றலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து தேசியக்கொடியினை டென்மார்க் கிளைப்பொறுப்பாளர் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரினை மாவீரர் வீரவேங்கை வினிதா அவர்களின் சகோதரி ஏற்றிவைத்தார். தொடர் நிகழ்வுகளாக மலர்வணக்கம் சுடர் வணக்கம் அகவணக்கம் நடைபெற்றது.

தமிழீழக்கனவுடன் தமிழ் மக்களின் விடுதலைக்காய் தம் உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களுக்கு அவர்களின் உறவுகளால் விளக்கேற்றும் பொழுது மாவீரர்துயிலுமில்லப் பாடல் ஒலிபரப்பப்பட்டது. அதன் பின்பு பொதுமக்களால் மாவீரர்களுக்கு விளக கேற்றி வணக்கம் செலுத்தப்பட்டது.

இவைதவிர மாவீரர் கானங்கள், சிறப்புரை, எழுச்சி நடனங்கள், நாடகங்கள் போன்ற நிகழ்வுகள் இம்மாவீரர்நாள் நிக்ழ்வுக்கு மேலும் எழுச்சியை ஊட்டின. (எ-11)

மீனவர்களை விடுவிக்க கோரிக்கை

மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் மூவரையும் விடுதலை செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஐந்து இந்தியர்கள் உள்ளிட்ட எட்டு பேருக்கு இலங்கை நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது. இதில் ஐந்து இந்திய மீனவர்கள் அண்மையில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

எஞ்சியுள்ள மூன்று இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இரு தரப்புக்களுக்கும் ஒரே விதமாக நியாயம் வழங்கப்பட வேண்டியது அவசியமானது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார். (எ-11)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. (யாழில் 1976 முதல்). 136 நாடுகளில் 1040 கிளைகள். ஆசிரியர்கள் : யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் & ஆங்கில விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO CDs & BOOKS இலவசமாக பாவிக்கலாம். யாரும் படிக்கலாம். ஓரிரு மாதங்களும் படிக்கலாம். LETTRE & PHOTOCOPIES இலவசம். பதிவுசெய்க 29,30.11

குறிப்பு: வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு உத்தியோகபூர்வ நிறுவனம் AF மட்டுமே. பொய் விளம்பரங்களை நம்பாதீர்கள்.

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

கச்சேரி → புகையிரதகடவை → AF or ஆரியகுளத்திலிருந்து ஸ்ரான்லிறோட் → AF

வீடு வாடகைக்கு தேவை

யாழ்.மாநகர சபைக்கு அண்மையில் சிறிய குடும்பம் வசிக்கக் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு:-
0778089850

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org